Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு 11-10-2006 Issued 11-10-2006

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் ... சென்னை-600 008 ... எழும்பூர்
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஜூலை 24, 2006—தொகுதி 4—எண் 2

Monday the 24th July, 2006—Volume 4—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V2ıı, 31'P06.
P06.4.2
227 379

[Price Rs. 3.00

714
29.3.2007

24–7–2006

உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்புகள்—** | |
| *முன்னாள் உறுப்பினர்கள் மறைவு* | 67 - 68 |
| **2. இரங்கல் தீர்மானங்கள்—** | 69 - 70 |
| *(அ) மும்பை புறநகர் மின்சார இரயில்களில் 11–7–2006 அன்று தொடர் குண்டு வெடிப்புகளால் ஏற்பட்ட உயிரிழப்புகள்* | 69 |
| *(ஆ) இந்தோனேசியாவில் 17–7–2006 அன்று சுனாமி பேரலையின் தாக்குதலால் ஏற்பட்ட உயிரிழப்புகள்* | 70 |
| **3. அறிவிப்புகள்—** | 70 - 71 |
| *(அ) வினாக்கள்–விடைகள் நேரம் இடம் பெறாததும், விடைகளை விரைந்து அனுப்பிட அமைச்சர்கள் அறிவுரைகள் வழங்குதலும்* | 70 - 71 |
| *(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்* | 71 |
| **4. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்—** | 72 - 187 |
| **திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்* | 72-81, 83-87, 89-90 |
| **திரு. வ. முல்லைவேந்தன்* | 90-104 |
| **திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்* | 105-113, 115-121 |

| | பக்கங்கள் |
|---|---|
| **4. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்**–தொடர்ச்சி | |
| திரு. கி. ஆறுமுகம் | 121 - 135 |
| *செல்வி கே. பாலபாரதி | 135 - 143 |
| திரு. தி. இராமசாமி | 144 - 154 |
| *திரு. வீர. இளவரசன் | 155 - 162 |
| திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் | 162 - 175 |
| *திரு. எஸ்.வி. சேகர் | 176 - 180 |
| திரு. ம. போளூர் வரதன் | 180 - 187 |
| **5. சட்டமன்ற வளாகத்திற்குள் கொசுத் தொல்லை** | 143 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 188 - 189 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 8, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஜூலை 24, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி."

உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவதுபோல ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கற் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கே. ரமணி அவர்கள் 30–5–2006 அன்றும், திரு. அ. தங்கம் அவர்கள் 30–5–2006 அன்றும், திரு. ஜி.ஆனந்த கிருஷ்ணா அவர்கள் 3–6–2006 அன்றும், திரு. சி. சிரஞ்சீவுலு நாயுடு அவர்கள் 3–6–2006 அன்றும், திரு. டி.எஸ். ராமசாமி பிள்ளை அவர்கள் 15–6–2006 அன்றும் மற்றும் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் 24–6–2006 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ரமணி அவர்கள் கோயம்புத்தூர் கிழக்கு தொகுதியிலிருந்து நான்கு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977 முதல் 1980 வரை, 1980 முதல் 1984 வரை, 1984 முதல் 1988 வரை,

மற்றும் 1989 முதல் 1991 வரை பாராட்டத்தக்க வகையில் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள். மேலும், 1967 முதல் 1970 வரை கோயம்புத்தூர் தொகுதியிலிருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. அ. தங்கம் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1989 முதல் 1991 வரை திறம்படப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா அவர்கள் பூவிருந்தவல்லி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1985 முதல் 1988 வரை நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

திரு. சி. சிரஞ்சீவுலு நாயுடு அவர்கள் திருத்தணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1962 முதல் 1967 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. டி.எஸ். ராமசாமி பிள்ளை அவர்கள் கன்னியாகுமரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957 முதல் 1962 வரை சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் 1977 முதல் 1980 வரை, 1991 முதல் 1996 வரை மற்றும் 1996 முதல் 2001 வரை மூன்று முறை முதுகுளத்தூர் தொகுதியிலிருந்தும், 2001 முதல் 2006 வரை கடலாடி தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகச் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள். மேலும், பதினோராவது சட்டமன்றப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராகவும் 23–5–1996 முதல் 14–5–2001 வரை சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்களது குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் [illegible] நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்[illegible]

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227379
சென்னை-600 008



## 2. இரங்கல் தீர்மானங்கள்

### (அ) மும்பை புறநகர் மின்சார இரயில்களில் 11-7-2006 அன்று தொடர் குண்டு வெடிப்புகளால் ஏற்பட்ட உயிரிழப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் தீர்மானங்கள். மும்பை புறநகர் மின்சார இரயில்களில் தொடர் குண்டு வெடிப்புகளால் ஏற்பட்ட மனித உயிரிழப்புகள் குறித்த இரங்கல் தீர்மானம்:

"இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் வகையில், மனித நேயமற்ற சில தீய சக்திகளின் செயலால் கடந்த 11–7–2006 அன்று மும்பை மாநகரத்தின் புறநகர்ப் பகுதிகளில் மின்சார இரயில் வண்டிகளில் சங்கிலித் தொடராக சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் வெடித்த சம்பவத்தில் 190–க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்தது மட்டுமல்லாமல், 700–க்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றுள்ளனர் என்ற துயரச் செய்தியறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் பலவற்றையும் அதிர்ச்சியில் உறையச் செய்த இக்கொடிய செயலுக்கு இப்பேரவை தனது கடும் கண்டனத்தைத் தெரிவிப்பதுடன், அவற்றிற்குக் காரணமாக விளங்கக்கூடிய அனைத்து நாசகாரச் சக்திகளைக் கண்டறிந்து, அவற்றை வேருடன் அழித்தொழிக்க வேண்டுமென மைய, மாநில அரசுகளை இப்பேரவை கேட்டுக்கொள்கிறது. இத்தகைய தருணங்களில், நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்தும் வகையில் மக்கள் அனைவரும் தீய சக்திகளையொழிக்க ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டுமென இப்பேரவை விழைகிறது.

இக்கொடிய வெடிகுண்டுச் சம்பவத்தில் தங்களது இன்னுயிரை இழந்த அப்பாவி மக்களுக்கும், அவர் தம் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும், படுகாயமுற்றுத் தவிப்போருக்கு ஆறுதலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

[2006 ஜூலை 24

### (ஆ) இந்தோனேசியாவில் 17-7-2006 அன்று சுனாமி பேரலையின் தாக்குதலால் ஏற்பட்ட உயிரிழப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, இந்தோனேசியாவில் சுனாமி பேரலையின் தாக்குதலால் ஏற்பட்ட மனித உயிரிழப்புகள் குறித்த இரங்கல் தீர்மானம்:

"17-7-2006 அன்று இந்தோனேசியாவில், குறிப்பாக ஜாவா தீவில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட 'சுனாமி' என்றழைக்கப்படும் ஆழிப் பேரலையின் கடும் தாக்குதலால் பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் இன்னுயிரை இழந்தும், எண்ணற்றோர் காயமடைந்தும், இக்கொடிய இயற்கைச் சீற்றத்தின் காரணமாக மேலும் பல்லாயிரக்கணக்கானோர் தங்கள் உறைவிடங்களையும், உடைமைகளையும் இழந்து பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்ற செய்தியறிந்து இப்பேரவை சொல்லொணாத் துயரமுறுகிறது. இச்சம்பவத்தில் உயிரிழந்தோருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அஞ்சலியையும் தெரிவிப்பதோடு, அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் இப்பேரவை ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறது."

இவ்விரண்டு இரங்கல் தீர்மானங்களையும் நிறைவேற்றும் முகத்தானும், இத்துயரச் சம்பவங்களில் மறைந்தோருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் இரண்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பெற்றன.)

## 3. அறிவிப்புகள்

### (அ) வினாக்கள்-விடைகள் நேரம் இடம் பெறாததும், விடைகளை விரைந்து அனுப்பிட அமைச்சர்கள் அறிவுரைகள் வழங்குதலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு பேரவை உறுப்பினர்களின் வினாக்களுக்கான அறிவிப்புகள் முறையாக அனுமதிக்கப்பட்டு இச்செயலகத்தின்மூலம் சம்பந்தப்பட்ட



2006 ஜூலை 24] [பேரவைத் தலைவர்]

துறைகளுக்கு, விடைகள் பெறும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. வினாக்களுக்கான விடைகள் துறைகளிலிருந்து போதிய அளவு பெறும் வரை, ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கு ஒதுக்கப்பெற வேண்டும் எனும் சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, பேரவையின் அனுமதியுடன் தளர்த்தி, சில நாட்களுக்கு வினாக்கள்-விடைகள் நேரம் இடம் பெறாது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வினாக்கள்-விடைகள் நேரத்தை பேரவைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் விரைவில் இடம் பெறச் செய்யும் வகையில், வினாக்களுக்கான விடைகளை விரைந்து அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு துறைச் செயலாளர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

### (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

1. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்
2. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்
3. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
4. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்
5. மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி
6. மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்

முற்பகல் 9–40

## 4. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயர்ராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**திரு. கே. பாண்டுரங்கன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) வேறு எந்த subject-ஐயும் எடுக்க முடியாது. அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லாமல் பேசுகிறீர்கள், அது record ஆகாது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சி வி.-ஜெயராமன்.

***திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகழ்பெற்ற பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியிலே மூன்று முறை போட்டியிடுவதற்கான வாய்ப்பினையும், 2 முறை வெற்றி பெறுவதற்கான நல்ல சூழ்நிலையையும் உருவாக்கிக் கொடுத்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர் எங்களுடைய இதய தெய்வம், 6 கோடி தமிழர்களினுடைய நம்பிக்கை நட்சத்திரம், தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனிதப் பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தினுடைய கடைசி உறுப்பினராக 234-வது இருக்கையை நீங்கள் எனக்கு ஒதுக்கினாலும், முதன்முறையாக பட்ஜெட் உரையின்மீது பேசுவதற்கான நல்ல வாய்ப்பினை, தமிழகத்தினுடைய பிரதான எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர் என்கின்ற முறையிலே எனக்கு வாரி வழங்கிய வள்ளல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசியல் வாரிசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

கடந்த கால அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய 5 ஆண்டு கால சாதனைகளாக வரலாற்றில்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்க வகையில், யாராலும் பிடிக்க முடியாது என்று சவாலாக இருந்த சந்தன மரக் கடத்தல் வீரப்பன், ஆசியாவினுடைய மிகப் பெரிய கிரிமினல் என்று அனைவராலும் மதிக்கப்பட்டவன், 2 ஆயிரம் யானைகளைச் சுட்டுக் கொன்றவன், நூற்றுக்கும் மேற்பட்ட காவல் துறை, வனத் துறை அதிகாரிகளைச் சுட்டுக் கொன்றவன், காட்டிலே இருக்கின்ற சந்தன மரங்களையெல்லாம் வெட்டி நாடு கடத்தியவன், ஒரு சிலரால் மட்டும் எப்பொழுது வேண்டுமென்றாலும் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடிய தூரத்திலே இருந்த அந்த சந்தன மரக் கடத்தல் வீரப்பனை, இந்தியாவிற்கே பெருமை சேர்க்கத்தக்க வகையிலே பிடித்தே தீருவேன் என்று சபதம் எடுத்து, அதற்கான தக்க நடைமுறைகளை எல்லாம் கையாண்டு, காவல் துறைக்கு முழு அதிகாரங்களை வழங்கி, ஆக்கமும், ஊக்கமும் தந்து, உலக நாடுகளே பாராட்டத்தக்க வகையில் சுட்டுக் கொன்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தவர் எங்களுடைய தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பதிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 1991–1996 ஆட்சியும், 2001–2006 ஆட்சியும் இந்தியாவிற்கே வழிகாட்டுகிற ஆட்சியாக வந்துகொண்டிருந்தது.

அதேபோன்று, கடந்த 5 ஆண்டு கால ஆட்சியினுடைய சாதனையாக சென்னை மாநகரம் வரலாறு காணாத வறட்சியைச் சந்தித்தபொழுது, சென்னை மாநகரத்தினுடைய மக்களின் தாகத்தைத் தீர்ப்பதற்கான வீராணம் திட்டத்தை நிறைவேற்ற முடியாது என்று சொன்ன வரலாற்றையெல்லாம் மாற்றி, வீராணம் திட்டம் நிறைவேற்றப்படுமானால், அதிலே ஏழை, எளிய மக்களுடைய கண்ணீர்தான் வரும் என்று சொன்ன கதையை மாற்றி, வீராணம் திட்டத்தை நிறைவேற்றியே காட்டுவேன் என்று சொல்லி, புதிய வீராணம் திட்டத்தை நிறைவேற்றி, இந்த அவையிலே இருக்கிற 234 உறுப்பினர்களும் பயன்படுத்துகிற தண்ணீரும், சென்னை மாநகர மக்களுடைய தாகத்தைத் தீர்க்கிற தண்ணீரும் இன்றைக்குப் புதிய வீராணம் திட்டம் தண்ணீர் என்கின்ற சாதனையைப் படைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றையெல்லாம் கடந்த கால ஆட்சியினுடைய சாதனைகளாகச் சொல்கிறோம்.

சட்டம்-ஒழுங்கு என்றால், கடந்த கால ஆட்சியிலே காவல் துறை முழுமையாகத் தன்னுடைய செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2006 ஜூலை 24

அனுமதிக்கப்பட்டது. ஆனால் இந்த 2–1/2 மாத கால ஆட்சியிலே காவல் துறையினுடைய உயர்மட்ட அதிகாரிகள் முதல் இளநிலை சப்–இன்ஸ்பெக்டர்கள் வரை இடத்திற்கு இடம் தூக்கிப் பந்தாடப்பட்டதனுடைய விளைவாக 2–1/2 மாத கால ஆட்சியிலே எங்கு பார்த்தாலும் பத்திரிகையிலே இன்றைக்கு தினசரி காலையிலே செய்திகளை எடுத்துப் பார்த்தால், குத்து, வெட்டு, கொலை, கற்பழிப்பு, கொள்ளை—இதுதான் அனுதினமும் பத்திரிகையிலே தொடர்ந்து வந்துகொண்டிருக்கிற செய்திகளாக இருந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையையெல்லாம் மாற்றத்தக்க வகையில் தமிழகத்தினுடைய காவல் துறையை எதற்கெடுத்தாலும் மாறுதல் செய்வது என்பது போன்ற சூழ்நிலைகளையெல்லாம் கைவிட வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் சார்பாக பிரதான எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர் என்கின்ற வகையிலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 9–45*

அதேபோன்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்வதாக திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் வாக்குறுதியில் சொன்னது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் சுற்றுப்பயணத்திலே குறிப்பிட்டார்கள். இப்பொழுது தேர்தல் முடிந்து அரசாட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றியிருக்கிறது. கைப்பற்றியதற்குப் பிறகு, சொன்னபடி வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக ஆயிரக்கணக்கான மக்களுக்கு முன்னால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோப்பிலே கையெழுத்திட்டார்கள். கையெழுத்திட்டதன்படி விவசாயிகளுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. நில வள வங்கியிலேயிருந்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலேயிருந்தெல்லாம் நீங்கள் பெற்ற கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்று ஒரு தபால் அனுப்பப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சருடைய படத்தோடு கூடிய ஒரு தபால். ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில வள வங்கிளிலே கடனைப் பெறுவதற்காக அடகு வைத்த பத்திரங்கள் இன்று வரையிலே விவசாயிகளுக்குத் திரும்பக் கிடைக்கவில்லை.

அதேபோன்று, ஐம்பதாயிரத்திற்கும் மேலான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே கடன் பெற்ற விவசாயிகளுக்கு பட்டா பாஸ் புத்தகங்களிலே குறிப்பிட்ட அடமானங்கள் இன்று வரையிலே விலக்கப்படவில்லை. ஒரு கடிதம் சென்றதோடு நிற்கிறது.



2006 ஜூலை 24] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

அதேபோல, நகைக் கடன், கிட்டத்தட்ட 700 கோடி ரூபாய்க்கு மேலாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும், மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் விவசாயிகளுக்காக பயிர்க் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நகைகள் எல்லாம் விவசாயிகளுக்கு, தள்ளுபடி செய்யப்பட்ட கடனுக்கு உண்டான நகைகள் இன்று வரை திருப்பிக் கொடுக்கப்படாமல் உள்ளன.

அதேபோன்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பெற்ற கடனை அடைப்பதற்காக 435 கோடி ரூபாயை NABARD வங்கிக்கு நம்முடைய மாநில அரசு தருவதாக பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் ஆயிரம் கோடி ரூபாய் நிதியை விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்குவதற்காக ஒதுக்கியிருக்கிறார்களா? அல்லது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே, மத்திய கூட்டுறவு வங்கிகளிலே பெற்றிருக்கிற, பொது மக்களிடம் பெற்றிருக்கிற, deposit பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்காக ஒதுக்கியிருக்கிறார்களா என்பதுதான் ஒரு முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிளிலே சென்று கடனைக் கேட்டால்—நீங்கள் பத்திரிகையிலே அறிவிப்புகள் தருகிறீர்கள். அமைச்சர்கள்—கோவையிலேகூட மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு review meeting நடத்தினார்கள். (*குறுக்கீடு*)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களையும் அழைத்து வைத்துப் பேசிய கோவையிலே நடைபெற்ற கூட்டங்களில் அவற்றிற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். கூடுமான வரையில் அவர் சொன்னது பூராவும் நடவடிக்கையில் இருக்கிறது, அவை அனைத்திற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுவது என்னவென்று சொன்னால், நீண்ட காலத்திற்குப் பிறகு நான்கைந்தாண்டு காலம் தமிழகத்தில் சரியாக மழை பெய்யாமல் போனதற்குப் பிறகு, இன்றைக்கு மாநிலத்திலே அனைத்து மாவட்டங்களிலும் குளம், குட்டைகள் எல்லாம் நிரம்பி

வழிந்துகொண்டிருக்கின்றன. மேட்டூர் அணை, வரலாறு காணாமல் ஓராண்டு காலமாக நிரம்பி நின்று, குறுவைக்கு உரிய காலத்தில் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. காவிரி டெல்டா பாசன விவசாயிகளுக்கு ஒட்டுமொத்தமாக பயிர்க் கடன் வழங்குவதற்கு, இன்றைக்குத் தேவை என்று எடுத்துக்கொண்டால், ஆயிரம் கோடி ரூபாய் தேவை. மத்திய கூட்டுறவு வங்கிகள்மூலமாக, கூட்டுறவு இயக்கங்கள்மூலமாக நாம் *100* கோடி ரூபாய் அளவுக்குக் கடன் வழங்க வேண்டும். ஆனால், இன்றைக்கு வரையிலே ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம், அதாவது தஞ்சாவூர், கும்பகோணம் ஆகிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலே வழங்கியிருக்கிற நேரடி பயிர்க் கடன் ஐந்து கோடி ரூபாய் அளவுக்கு மட்டும்தான். நகைக் கடனாக வழங்கியிருப்பது ரூபாய் ஆறேழு கோடிக்கு வழங்கியிருக்கிறார்கள். இது நேற்றைக்கு வரைக்கும்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார், யார் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்களோ, அவர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டுக் கொண்டு வருகிறது. யாருக்கு வழங்கப்படவில்லை என்று முறையாகத் தெரிவித்தால், அவர்களுக்கு நிச்சயமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விவசாயிகள் கடும் துயரத்தில் இருக்கிறார்கள். விவசாயிகளுடைய வேதனை சொல்லி மாளாது. உரம் வாங்குவதாக இருந்தாலும், பூச்சிக்கொல்லி மருந்து வாங்குவதாக இருந்தாலும், விதை நெல் வாங்குவதாக இருந்தாலும், முதலில் தேவை பணம். பணத்தை வழங்குவதற்கு கூட்டுறவு வங்கிகளிலே—இன்றைக்கு வரை நீங்கள்—நேற்றைக்கு நீங்கள் ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே, மத்திய கூட்டுறவு வங்கிகளிலே இருக்கிற பணத்திலே இருந்து NABARD வங்கியின்மூலம் நாம் பெற்றுக் கொடுத்திருக்கிற கடன் *1,500* கோடி ரூபாய்தான். மீதி *4,000* கோடி அளவுக்கு உண்டான தொகை பொது மக்களிடமிருந்து deposit—ஆகப் பெறப்பட்ட தொகை. இன்றைக்கு deposit—ஐ வைத்தவர்கள் deposit முதிர்ச்சி அடைந்துவிட்ட நிலையில் deposit—ஐத் திரும்பப் பெறுவதற்காக...



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே அவற்றை எல்லாம் அதில் செயலாளர்களாக இருந்தவர்கள் எடுத்துப் பயன்படுத்திக்கொண்டு, அப்படிப்பட்ட வங்கிகளை அவர்களே நிர்வகித்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்ததற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு உரிய நேரம் இருக்கிறது, வாய்ப்பு இருக்கிறது. கடந்த காலத்தில் தலைவர்களாக யாரும் இல்லை. தனி அதிகாரிகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்வதற்கு அமைச்சர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதனால் எழுந்து சொல்கிறார்கள்.

முற்பகல் *9—50*

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** கடந்த காலத்தில் தனி அதிகாரிகள்தான் இருந்தார்கள். தலைவர்களாக யாரும் இல்லை. தலைவர்களாக இருந்தது கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில். அப்போது தலைவர்களாக இருந்தவர்கள்தான் சாப்பிட்டுவிட்டார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தனி அதிகாரிகள்தான் கூட்டுறவு வங்கிகளை நிர்வகித்தார்கள். நான் உங்கள்மீது குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என்பதற்காகவோ, அரசியல் பேச வேண்டும் என்பதற்காகவோ சொல்லவில்லை. சற்றேறக்குறைய *3,500* கோடி ரூபாய் அளவிற்கு mature—ஆன deposit—கள், *1,000, 1,500* கோடி ரூபாய் அளவிற்குக் கிராமப்புறங்களிலே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே deposit செய்யப்பட்ட பணம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய நிலையிலே உள்ளது என்பதை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த முதிர்ச்சியடைந்த deposit—கள் எல்லாம் விவசாயிகளுக்குப் பயிர்க் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது, விவசாயிகளுக்கு நகைக் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கோவை, ஈரோடு, நாமக்கல், சேலம் போன்ற மாவட்டங்களிலே சுய சார்புள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பொது மக்களிடமிருந்து பல deposit—களைப் பெற்று விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் கொடுத்திருந்தது. இப்போது அந்தப்

பயிர்க் கட்னை ரத்துச் செய்ததை ஒட்டுமொத்தமாக நாம் அனைவரும் வரவேற்றாலும், நாங்கள் ஆட்சிக்கு வந்திருந்தாலும் அதை ரத்துச் செய்திருப்போம். ஆனால் இன்றைக்கு, (சிரிப்பு) இதில் சிரிப்பதற்கு ஒன்றுமே இல்லை. இன்றைய சூழ்நிலையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அமரட்டும். தயவுசெய்து அமரட்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாங்கள் கேட்பது, deposit–ஐ பொது மக்களுக்குக் கொடுப்பதற்கு, நீங்கள் கொடுத்திருக்கிற 1,000 கோடி ரூபாய் பயன்படுத்தப்படுமா?... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். இங்கே குறிப்பிட்டுச் சொல்வதென்பது, கடன் தள்ளுபடியைப் பற்றி அவர் சொல்கிறார், நாங்கள் இருந்தாலும் செய்திருப்போம் என்று சொல்கிறார்கள். இதற்கு முன்னால் அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலேதான் 5 ஆண்டு காலத்தில் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை, அநேகமாக சட்டமன்றக் கூட்டத்தொடரில் தினசரி வைத்தவன் நான். அவரிடத்திலே நேரடியாகக் கேட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலேயே சொன்ன செய்தி என்னவென்றால், வட்டித் தள்ளுபடியைச் செய்து விட்டு, எனக்கு எல்லாக் கூட்டுறவுக் கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது, நிதி நிலைமைதான் இடம் அளிக்கவில்லை, இல்லையென்றால் நான் தள்ளுபடி செய்வேன் என்று சொன்னார். ஆனால், இன்றைக்கு முதலமைச்சராக வந்திருப்பவருக்கு அந்த நிதிநிலை இடமளித்து, 7 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் அந்தத் துறையை நடத்தியவர் என்ற காரணத்தினாலே இந்த விஷயத்தை அவர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வார் என்றே நம்புகிறேன். ஆகவே, உங்கள் ஆட்சிக் காலத்தில் இந்த விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்வதற்குக் கடைசி வரையிலும் எந்த முயற்சியுமே எடுக்கவில்லை என்பதுதான் உண்மை.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...





**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். விவசாயிகள் சொல்ல முடியாத துயரத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்று விவசாயிகள் வயிற்றில் முதலமைச்சர் அவர்களாலே பால் வார்க்கப்பட்டு, எல்லா விவசாயிகளும் மனமகிழ்ச்சியோடு கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். திரு. மணி, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமன். (குறுக்கீடு) திரு. ஜெயராமன், பேசுங்கள். (குறுக்கீடு) எல்லோரும் பேசி முடித்த பிறகு நீங்கள் சொல்லலாம், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி, உட்காருங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உட்காருங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் இன்னும் சில காலத்திற்கு ஆளும் கட்சிக்கு வக்காலத்து வாங்குவார்கள். நாங்கள் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சிவபுண்ணியம் அவர்கள் 1996–லிருந்து 2001 வரை இந்த மாமன்றத்திலே உறுப்பினராக இருந்தவர்தான். அப்போது இருந்த இதே திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு ரூபாயைக்கூட வட்டித் தள்ளுபடி செய்யவில்லை என்பதும் அவருக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு வந்த அம்மாவினுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் முதன்முறையாக அம்மா அவர்கள் கையெழுத்துப் போட்டது 310 கோடி

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2006 ஜூலை 24

ரூபாய்க்கான வட்டித் தள்ளுபடிதான். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இதையெல்லாம் அரசியல் வாதமாக்குவதற்காகச் சொல்லவில்லை. நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், பொது மக்களுக்குரிய deposit, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், ஆடு மேய்த்து, மாடு மேய்த்து, கோழி மேய்த்து, பல்வேறு வகையிலும் சேமித்த பணத்தைக் கூட்டுறவு வங்கிகளிலே வைப்பு நிதியாகப் போட்டு வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு fixed deposit–ஆகப் போட்டு வைத்திருக்கிற அந்தத் தொகையை எல்லாம் அவர்களுடைய திருமணத்திற்காக, அல்லது வீடு மராமத்திற்காக, அதாவது அவர்களுடைய சொந்தத் தேவைக்காக, தேவை என்று எடுக்கச் செல்கிறபோது அந்த deposit–களை நீங்கள் எப்போது கொடுப்பீர்கள்? எந்தக் காலவரையறைக்குள் திருப்பிக் கொடுப்பீர்கள் என்பதோடு இந்த வாதத்தை நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்குப் பயிர்க் கடன் வழங்குவது என்பது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள். 15 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை, நான் பேசவே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 நிமிடங்கள் ஆகப்போகிறது. 13 பேர் பேச வேண்டியிருகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9–55

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள், ஆடு மேய்த்து, கோழி மேய்த்து deposit செய்த பணங்கள் எல்லாம் திருப்பித் தரப்படுமா என்று ஒரு கேள்வி கேட்கிறார். இந்த ஆட்சியிலே ஆடு மேய்த்தவர்கள், கோழி மேய்த்தவர்களுக்கு மட்டுமல்ல, யாராக இருந்தாலும் கூட்டுறவு வங்கிகளிலே deposit செய்திருந்தால், அவர்கள் கேட்கின்ற நேரத்திலே அந்தப் பணம் நிச்சயம் உடனடியாகத் திருப்பித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. ஜெயராமன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.



2006 ஜூலை 24]

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுடைய ஊழியர்களுக்குச் சம்பளம் கிடைக்கவில்லை. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே கடன் வழங்கப்படுவது கிடையாது. இவையெல்லாவற்றுக்கும் மேலாக, அடுத்ததாக நம்முடைய விவசாயிகளுக்கு நகையை இன்னும் திருப்பிக் கொடுக்கவில்லை.

இப்போது இரண்டு ரூபாய்க்கு நியாய விலைக் கடைகளிலே அரிசி போடுகிறார்கள். நல்ல திட்டம், வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், போடுகிற அரிசி தரமான அரிசியாகப் போடப்படும் என்று உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே சொன்னீர்கள். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இரண்டு ரூபாய்க்குப் போடப்படுகிற இந்த அரிசி மக்கள் உண்ணுகிற தரத்திலே இருக்கிறதா என்பதை மாண்புமிகு முதலமைச்சருடைய பார்வைக்கு நான் அனுப்பி வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** அங்கே ஏற்கெனவே இருந்த அரிசியை எடுத்து யாராவது கொடுத்திருந்தால், அதை இங்கே கொண்டு வந்து பாக்கெட் போட்டுக் காட்டக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) புதியதாக நாங்கள் கொடுத்த அரிசி, சுத்தமான அரிசி, அதை அவரி ..த்திலேயே சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவரே பார்த்திருக்கிறார். அன்றையதினம் கோயம்புத்தூரிலே இந்தப் பிரச்சினை வந்து, சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய 28 ஆயிரம் நியாய விலைக் கடைகளிலும் வழங்கப்படுகிற அரிசி, நேற்றைக்குத்தான் இந்த அரிசியை கோவையிலே ஒரு நியாய விலைக் கடையிலேயிருந்து எடுத்திருக்கிறோம். இந்த அரிசி குறித்து... (குறுக்கீடு)

(ஒரு சிறிய அரிசிப் பொட்டலம் பேரவைத் தலைவரிடம் அளிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஜூன் மாதம் மூன்றாம் தேதி தொடங்கப்பட்டது. அதற்கு முன்னால் பழைய அரசாங்கம் ஏதாவது மோசமான அரிசி, குறிப்பாக, புழுத்த அரிசி ஏதாவது வாங்கியிருக்குமென்று சொன்னால், அவற்றையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு, மூன்றாம் தேதியிலிருந்து அரிசி கொடுக்கப்பட வேண்டுமென்று அரசு அறிவுறுத்தியிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கூட்டுறவு இணைப் பதிவாளர்மூலமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பழைய அரிசியிருந்தால் அதையெல்லாம் எடுத்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

அதிலே இரண்டு வகையான அரிசிகள் வருகின்றன. ஒன்று, ஆந்திராவிலிருந்து ஒரு வகை அரிசி வருகிறது. இன்னொன்று, சட்டீஸ்கர் மாநிலத்திலிருந்து ஒரு வகை அரிசி வருகிறது. ஆக, இரண்டு அரிசிகளும் தரமான அரிசிகள்தான். இரண்டு அரிசிகளும் சுவையான அரிசிகள்தான். ஆனால், இந்த இரண்டு அரிசிகளையும் கொடுக்கிறபோது, சில மாவட்டங்களுக்கு ஆந்திரா அரிசி போகிறது. சில இடங்களுக்கு இந்த சட்டீஸ்கர் அரிசி போகிறது.

நாம் மத்திய அரசாங்கத்திலிருந்து பெறுகிற அரிசியினுடைய விலையும் ஒன்றுதான். எனவே, இந்த அரிசி போகிறபோது சில அரிசிகள், ஆந்திராவினுடைய அரிசியைப் பார்க்கிறபோது வெண்மையாகத் தெரியும். சட்டீஸ்கர் அரிசியைப் பார்க்கிறபோது கொஞ்சம் மஞ்சளாகத் தெரியும். அவ்வளவுதான் அரிசியினுடைய வித்தியாசம். ஆனால், தரம் ஒன்றுதான். புதிய அரிசிதான். ஆக, பணமும், விலையும் ஒன்றுதான். இப்படித்தான் இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ஒவ்வொரு மாவட்டத்திற்கும்.

ஆட்சிக்கு வந்த 67 நாட்களிலே 27 மாவட்டங்களுக்கு நேரடியாக நானே ஒவ்வொரு கடைக்கும் சென்று ஆய்வு செய்திருக்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கும் தெரியும். அந்த ஆய்விலே அவரும் கலந்துகொண்டு பாராட்டியிருக்கிறார். நான் பத்திரிகையினுடைய செய்தியை வைத்திருக்கிறேன். நல்ல அரிசி போடுகிறீர்கள், சில இடங்களிலே அப்படித் தவறு இருக்கிறது என்று சொன்னார்கள். அதைக்கூட நான் நேரடியாகச் சோதனை செய்கிறபோது, இவர்கள் ஆட்சியிலே யார், யார் எல்லாம் அன்றைக்கு அவர்களுடைய சார்புள்ள கட்சியில் உள்ளவர்கள் அந்த விற்பனை நிலையங்களை வைத்திருக்கிறார்களோ, அவர்கள் இந்த அரசாங்கம் கெட்ட பெயர் வாங்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தவறான அரிசி என்று இன்றைக்கு அவர்கள் பொய் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.



இங்கே பத்திரிகை நண்பர்கள் இருக்கிறார்கள். இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான் வந்திருக்கிறேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அதிலே கலந்துகொண்டிருக்கிறார்கள். சொல்கிற குற்றச்சாட்டை நேரடியாகச் சொல்லுங்கள், உடனடியாகக் களைகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அப்படிப் பழைய அரிசி என்று சொன்னார் என்று சொன்னால், அவர்களுடைய ஆட்சியிலே வாங்கப்பட்டிருக்கிற பழைய அரிசியைத்தான் இங்கே கொண்டு வந்து காட்ட முடியுமேயொழிய, கலைஞருடைய ஆட்சியிலே கொண்டு வந்திருக்கிற அரிசி புத்தம் புதிய அரிசிதான், தரமான அரிசிதான், சுவையான அரிசிதான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயராமன். சீக்கிரம் பேசி முடியுங்கள் சார். இப்போது மணி 9–58.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், இல்லை. மாண்புமிகு ஜெயராமன். (குறுக்கீடு) ஜெயக்குமார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் சார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) You are not permitted. You are not allowed. நீங்கள் உட்காருங்கள். ஜெயராமன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, நேற்றைக்கு நியாய விலைக் கடையில் எடுக்கப்பட்ட அரிசி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொள்ளாச்சி ஜெயராமன், பேசுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) ஜெயராமன், பேசுகிறீர்களா, அல்லது அடுத்த உறுப்பினருக்கு வாய்ப்புக் கொடுக்கட்டுமா? (குறுக்கீடு) உட்காருங்கள், முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அடுத்த உறுப்பினருக்கு வாய்ப்பை மாற்றிக் கொடுக்கப் போகிறேன், ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மக்கள்மீது இருக்கிற அக்கறையின் காரணமாகச் சொன்னேன். நீங்கள் எந்த ஊர் அரிசியைக் கொண்டு வந்து கொடுக்கிறீர்கள் என்பதல்ல எங்களுடைய கோரிக்கை. இன்றைக்குக்

கொடுக்கப்படக்கூடிய அரிசி தரமற்றதாக நியாய விலைக் கடைகளிலே தமிழகத்திலே விநியோகிக்கப்படுகிறது. இந்த அரிசி உண்ணும் தரத்திலேயில்லை. பத்திரிகைகளிலேகூட, கால்நடைகளுக்கு மாட்டுத் தீவனத்திற்கு இது பயன்படுத்தப்படுவதாகச் செய்தி வந்து கொண்டிருக்கிறது. அனைத்துப் பத்திரிகைகளிலும் வந்து கொண்டிருக்கிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2 ரூபாய்...

*முற்பகல் 10–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பத்திரிகைச் செய்தி வந்தது என்பது தேனி மாவட்டத்திலே. நான் தேனி மாவட்டத்திற்கே நேரடியாகச் சென்றேன். அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் என்னோடு வந்தார்கள். அந்த ஊருக்கே சென்று நான் கேட்டேன்.

இந்த அரிசியை மாடு சாப்பிட முடியாது. காரணம், கால்நடைத் துறையைச் சார்ந்த மருத்துவர்களைக்கூட கேட்டேன், மாடு, புதிதாக ஒரு கன்று போடுமென்று சொன்னால், அந்தக் கன்று போடுகின்ற 4, 5 தினங்களில் பச்சரிசியையும், வெல்லத்தையும் வைத்துத்தான் சாப்பிட முடியும். அதற்குப் பால் அதிகமாக வரும். தொடர்ந்து அந்த அரிசியைக் கொடுப்பார்கள் என்று சொன்னால், அந்த மாட்டினுடைய இரைப்பைகள் எல்லாம் கெட்டு, அது உணவே உண்ண முடியாத அளவுக்கு அந்த மாடு நோயுற்று, அது இறந்து விடுமென்றுகூட மருத்துவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த ஊரிலே நான் கேட்கிறபோது, அப்படி நடக்கவில்லை, திட்டமிட்டு இப்படி ஒரு செய்தி அந்தப் பகுதியிலே பரப்பப்பட்டிருக்கிறது, அது தேனி மாவட்டத்திலே என்று அதிகாரிகளும் சொன்னார்கள். நான் நேரடியாகப் பொது மக்களிடத்திலும் கேட்டேன். எனவே, அது தவறான செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நாட்டிலே நடப்பதை, உள்ளது உள்ளபடியே சொன்னேன். இன்றைக்கு அரிசி உண்ணும் தரத்திலே இல்லையென்று சொன்னேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு நாட்டு மக்கள் நாளை சொல்வார்கள்.



அடுத்தபடியாக, இந்த 2 ரூபாய் அரிசித் திட்டம் வந்ததற்குப் பிறகு நாட்டில் அரிசிக் கடத்தல் ஒரு கைத்தொழில் மாதிரி, பரவலாக எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி வருகிறது. தினசரி நடக்கிற நிகழ்ச்சியை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். மிகச் சௌகரியமாகப் போய் விட்டது. ஒரு லோடு 20,000 ரூபாய்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மே மாதம் 13 ஆம் தேதி ஆட்சிக்கு வந்தோம். 67 நாள் ஆட்சியிலேயே கள்ளச் சந்தையிலே அவர்கள் எல்லாம் பதுக்கி வைக்கிறார்கள் என்று நேரடியாக, மாவட்ட நிருவாகம் Food Cell என்று சொல்லப்படுகின்ற குடிமைப் பொருள் குற்றப் பிரிவு ஆய்வுத் துறைமூலமாக 11 வழக்குகள் பதிவு செய்து, அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு, இன்றைக்கு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சியிலே ஒரு சின்னப் புள்ளிவிவரம், அதாவது, இந்த ஆண்டிலேயே சொல்கிறேன், சென்ற ஆண்டிலேகூட சொல்லவில்லை, இந்த ஆண்டிலேயே சொல்கிறேன். ஜனவரி மாதம், 1–1–2006—ஜெயராமன் அவர்கள், நம்முடைய முன்னாள் அமைச்சர், இன்றைய சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் அமைச்சராக இருந்தபோது, 1–1–2006 முதல் 12–5–2006, கிட்டத்தட்ட 5 மாத காலத்தில் அவர்கள் 11 வழக்குகள்தான் பிடித்திருக்கிறார்கள். ஆனால், 67 நாட்களிலே 11 வழக்குகள்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு இந்த மக்கள் உண்ணுகிற இந்த 2 ரூபாய் ஒரு கிலோ அரிசி என்கின்ற திட்டம் மக்களுக்கு நேரடியாகச் சென்றடைய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருதுகிற காரணத்தினால், இன்றைக்கு யாராவது இப்படித் தவறான முறையிலே அரிசியைப் பதுக்கினால், அவர்கள்மீது குண்டர் சட்டத்தைக்கூட பாய்ச்ச வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரிசித் திருடர்கள் 67 நாளிலே உருவாக்கப்பட்டவர்கள் அல்ல. ஏற்கெனவே பழக்கப்பட்டவர்கள், காலங்காலமாக, 5 ஆண்டு காலமாகத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தவர்கள். எனவே, அவர்களைப் பிடிப்பதற்காக, அதற்கு

உரிய ஆதாரம் வேண்டுமென்பதற்காக, துறையின் சார்பாக இன்றைக்கு முடுக்கிவிடப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த அரிசிப் பதுக்கல்காரர்களை, அந்த அரிசித் திருடர்களைக் குண்டர் சட்டத்திலே போடுவதற்கு இன்றைக்குப் பொறி வைத்து அவர்களைப் பிடிப்பதற்கு வேண்டிய ஆயத்தங்களை இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரிசிக் கடத்தலைத் தடுக்க வேண்டுமென்று சொல்கிறேன். எங்களுடைய ஆட்சிக் காலத்திலே அரிசிக் கடத்தல் அதிக அளவில் நடக்கவில்லை, அதிக அளவில் வழக்குகள் பதியப்படவில்லை, இப்படி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு முறையும் மறுத்தால்... (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பத்திரிகை நண்பர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். தொடர்ந்து 5 ஆண்டு காலத்திலே பார்த்தால் இப்படி அரிசி கடத்தப்பட்டது, லாரி பிடிக்கப்பட்டது, அமைச்சர் இரவு நேரத்திலே திருநெல்வேலிக்குப் பக்கத்திலே புளியரையிலேயே இருந்து 1–1/2 மணிக்குப் பிடித்தார் என்ற செய்திகள் எல்லாம் வராது. ஏனென்று சொன்னால், அதற்கு, அந்த அரசாங்கம் பிடிப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்யவில்லை. இந்த 67 நாட்களிலே நாங்கள் பிடிக்கிற காரணத்தினால்தான் அவை எல்லாம் பத்திரிகையிலே செய்திகளாக வந்துகொண்டிருக்கின்றனவேயொழிய, பத்திரிகையிலே செய்திகள் வருவதாலேயே, பிடிப்பதில்லை என்று பொருள் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசிக் கடத்தலைத் தடுத்து நிறுத்துங்கள், அநியாயமாகத் தமிழகத்தினுடைய பணம் அண்டை மாநிலத்திற்குப் போகிறது என்று சொல்லி, இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விடுகிறேன்.

அடுத்ததாக, கட்டுமானப் பொருட்களான மணல், ஜல்லி, சிமெண்ட் போன்றவை ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், திடீரென்று 3 மடங்கு



விலை உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு 10 இலட்சம் குடும்பங்கள், கட்டுமானத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற குடும்பங்கள் கிராமப்புறங்களிலிருந்து மாநகர் வரையிலே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 10 இலட்சம் குடும்பங்கள், தாய்மார்கள், சித்தாள் வேலைக்குப் போகிறவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மணல் விலை மும்மடங்கு உயர்ந்திருக்கிறது. என்ன காரணத்தினாலே இந்த ஏற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதற்கு உரிய விளக்கமும் இல்லை.. விலையைக் குறைப்போம், மணல் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வோம் என்று அரசின் சார்பிலே சொல்லப்படுகிறதே தவிர, இதுவரையில் அதற்குரிய எந்த நடவடிக்கையும் சரியான முறையில் எடுக்கப்படவில்லை என்பது மிகுந்த மன வருத்தம் அளிக்கக்கூடிய ஒரு செயல் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் கடத்தல் விவகாரமாக, அரசுக்குக் கடந்த காலங்களிலே கொடுக்கப்பட்டு இருந்தாலும், கான்ட்ராக்ட் ஒருவருக்கே கொடுக்கப்பட்டு கொள்ளை போய்க்கொண்டிருந்தது. அதைத் தடுத்து நிறுத்துகிற முயற்சிகளிலே இந்த அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, இரண்டு யூனிட் ஏற்ற வேண்டும் என்று சொல்லிவிட்டு—எப்போதுமே லாரியிலே உங்களுக்குத் தெரியும்—எப்போதுமே அதிகமாக ஏற்ற வேண்டும் என்று கேட்பார்களே தவிர, கடந்த காலத்தில் இரண்டு யூனிட்தான் ஏற்றவேண்டும், அதற்கு மேல் ஏற்றக்கூடாது. இரண்டு யூனிட் பர்மிட் வாங்கி ஏற்றிவிட்டு, மீதி இரண்டு யூனிட், ஒரு யூனிட் திருட்டுத்தனமாகப் போனதுதான் கடந்த காலங்களில் நடந்தது. அதற்குரிய வருவாய் எல்லாம் எங்கெங்கே வந்தது என்பது அதைச் சார்ந்த அமைச்சருக்கு, எல்லோருக்கும் தெரியும்.

அது மட்டுமல்ல. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன், அப்புறம் சொல்லுங்கள். மேலும், இப்போது அந்த இரண்டு யூனிட்தான் வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதையும் அதிகப்படுத்தி 3 யூனிட் வரை லாரியில் ஏற்றலாம் என்று கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். போன தடவை பகலில் மட்டும்தான், 7 to 8 தான் பண்ண வேண்டும், ராத்திரியில் திருடு போய்விடும் என்ற சூழ்நிலையை மாற்றி, இரண்டு shift–ல் இப்போது எல்லாம் போகலாம்,

காலை 5 மணியிலிருந்து ராத்திரி 10 மணி வரை மணல் ஏற்றுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று, அதற்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, artificial—ஆக அங்கே இருக்கின்ற சில பேர் சேர்ந்துகொண்டு தொடர்ந்து இதை ஏற்ற வேண்டுமென்று முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு வாரத்தில் அவையெல்லாம் தடுத்து நிறுத்தப்பட்டு, நிச்சயமாக மணல் விலை குறையும் என்பதை மட்டும் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஓ. பன்னீர்செல்வம்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை பொறுப்பில் தற்போது இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறான தகவலை சட்டமன்றத்திலே தந்திருக்கின்றார்கள். யாருக்கும்—ஒருவருக்கு கான்ட்ராக்ட் முறையில் மணல் விடப்படவில்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அரசேதான் மணல் எடுக்கின்ற பணியைச் செய்தது. மணல் எடுக்கின்ற குவாரிகளில் மணலை அள்ளிப் போடுகின்ற உரிமைதான் ஒப்பந்தப்புள்ளிகள்மூலமாகப் பல்வேறு நபர்களுக்குத் தரப்பட்டது. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலமான 1996—2001—ல் ஒரு வருடத்திய சராசரி மணல் விற்பனையின்மூலமான வருமானம் ஏல முறையிலும், சீனரேஜ் கட்டணத்தின் மூலமாகவும் 29 கோடி ரூபாய் என்ற அளவில்தான் மாநில அரசுக்கு மணல்மூலமாக வந்தது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இந்த மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்துகின்ற சீர்திருத்த நடவடிக்கையின் காரணமாக, அரசு நேரடியாக மணல் விற்பனை செய்ததன்மூலமாக ஒரு வருடத்திற்கு 145 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) இலாபம் ஈட்டுகின்ற ஒரு நிர்வாகச் சீர்திருத்தத்தைத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்தார்கள். இதிலிருந்து மணல் கொள்ளை எந்த ஆட்சியில் நடைபெற்றது என்பது நாட்டு மக்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றாகவே தெரியும் என்பதை நான் இங்கு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சி வி. ஜெயராமன், சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.



**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொள்வது—மணல் விலை குறைக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. மூன்று மடங்கு விலை உயர்ந்திருக்கிறது. இந்த ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு ஜல்லி விலை உயர்ந்திருக்கிறது, சிமெண்ட் விலை உயர்ந்திருக்கிறது. பொதுவாக தி.மு.க. ஆட்சிக்கு வந்தாலே இந்த மூன்று பொருட்களுக்கும் விலை உயர்ந்துவிடுகிறது என்ற ஒரு பெயர் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைக் குறைக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

கடைசியாக, என்னுடைய கோரிக்கையாக நான் வைத்துக்கொள்வது, தி.மு.க. தேர்தல் அறிக்கையில் உள்ள, இரயில் கட்டணத்திற்கு இணையாக பஸ் கட்டணம் குறைக்கப்படும் என்பது குறித்து நிதிநிலை அறிக்கையில் எதுவுமே சொல்லப்படவில்லை. அதேபோல, இலவச gas அடுப்பு வழங்குவது குறித்து தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, எந்தவிதமான அறிவிப்பும் பட்ஜெட்டிலே குறிப்பிடப்படவில்லை. தேர்தல் அறிக்கையில் எவற்றையெல்லாம் குறிப்பிட்டீர்களோ, அவையெல்லாம் பட்ஜெட்டிலே இடம்பெறும் என்று சொன்னீர்கள். அவை இடம்பெறவில்லை.

இறுதியாக, கடைசிக் கோரிக்கையாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், 30 நிமிடங்கள் ஆகப் போகிறது. நீங்கள் உரையை முடியுங்கள். இல்லையென்றால், அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டியிருக்கும்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வேட்டி—சேலைகள் வழங்குவதற்காக கடந்த மாண்புமிகு அம்மாவின் ஆட்சிக் காலத்திலே ஒரு கோடியே 61 இலட்சம் வேட்டி—சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டன. கிராமப்புறங்களில் எல்லாம் அவை விநியோகிக்கப்பட்டு விட்டன. நகராட்சிகளிலே இன்னும் விநியோகிக்கப்படாமல் அவையெல்லாம் இருப்பிலே, கிடையிலே கட்டி, தாலுகா அலுவலகங்களிலே அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அவை எல்லாம் வீணாகப் போகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. கடந்த மாண்புமிகு அம்மாவின் ஆட்சியிலே ஏழை எளிய மக்களுக்காக நல்ல நோக்கத்தோடு தயார் செய்யப்பட்ட அந்த இலவச வேட்டி—சேலைகள், தேர்தல் காரணமாக விநியோகிக்காமல் நிறுத்தப்பட்டன. தேர்தல் காரணமாக அது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் முல்லைவேந்தன். (குறுக்கீடு) சரி, முடியுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, அந்த இலவச வேட்டி–சேலைகள் வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–10*

என்னுடைய பொள்ளாச்சி தொகுதி, ஆனைமலைக் குன்றுகளின் அடிவாரத்திலே, மேற்குத் தொடர்ச்சி மலைகளின் அடிவாரத்திலே இருக்கிறது. தொகுதியினுடைய ஒரு பகுதியான மனக்கடவு கிராமம் கேரள மாநிலத்தோடு இருக்கிறது. தமிழகத்திற்கு நேரடியாகத் தொடர்பு இல்லாமல் கேரளாவுக்குச் சென்று தமிழ்நாட்டிற்குள் வரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, காளியப்பக்கவுண்டன்புதூர், மனக்கடவு ஆகிய இரண்டு கிராமங்களுக்கு இடையிலே ஓடிக்கொண்டிருக்கிற ஆழியாற்றின் குறுக்கே ஒரு தரைவழிப் பாலம் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்தப் பேரவையின் வாயிலாக இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசாங்கம் ஏழை எளிய மக்களுக்கு, அதைச் செய்யும், இதைச் செய்யும் என்று மக்களெல்லாம் கனவுக் கோட்டை கட்டிக்கொண்டிருந்தார்கள்; இப்போது நீங்கள் ஆகாயத்திலே ஒரு கோட்டையைக் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்லி, இது மக்களுக்குப் பெருத்த ஏமாற்றம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. முல்லைவேந்தன்.

***திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூர் தொகுதியில் மூன்றாவது முறையாகப் போட்டியிடுகிற நல்வாய்ப்பை வழங்கிய, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய இருளகற்ற வந்த ஓய்வறியாச் சூரியனாம், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களே, இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களே, வருங்காலத் தமிழகத்தினுடைய வரலாற்று நாயகன் இளைய தளபதி அவர்களே, என்னுடைய வெற்றிக்குக் காரணமாக இருந்து உழைத்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த தலைவர்களே, எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த அறிவு ஜீவிகளாக இருக்கிற மொரப்பூர் தொகுதி வாக்காளப் பெருமக்களே, உங்கள் அத்துணை பேருக்கும் முதலிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1969 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே வழங்கியபோது, நாட்டு மக்களுடைய வாட்டத்தைப் போக்குவதற்காகப் பல்வேறு நலத்



திட்டங்களை அறிவித்ததோடு, தமிழ்நாடு தொழில் வளத்திலும், சமூகச் சீர்திருத்த முன்னேற்றத்திலும், இன்னும் சொல்லப் போனால், ஒட்டுமொத்தத் தமிழகமும் இழந்த பெருமைகளையெல்லாம் மீட்டுக்கொள்கிற வகையில் வளமோடு வாழ்வதற்கான நல்ல திட்டங்களையெல்லாம் உருவாக்கித் தந்தார்கள். தொடர்ந்து 36–வது ஆண்டு, இன்று வரையிலேயும் சட்டமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக, முதலமைச்சராக இருந்துகொண்டு, இந்தியத் துணைக் கண்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கிற தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் இன்றையதினம் அளிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை, தலைவர் கலைஞர் அவர்களுடைய சிந்தனையில் பூத்த, தேர்தல் வாக்குறுதிகளையே நிதிநிலை அறிக்கையாகத் தந்திருக்கிற, எல்லாத் தரப்பு மக்களாலும், அறிவு ஜீவிகள் அத்துணை பேராலும் பாராட்டப்படுகிற நிதிநிலை அறிக்கை ஆகும். பாராட்ட மறுப்பார்களேயானால், மனம் இல்லை என்று சொன்னால், அவர்களிடத்திலே ஏதோ குறை இருக்கிறது என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை நான் தொடக்கத்திலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குப் பத்திரிகையாளர்கள் சார்பாக, தினமணி பத்திரிகை தலையங்கம் எழுதுகிறபோது, தேர்தல் வாக்குறுதிகள் பலவும் இந்த பட்ஜெட்டில் அமலாக்கப்பட்டுள்ளன; இதையே வேறுவிதமாகச் சொல்வதானால், பல தரப்பினரின் எதிர்பார்ப்புகள் பெருமளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்று அவர்கள் தலையங்கத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

அது மாத்திரமல்லாமல், தமிழக அரசினுடைய பட்ஜெட்டை வரவேற்றதோடு, மக்கள் நலத் திட்டங்களை அமல்படுத்துவதில் தமிழகம் என்றுமே முன்னணியில் இருந்து வருகிறது என்ற பெருமையையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆக, பத்திரிகைகள், படித்தவர்கள், அறிஞர் பெருமக்கள், அரசியல்வாதிகள், தொழிலாளர்கள் அத்துணை பேரும் பாராட்டுகிற இந்த நிதிநிலை அறிக்கை குறித்து நான் என்னுடைய சில கருத்துகளை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு குழந்தைக்கு முன்னாலே பல்வேறு விதமான இனிப்புப் பலகாரங்களை வைத்துவிட்டு, எது வேண்டுமென்று கேட்டால், அது எதை என்று சொல்வது என்று தடுமாறுமோ அதைப்போல, ஒரு மங்கைக்கு முன்னால் அழகான வண்ண வண்ணப் பட்டுச் சேலைகளையெல்லாம் அழகாக அடுக்கி வைத்துவிட்டு, இதிலே உனக்கு

எந்தச் சேலை பிடிக்கிறது, வண்ண வண்ண மலர்களை அடுக்கி வைத்துவிட்டு, இதிலே எந்த மலர் பிடிக்கிறது என்று கேட்டால், அவள் எப்படித் தடுமாறுவாளோ, அப்படித் தடுமாறுகிற நிலையிலேதான் நானும் நின்றுகொண்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிற அத்துணை அற்புதங்களும், அட்சயபாத்திரமாக நீங்கள் வாரி வழங்கியிருக்கிற திட்டங்களாகும். தலைவர் கலைஞர் அவர்களே, உங்கள்மூலமாக நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்கள் இங்கே தந்திருக்கிற நிதிநிலை அறிக்கை, திராவிட இயக்கத்தினுடைய அடிச்சுவடு பிறழாமல், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் என்ன கனவு கண்டார்களோ, அவற்றை நிறைவேற்றுகிற வகையில் இன்றையதினம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மக்களுடைய நாடித் துடிப்பைப் பிடித்துப் பார்த்து, அவர்களுடைய வறுமையை அகற்றுவதற்காக எல்லாத் தரப்பு மக்களும் பயன் பெற வேண்டுமென்ற உணர்வோடு உருவாக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை என்று சொன்னால், அதை யாரும் மறுத்துவிட முடியாது.

*முற்பகல் 10–15*

'உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி' என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு, கூட்டுறவுக் கடன்கள் எல்லாம் ரத்துச் செய்யப்படும் என்று தேர்தல் நேரத்திலே நீங்கள் வாக்குறுதி தந்தீர்கள். வாக்குறுதி தந்தபோது அதைக் கேலியும், கிண்டலும் பேசியவர்கள் இந்த நாட்டிலே ஏராளமான பேர். முடியாது, முடியாது என்று மூலைக்கு மூலை முச்சந்தியிலெல்லாம் பேசினார்கள். ஆனால், ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனேயே, பதவியேற்ற அந்த இடத்திலேயே பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு முன்னால் கையெழுத்திட்டு, நான் கூட்டுறவுக் கடனையெல்லாம் தள்ளுபடி செய்திருக்கிறேன் என்ற அறிவிப்பைத் தந்தீர்கள். அதன்மூலம் 6,866 கோடி ரூபாய் விவ்சாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டு நிதிநிலை அறிக்கையிலேயும் அதற்கான வழிமுறைகளை எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள்.

NABARD வங்கிக்குச் செலுத்தவேண்டிய பணத்தில் முதல் தவணையாக இந்த ஆண்டு 135 கோடி ரூபாயும், தொடர்ந்து பயிர்க் கடன் வழங்குவதற்காக ஆயிரம் கோடி ரூபாயும் வழங்கி, கூட்டுறவுச் சங்கக் கடன் தொடர்ந்து வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தையும் வழங்கியிருக்கிறீர்கள். குறைந்த வட்டியில் விவசாயிகளுக்குக் கடன்



வழங்க வேண்டும் என்ற நல்லெண்ண உணர்வோடு கடந்த ஆண்டு வரையில், ஆட்சிக் காலம் வரை இருந்த 9 சதவிகித வட்டியை 7 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறீர்கள். ஏழை எளியவர் வாங்கிச் சாப்பிடுவதற்கும், உழவர் பெருமக்கள் சிறப்பாகத் தொழில் செய்து காய்கறிகளை உற்பத்தி செய்து, நியாயமான விலைக்கு விற்பதற்கான ஏற்பாட்டினை உன்னதமான, உழவர் சந்தையின்மூலம் உருவாக்கித் தந்தீர்கள். அப்படிப்பட்ட உழவர் சந்தைகளெல்லாம் கடந்த காலத்தில் கிடப்பிலே போடப்பட்ட நிலையை மாற்றி, இன்றையதினம் 103 உழவர் சந்தைகளுக்குப் புத்துயிர் தந்து, வாங்குகிறவர்களும், அதேபோல விற்பவர்களும் இலாபம் அடைகிற ஒரு நல்ல நிலையை உருவாக்கித் தந்திருக்கிறீர்கள்.

அதேபோல், சுய நிதித் திட்டத்தின்கீழ் 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர் இன்றைக்கு மின் இணைப்புப் பெற்றிருக்கிறார்களே, அவர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கியிருக்கிறீர்கள். 1989 ஆம் ஆண்டு இந்தியத் துணைக் கண்டத்தில் முதன்முதலாக இலவச மின்சாரத்தை வாரி வழங்கிய வள்ளலாக இருந்து, 13 இலட்சம் விவசாயிகள் அன்றைக்குப் பயன் பெற்றிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு என்ன செய்தார்கள் என்று கேட்டால், வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த காலகட்டத்தில்தான் 500 கோடி ரூபாய்க்கு மேல் விவசாயிகளுடைய கடனையெல்லாம் தள்ளுபடி செய்தார்கள். மழைக் காலங்களில் வெள்ள நிவாரணம், அதேபோல, வறட்சிக் காலங்களில் வறட்சி நிவாரணம், நில வரித் தள்ளுபடி போன்ற அற்புதமான திட்டங்களை அன்றையதினம் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்தார்கள்.

அது மாத்திரமல்லாமல், விவசாயிகளுடைய பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக உலகத் தரம் வாய்ந்த மூன்று வணிக முனையங்களை, சென்னையிலும், கோவையிலும், மதுரையிலும் ஆரம்பிப்பதற்கான அறிவிப்பைத் தந்திருக்கிறீர்கள். இது விவசாயப் பெருமக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது.

அதேபோல, பல்லடத்தில் வெங்காயத்திற்கும், கிருஷ்ணகிரியில் மாம்பழத்திற்கும், ஓடைப்பட்டியில் திராட்சைக்கும் குளிர்பதன வசதியுடன்கூடிய விற்பனைக் கூடம் அமைத்து, அதேபோல, முந்திரி விளை நில ஏற்றுமதி மண்டலங்களை உருவாக்கித் தந்து, விவசாயிகளுடைய உற்பத்திப் பொருளுக்கு உரிய விலை கிடைக்கும் என்பதற்கான உத்தரவாதத்தை வழங்கியிருக்கிறீர்கள்.

பாராட்டுகிறார்கள். ஓர் ஏழைப் பெண் ஒரு நாள் காலையிலே போய் மாலை வரையிலே கூலி வேலை செய்துவிட்டால், அந்த ஒரு நாள் கூலிப் பணத்திலே 20 கிலோ அரிசியை வாங்கி மாதம் பூராவும், ஓரிருவர் இருந்தால், குடும்பத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்கிற ஒரு வாய்ப்பை இன்றைக்குக் கலைஞர் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மாத்திரமல்ல, சத்துணவோடு வாரத்திற்கு 2 நாட்கள் முட்டை வழங்கப்படும் என்று அறிவித்தீர்கள். அன்றைக்கு வெறும் சோறு போட்டால் போதாது, அது சத்துணவாக இருக்க வேண்டும், சத்துணவு வேறு வழிகளில் போய்விடக்கூடாது, எனவே, முட்டை வழங்கினீர்கள். ஆனால், இடைப்பட்ட காலத்தில் தடைப்பட்டுப் போனாலும், மீண்டும் நாடாளுகின்ற வாய்ப்பை நீங்கள் பெற்றிருக்கிற இந்த நேரத்தில், இரண்டு முட்டை வழங்குகின்ற அந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். அதற்காக ஆண்டுக்கு 40 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவழிக்கிற நிலை இருந்தாலும், அதையும் இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்த முட்டை வழங்குகிற திட்டத்திற்குக்கூட ஓர் அற்புதமான நாளைத் தேர்ந்தெடுத்தீர்கள். எந்தப் பெருந்தலைவர் காமராஜர் இந்த நாட்டில் கல்விக்குக் கண் கொடுத்த தெய்வம் என்று பாராட்டப்படுகிறாரோ, எந்தத் தலைவர் கிராமப் பகுதியில் இருக்கிறவர்கள் கல்வி கற்க வேண்டுமென்று கல்விக் கூடங்களை உருவாக்கித் தந்தாரோ, அந்தப் பச்சைத் தமிழனுடைய பிறந்த நாளில், ஜூலைத் திங்கள் 15 ஆம் நாள் அன்று அந்த முட்டை வழங்குகிற திட்டத்தை வழங்கியிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற பெருந்தன்மைக்குச் சொந்தக்காரரான நீங்கள், அந்த நிதிநிலை அறிக்கையில் அழகாய் எழுதப்படுகிறபோது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று அந்தத் திட்டத்தினுடைய பெயரைச் சுட்டிக்காட்டி, தான் பகைவருக்கும் அருளுகின்ற நல்லெண்ணம் படைத்தவன் என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறீர்கள். 40 ஆண்டு கால நட்புக்கு இலக்கணமாய் இருப்பவர், நன்றி மறந்தவர் இல்லை என்பதற்கு இது ஓர் அடையாளம்.

அன்றைக்கு இலவச பஸ் பாஸ் திட்டத்தைத் தந்த தலைவர் கலைஞர் அவர்களே, இன்றைக்கு இலவச சைக்கிள் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துகிறீர்கள். ஓர் ஆட்சி கொண்டு வந்திருக்கிற திட்டம் எதுவாக இருந்தாலும், நல்ல திட்டமாக இருந்தால், அதை ஏற்று நடத்த வேண்டும்;



அதுதான் ஒரு நல்லாட்சிக்கு, ஜனநாயகத்தைக் காப்பாற்றுகிற ஆட்சிக்கு அடையாளம் என்பதற்கு இலக்கணமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றி இருப்பதன்மூலம், நீங்கள் நாட்டு நலனில் அக்கறை உள்ளவர் என்பதை நிரூபித்திருக்கிறீர்கள். யாராக இருந்தாலும் எல்லோரும் சமம் என்ற உணர்வோடு பணியாற்றுகிற எண்ணத்திற்குச் சொந்தக்காரர் என்பதை நிலைநாட்டியிருக்கிறீர்கள்.

இன்னொரு பக்கத்தில், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி தருவோம்; அடுப்படியிலே முடங்கிக் கிடக்கிற தாய்மார்கள் அறிவு பெற வேண்டும் என்பதற்காக, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவோம் என்று சொன்னீர்கள். அப்போது கேலியும், கிண்டலும் பேசினார்கள். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியா, தர முடியுமா, 15,000 கோடி ரூபாய் பணத்திற்கு எங்கே போவார்கள் என்றெல்லாம் கேட்டார்கள். இன்னொருவர் சொன்னார், வண்ணத் தொலைக்காட்சி பெட்டியா, முடியாது. நீங்கள் தொலைக்காட்சிப் பெட்டி கொடுத்தால், கரன்ட் பில் கட்டுவது யார், கனெக்ஷன் கொடுப்பது யார், இப்படி எல்லாம் கேட்டார்கள். எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைக்கிற வகையில், இன்றையதினம் தலைவர் கலைஞர் அவர்களே, நீங்கள் தேர்தல் அறிக்கையையே நிதிநிலை அறிக்கையாகத் தருவேன் என்று சொன்னதற்கு அடையாளமாக, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவதற்கான அறிவிப்புகளைத் தந்திருக்கிறீர்கள். முதற்கட்டமாக அண்ணா பிறந்த நாளில், பெரியார் பிறந்த நாளில், 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தரப்படும் என்று அறிவித்து, அதுகூட யார், யாருக்கு முதலிலே தருகிறோம் என்று' "பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் எல்லா சாதியைச் சார்ந்தவர்களும், எல்லா சமுதாயத்தைச் சார்ந்தவர்களும், எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும் வாழ்கிற அந்த இடத்திலே வாழ்கிறவர்களுக்கு" முதலிலே தருவேன் என்று அறிவித்தீர்கள்.

அதேபோல, குடிசை மாற்று வாரியத்திலே வட சென்னை, தென் சென்னையில் வாழ்கிற அந்த ஏழை எளிய மக்களுக்கும், நீலகிரி மாவட்டத்தில் வாழ்கிற பழங்குடி மலைவாழ் மக்களுக்கும், மறு வாழ்வு இல்லங்களில் வாழ்கிற அந்த ஏழை எளியவர்களுக்கும் வழங்குவேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது மாத்திரமல்ல, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படுமா என்ற கேள்விக்குறியோடு, வழங்காமல் போனால் நலமாக இருக்குமே என்ற நம்பிக்கையோடு இருக்கிறவர்களுக்கு, அவர்களது நெஞ்சிலே அடிக்கிற வகையில் 750 கோடி ரூபாயை இநத நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கித் தந்து, (மேசையைத்

இன்றையதினம் பெட்ரோலுடன் 5 சதவிகிதம் எத்தனால் கலந்து பயன்படுத்துவதற்கு மத்திய அரசு ஆணையிட்டுள்ளதைப் பயன்படுத்தி, அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் எத்தனால் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பினை உருவாக்கியிருக்கிறீர்கள். அதன்மூலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இலாபம் பெறுவதற்கான ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும்.

அது மாத்திரமல்லாமல், காட்டாமணக்கிலிருந்து எண்ணெய் எடுத்து, அதை பயோ டீசலாகப் பயன்படுத்துவதற்கும், சர்க்கரைக் கிழங்கு, சர்க்கரைச் சோளம் போன்றவற்றை உற்பத்தி செய்வதன்மூலம் டீசலுக்கு மாற்றாகப் பயன்படுத்துவதற்கான எரிபொருளை உருவாக்குவதற்கான வாய்ப்பையும் இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறீர்கள்.

இத்தனையையும் விவசாயிகளுக்குச் செய்திருக்கிற நீங்கள், விவசாயிகள் கேட்டபோதெல்லாம் கடன் வழங்குவது மாத்திரமல்ல, விவசாயிகள் இன்றைக்கு வளமோடு வாழ்கிறார்கள்; அப்படி வளமில்லாமல் இருக்கிற விவசாயத் தொழிலாளிக்குக்கூட வாழ்வளிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு 2000–ஆவது ஆண்டில் நீங்கள் விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை உருவாக்கித் தந்தீர்கள். அந்த விவசாயத் தொழிலாளர் நல வாரியத்திலே தன்னை இணைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் தந்தீர்கள். நலத் திட்ட உதவிகளை வாரி வழங்கினீர்கள்.

சாதாரணக் குடும்பத்திலே வந்த விவசாயத் தொழிலாளி இறந்து போனால், சிறு விவசாயியாக இருந்தாலும், குறு விவசாயியாக இருந்தாலும், அவனும் அதிலே பதிவு செய்துகொள்ளலாம். அவன் விபத்திலே இறந்து போனால் ரூபாய் ஒரு இலட்சம் கொடுத்தீர்கள். அவர்களுடைய மனைவி, மக்களெல்லாம் வறுமையிலே வாடக்கூடாது என்பதற்காக அந்த ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இயற்கையாக இறந்து போனால் பத்தாயிரம் ரூபாய் என்று சொன்னோம். இரண்டு கைகளையும், கால்களையும் இழந்தால் ரூபாய் ஒரு இலட்சம். அதேபோல, இரண்டு கண் பார்வையில்லாவிட்டால் ரூபாய் ஒரு இலட்சம். ஒரு கை அல்லது ஒரு கால் போனால் ரூபாய் 50 ஆயிரம் என்று சொல்லி வாரி வழங்கியுள்ளீர்கள்.

அதோடு மாத்திரமல்ல, இன்றையதினம் போட்டிருக்கிற அற்புதமான திட்டத்தில் மகப்பேறு உதவித் திட்டமாக, மாதம் ஆயிரம் ரூபாய், ஆறு மாதங்களுக்கு ரூ. 6,000 தருவதற்கான திட்டங்கள். அவன்





மறைந்து போனால் ஈமச் சடங்கிற்காக இரண்டாயிரம் ரூபாய். 60 வயதைத் தாண்டினால், ஆதரவற்ற நிலையில், வேலை செய்ய முடியாத நிலையில் இருந்தால், மாதந்தோறும் 400 ரூபாய். அவனுடைய மகள் திருமணத்திற்கு 5,000 ரூபாய், மகன் திருமணத்திற்கு 3,000 ரூபாய், இப்படிப் பல்வேறு நிலைகளில் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுகிற தலைவராக மாத்திரமல்ல, அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் கல்வி கற்பதற்காக 1,250 ரூபாயிலிருந்து, பத்தாம் வகுப்பிலிருந்து முதுகலைப் படிப்பு வரையில் 6,750 ரூபாய் வரையில் உதவித் தொகை வழங்குகிற ஓர் அற்புதமான நிலையை உருவாக்கி, உழவர் பெருமக்கள் அத்தனை பேரும் மனமகிழ்வோடு, வளமோடு வாழ்வதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிற விவசாயிகளின் உற்ற தோழனாக இருக்கிறவர் இந்தியத் துணைக் கண்டத்தின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களே, நீங்கள் மாத்திரம்தான் என்று சொன்னால், அது மிகையாகாது.

அதே நேரத்தில், தேர்தலின்போது சொன்னீர்கள், வறுமையிலே வாடுகிறவர்கள், அன்றாடங்காய்ச்சிகளாக இருப்பவர்கள், வேலையில்லாமல் பட்டினியால் சாகிறவர்கள், இந்த நாட்டிலே இருக்கக்கூடாது என்பதற்காக, ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் என்று சொன்னீர்கள். அந்தத் தேர்தல் அறிக்கை வந்த நேரத்தில், ஏழை எளியவர்களெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் தத்தளித்தார்கள். அந்த நேரத்தில் சில பேர் சொன்னார்கள். இரண்டு ரூபாய்க்கா, அரிசியா, போட முடியுமா? இது சாத்தியமே இல்லை என்று சொல்லி நாடு பூராவும் முழக்கமிட்டார்கள். அதற்குப் பிறகு, நானும் தருகிறேன் சும்மா என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்குக் கலைஞர் அவர்களே, நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், அந்த இடத்திலேயே ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் என்கிற அற்புதமான ஆணையை வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அதற்காக 1,950 கோடி ரூபாய் மானியத்தை வழங்கி அந்த அரிசியை வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

முற்பகல் 10–20

அந்த இரண்டு ரூபாய் அரிசித் திட்டத்தால் இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கிற எந்தக் குடும்பத்திலேயும் அடுப்பு எரியாமலில்லை, பூனை தூங்கவில்லை, பட்டினியாக யாரும் இல்லை என்ற ஓர் அற்புதமான நிலை உருவாகியிருப்பதை மனசாட்சியுள்ள யாரும் மறந்துவிட மாட்டார்கள். அத்துணை பேரும் இன்றைக்குப்

தட்டும் ஒலி) வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி அத்துணை பேருக்கும் வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தினைத் தந்திருக்கிறீர்கள். அந்த உத்தரவாதத்தோடு நிற்கவில்லை. அந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவதிலேகூட, தவறுகள் நடந்து விடக்கூடாது என்பதற்காக, சட்டமன்றத்திலே இடம் பெற்றிருக்கிற அரசியல் கட்சிகளுடைய சட்டமன்ற உறுப்பினர்களை, அந்தக் குழுவின் உறுப்பினர்களாக்கி, தவறு நேராமல், டெண்டர் வைக்கப்பட்டு, சர்வதேச அளவில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, குறைந்த விலையில் தரமான T.V.-களை வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கிப் பார்க்கிற அந்தத் தாய்மார்கள், தூர இருந்து பார்த்தவர்கள், பக்கத்து வீட்டிலே போய் தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்க்கலாமா என்று ஏங்கித் தவித்தவர்கள் எல்லாம், சொந்தமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வைத்துப் பார்க்கும் ஓர் அற்புதத்தை நிகழ்த்தியிருக்கிற அற்புதமான தலைவர் கலைஞர் அவர்களை அந்த வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டியைப் பார்க்கிற அத்துணை பேரும் காலம் உள்ள வரையில், கார் உள்ள வரையில் பாராட்டுவார்கள் என்பது நிச்சயம் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் தமிழ்நாட்டில் இருக்கிறது. கடந்த கால ஆட்சியில் சொல்லப்பட்ட கணக்கை வைத்து, ஆளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் செம்மைப்படுத்தி, விவசாயத்திற்கு ஏற்ற நிலையில் தருவோம் என்று சொன்னார்கள். அதே நேரத்தில் தனியாரிடம் உள்ள நிலத்தையும், அவர்கள் கேட்டால் பண்படுத்தி அவர்களுக்கு வேளாண்மை செய்வதற்காக வழங்கப்படும் என்பதன்மூலம் 50 இலட்சம் ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு விவசாய நிலங்களாக மாறும்; அதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும். அதன்மூலம் உணவு உற்பத்தி பெருகும்; அதன்மூலம் நாட்டின் பொருளாதாரம் பெருகும் என்ற தொலைநோக்குச் சிந்தனையோடு அந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள்.

முற்பகல் 10–25

சென்னை போன்ற பெருநகரங்கள், தொடர் மழையின் காரணமாக தாழ்வான பகுதிகளில் மழை வெள்ளத்தில் அப்போதெல்லாம் தத்தளித்திருக்கிறது. வீட்டிலே இருப்பவர்கள், சொந்த நாட்டில், சொந்தத் தெருவில், சொந்த வீட்டிலேயே அகதிகளைப்போல, அனாதைகளைப்போல பள்ளிக்கூடங்களிலே, கோயில்களிலே போய்



குடியேறுகின்ற கொடுமை தொடர்ந்து சென்னை மாநகரத்தில் இருந்துகொண்டிருந்தது. சென்னை மாநகர மக்கள் தொடர் மழையின் காரணமாக, கண்ணீர்க் கடலிலே மிதக்கிறார்கள். குழந்தைகளும், குட்டிகளுமாக, பசியும் பட்டினியோடு, பஞ்சப் பரதேசிகளாக அகதிகளைப்போல அலைகின்ற கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதற்காகத்தான், சென்னையில் மழை பெய்கிற காலத்தில் தேங்கி இருக்கிற தண்ணீரை ஒழுங்குபடுத்தி, அதனைக் கடலிலே கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக, வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.279.09 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசு மற்றும் NABARD வங்கித் திட்டத்தின்கீழ் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சென்னை மாநகராட்சி மக்கள் என்றைக்கும் உங்களுக்கு நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள்.

அதேபோல, திருச்சி மாநகரம், மதுரை மாநகரம் தண்ணீரில் மூழ்கிவிடக்கூடாது என்பதற்காகத் திட்டங்களை உருவாக்கி இருக்கிறீர்கள். அதே நேரத்தில் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பதைப்போல, திருச்சியைப் பொறுத்தவரையில், திருச்சியிலே மழைக் காலங்களில் பெய்கிற மழை நீர், திருச்சி நகரத்திலே கூடி, திருச்சி நகரமே தத்தளித்திருக்கிறபோது திருச்சி நகருக்குள் அந்தத் தண்ணீர் வராமல் தடுத்துத் திருப்பி, பக்கத்திலே இருக்கிற புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கால்வாய்கள்மூலமாகக் கொண்டு போய் ஏரிகளை நிரப்பி, வறட்சியால் அந்தப் பகுதியை வளமாக்குவதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி, விவசாயத்தை மேம்படுத்தி இருக்கிறீர்கள்; அதற்காகவும் நான் உங்களை நெஞ்சாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறை வளமோடு இருக்க வேண்டும் என்பதற்காக, 1989 ஆம் ஆண்டு, முதல் கமிஷனை அமைத்தீர்கள். அதேபோல, இரண்டாவது போலீஸ் கமிஷனையும் தாங்கள்தான் அமைத்தீர்கள். இப்போது மூன்றாவது போலீஸ் கமிஷன் அமைத்து அவர்களுடைய குறைபாடுகளை எல்லாம் போக்குவேன் என்று சொல்லி, காவல் துறையின் மேம்பாட்டிற்காக 68 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆக, காவல் துறையைக் கண்ணுங்கருத்துமாகக் காக்கின்ற கலைஞர் அவர்களே, நீதி காப்பாற்றப்பட அந்தத் துறை செம்மைப்படுத்தப்படவேண்டும்.

அதேபோல ஓட்டுநர்கள்; அவர்கள் எல்லாம் செம்மையாக இருக்கவேண்டியவர்கள். ஓட்டுநர்கள் குடிபோதையில் போனால், விபத்துக்கள் ஏற்பட்டால், இலட்சக்கணக்கான பேர் மாண்டு போகிற கொடுமை ஏற்படுகிறது. எனவே, விபத்தைத் தவிர்ப்பதற்காக,

குடிபோதையில் போனால் ஓட்டுநர்களின் உரிமம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று இந்தியாவுக்கு வழிகாட்டுகிற இந்தத் திட்டம் பல்லாயிரக்கணக்கான அல்ல, இலட்சக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றும் என்பது உறுதி என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, கல்வித் துறையில், சுய நிதிக் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டில் இட ஒதுக்கீடு; பொது நுழைவுத் தேர்வு ரத்து. பொறியியல் கல்லூரிகளில் கட்டணம் குறைப்பு. அண்ணா பல்கலைக்கழகம் போன்ற தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் திருச்சியிலும், கோவையிலும் துவக்கப்படுதல்; தமிழில் கட்டாயப் பாடம் முதல் வகுப்பில் தொடங்கி படிப்படியாக 10–வது வகுப்பு வரையில்; இப்படித் தமிழ் வளர்ச்சிக்காகப் பல்வேறு நிலைகளை உருவாக்கி இருக்கிற நம்முடைய கலைஞருடைய அரசு, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக கல்வியியல் ஆய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகத்தில் 150–வது .ஆண்டு விழா நடைபெற இருப்பதையொட்டி, தான் வந்த பாதையை மறந்து விடாமல், திராவிட இயக்கத்தினுடைய உணர்வுகளை, எழுச்சிகளை, கருத்துகளை, சமுதாயச் சீர்திருத்த உணர்வுகளை, திராவிட இயக்கத்தால் இந்த நாடு பெற்ற பலன்களை, நம்முடைய முன்னோர்களை எல்லாம் எதிர்காலச் சந்ததியினர் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற உணர்வோடு, திராவிட இயக்கம் உலக நாகரிகத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்த ஓர் அமைப்பு; எனவே அவற்றைத் தெரிந்துகொள்வதற்காக, சிந்தனைகளை, உணர்வைக் கொட்டுவதற்காக, திராவிட இயக்க ஆய்வு மையம்; அதேபோல மனிதர்களுக்கு மாத்திரமல்ல, பறவைகளுக்கும் காய்ச்சல் வந்தால் தடுப்பதற்கான அறிவு மையம். அதேபோல், ஊரகப் பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகப் பல் மருத்துவக் கல்லூரி, செவிலியர் கல்லூரி, உடல் இயக்க மருத்துவக் கல்லூரி, இப்படிக் கல்லூரிகளை உருவாக்கி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது, விழுப்புரத்தில் மருத்துவக் கல்லூரி, மேட்டூரிலும், வால்பாறையிலும் கலைக் கல்லூரி; ஆக கல்லூரிகள்மூலம் கல்வி அறிவு ஊட்டுவதற்கான வாய்ப்பு.

போக்குவரத்துத் துறையை எடுத்துக்கொண்டால் கலைஞரால் கொண்டு வரப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக கடந்த கால ஆட்சியில் மினி பஸ் திட்டம் நிறுத்தப்பட்டது. அந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்து செம்மைப்படுத்துகிற நிலையில் கிராமப் பகுதிகளுக்கு மினி பஸ் பயன்படும். சென்னை மாநகரம் போன்ற



பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைப் போக்குவதற்காக, மெட்ரோ ரயில் திட்டம், உலக அளவில் வானில் பறப்பதற்கான பயிற்சியாளர்களை உருவாக்குவதற்கு ராஜீவ் காந்தி நினைவாக, ராஜீவ் காந்தி விமானவியல் உயர் கல்வி மற்றும் விமான ஓட்டிகள் பயிற்சி அகாடமி என, இப்படிப் பல்வேறு நிலைகளை உருவாக்கி இருக்கிறீர்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, அரசுப் பணியாளர்கள், தொழிலாளர்கள், மீனவர்கள், இப்படி எல்லாத் தரப்பு மக்களும் பயன்பெறுகிற வகையில் அறிவிப்புகளைத் தந்திருக்கிற தலைவர் கலைஞர் அவர்களே, பரிதிமாற்கலைஞர் அவர்கள் செம்மொழியாக்கிட வேண்டும் என்று 150 ஆண்டுகளுக்கு முன்னால் விடுத்த கோரிக்கை–பரிதிமாற்கலைஞரால் வைக்கப்பட்ட கோரிக்கை, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மத்தியிலே நல்லாட்சி அமைத்து, தமிழைச் செம்மொழியாக்கி, செம்மொழி என்று முதல் குரல் கொடுத்த பரிதிமாற்கலைஞருக்கு நினைவுச் சின்னம் அமைப்பதாக அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது மாத்திரமல்ல, காலங்காலமாக நீங்கள் வாழ்த்துக்குரியவர்கள் என்பதற்கு அடையாளமாகும்.

அதைப்போல, கற்புக்காசி கண்ணகி சிலை முந்தைய ஆட்சியில் என்ன பாவம் செய்ததோ! அந்தக் கண்ணகி சிலை இன்றைக்குக் கம்பீரமாக கடற்கரையில் நிற்கிற ஓர் அற்புதமான வாய்ப்பை நிகழ்த்திக் காட்டியிருக்கிறீர்கள். செவாலியே சிவாஜி கணேசனுக்கு சிலை வைத்து, தமிழ் இனமான உணர்வை நிலைநாட்டியிருக்கிறீர்கள். வேலூர் சிப்பாய்க் கலகத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு நினைவுத் தூணை உருவாக்கி, மேலும் அவர்கள் பற்றிய விவரங்கள் பாடத்தில் இடம் பெறவும், தொடர்ந்து ஒரு நினைவுச் சின்னம் உருவாக்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறீர்கள்.

நீங்கள் தமிழ்நாட்டுக்கு மாத்திரம் தலைவர் அல்ல. இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற எல்லாத் தியாகிகளையும் பாராட்டுகிறவர் என்பதற்கு அடையாளமாக, பகத்சிங் நூற்றாண்டு விழாவையொட்டி, ஆண்டுதோறும் மாநிலத்தின் முக்கிய நகரங்களில் விழா நடைபெறும் என்று அறிவித்திருக்கிறீர்கள். அம்பேத்கர் திரைப்படத்திற்கு, தமிழாக்கம் செய்தால் ரூபாய் பத்து இலட்சம் அளிக்கப்படும் என்று அறிவித்த நீங்கள்—தமிழர் தலைவர், தந்தை பெரியாருடைய வாழ்க்கை வரலாறு, இனமுரசு சத்தியராஜ் நடிக்க, அது தமிழில் படமாக வரவிருக்கிறது. அந்தப் படத்திற்கு 95 இலட்சம் ரூபாய், அவருடைய வயதைக் குறிக்கும் வகையில் வழங்குவதாக

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227379
சென்னை-600 008

அறிவித்திருப்பது, உங்களுடைய இனமான உணர்வை, தலைவர்மீது பற்றும், பாசமும் இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) என்றென்றைக்கும் பறைசாற்றுவதாக அமைந்திருக்கிறது என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே நினைவுபடுத்திக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–30*

தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை முன்னணிக்குக் கொண்டு வர வேண்டுமென்பதற்காக, ஓய்வு எடுப்பதற்காக பெங்களூர் சென்றபோதுகூட, ஓய்வுக்கே ஓய்வு கொடுத்துவிட்டு, நீங்கள் மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சரோடு தொடர்பு கொண்டு, அங்கே இருக்கிற தொழில் அதிபர்களைச் சந்தித்து, தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறீர்கள்.

அதேபோல, சென்னை, தரமணியில், இரண்டாவது TIDEL PARK–ஐ உருவாக்க இருக்கிறீர்கள். சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை உருவாக்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். இதன்மூலம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி, வளம் பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

இறுதியாக, எல்லாவற்றுக்கும் மேலாக மகளிர் நலன் காப்பதற்காக, காலங்காலமாக, பெரியார் காலந்தொட்டு இந்த இயக்கம் பாடுபடுகிறது. பெரியாருடைய கனவை நனவாக்குகிற வகையில், பெண்களுக்கு சொத்திலே சம உரிமை, பெண்களை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்ற சட்டம், 33 சதவீத இட ஒதுக்கீடு பெண்களுக்குத் தேவை, பாராளுமன்றத்திலே இந்த ஆண்டே வைக்க வேண்டும் என்று வலியுறுத்துவதற்கான அறிவிப்புகள், இப்படிப் பல்வேறு நிலைகளில் சமூகச் சிந்தனையோடு திட்டங்களை உருவாக்கியிருக்கிறீர்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களை, 1989 ஆம் ஆண்டு நீங்கள் முதலமைச்சராக இருந்தபோது, தருமபுரியில்தான் முதன்முதலாக உருவாக்கித் தந்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றை மாற்றி— உங்களால் 1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள்கூட என்னுடைய சிந்தனையில்தான் தோன்றியது என்று யார், யாரோ தம்பட்டம் அடித்து வரலாற்றை மாற்றி எழுதுகிற கொடுமைக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கிற வகையில், மீண்டும் இன்றைக்கு அந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் புத்துயிர் ஊட்டுகிற வகையில் திட்டங்களை உருவாக்கியிருப்பதை, அறிவித்திருப்பதை, நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.



ஒட்டுமொத்தத்தில் ஒரு வரியில் சொல்ல வேண்டுமானால், அகதிகள் முதல் அரவாணிகள் வரையில் திட்டங்களைப் போட்டு, தமிழ்நாட்டினுடைய எல்லாத் தரப்பு மக்களும் வாழ்வில் வளம் பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கியிருக்கிறீர்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே சொல்லி, இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நிதிநிலை அறிக்கை, அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரமாக இருக்கிறது. தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையால் பயன் பெறாதவர்கள் இந்த நாட்டில் யாருமில்லை. சாதாரண அறிவு ஜீவிகளாக இருந்தாலும் சரி, ஆடு, மாடுகளாக இருந்தாலும் சரி, கருவறையில் இருந்து கல்லறை வரையில் எல்லாத் தரப்பு மக்களும் பயன்பெறுகிற அற்புதமான நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிற இந்த நேரத்தில், தமிழ்நாட்டு மக்கள் சார்பாக, பயனாளிகள் சார்பாக உங்களை நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதியின் சார்பாக இரண்டொரு கோரிக்கைகளை மாத்திரம் வைத்து, விடை பெற விரும்புகிறேன். நீங்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்பதற்கு முன்னால், தருமபுரியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, வாக்குறுதி தந்தீர்கள். தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை, தவிக்கிற வாய்க்குத் தண்ணீர் தர வேண்டும் என்பதற்காக, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவேன் என்று பொது மக்களுக்கு முன்னால் நீங்கள் அறிவித்தீர்கள். சொன்னதைச் செய்யக்கூடிய உத்தமத் தலைவர் கலைஞர் அவர்களே, நீங்கள் அன்றைக்குச் சொன்னீர்கள். சொன்னபடி நிதிநிலை அறிக்கையில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுத்து, ஜப்பான் நாட்டு நிறுவனத்திடம் கடன் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளையெல்லாம் நடத்திக்கொண்டு இருக்கிறீர்கள். அண்ணா பிறந்த நாள், பெரியார் பிறந்த நாள் எப்படி நமக்குத் திருவிழாவோ, அதைப்போல, அந்த மாவட்டத்து மக்களுக்கு, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத் தொடக்க விழா நாள்தான் அவர்களுக்குப் பொன்னாள். உடனடியாக, விரைவிலே அந்த நன்னாளை உருவாக்கித் தாருங்கள் என்று உங்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தருமபுரி மாவட்டம் வறட்சியினால் வாடுகிற பகுதி. அறியாமை மக்கள் அதிகம் இருக்கிற பகுதி. இன்னும் சொல்லப் போனால், தருமபுரி மாவட்டத்தில், குறிப்பாக 5 தொகுதிகளில் இருப்பது ஒரேயொரு கல்லூரி. தருமபுரியிலே மாத்திரம்தான் அரசு அறிவியல்

கலைக் கல்லூரி இருக்கிறது. எனவே, அரூர், மொரப்பூர் பகுதியை மையமாக வைத்து, மொரப்பூர் தொகுதியில் ஒரு அறிவியல் கலைக் கல்லூரியை உருவாக்கித் தர வேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாவட்டந்தோறும் மருத்துவமனைகள் உருவாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படி மாவட்டந்தோறும் மருத்துவமனைகள் உருவாக்கப்படுகிறபோது, வறட்சியால், வறுமையால் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிற தருமபுரி மாவட்டத்திற்கு முன்னுரிமை தந்து, வருகிற ஆண்டில் அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி உருவாக்கித் தரவும் கேட்டுக்கொள்கிறேன். தருமபுரியிலே தொழில் வளம் இன்றைக்குக் குறைவாக இருக்கிறது. அங்கே தொழில் வளத்தைப் பெருக்குவதற்காகவும், நடவடிக்கை எடுத்துத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் பெரும்பள்ளம் அணைக்கட்டு, அதேபோல பொதியம்பள்ளம் அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று, ஓசூர் பகுதி பெங்களூரை ஒட்டியிருக்கிற பகுதி. பெங்களூர் நகரம் மிகப் பெரிய அளவிற்குத் தொழில் வளத்திலே வளர்ந்துகொண்டிருக்கிற மாநிலமாக இருக்கிறது. எனவே, ஓசூர் பகுதியில், சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை, இந்த ஆண்டு தமிழகத்தில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிற தலைவர் கலைஞர் அவர்களே, அந்தச் சிறப்புத் தொழில் பெருவழிச் சாலையை ஓசூர் பகுதியிலே உருவாக்கித் தந்து, ஓசூரை மிகப் பெரிய தொழில் நகரமாக மாற்றித் தாருங்கள் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லாதது எதுவுமில்லை, இனி இருக்கப் போவதும் எதுவுமில்லை. கலைஞர் அவர்களே, உங்களுக்கு ஒரு சுய நலம், தன் காலத்தில் செய்யாததை உலகத்தில் யாரும் செய்யக்கூடாது என்ற உணர்வோடுதான் எல்லாத் தரப்பு மக்கள் எல்லோருக்கும் திட்டங்களைத் தீட்டிவிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்ன வேண்டும் என்று கேட்பதற்கு இனி இந்த நாட்டில் யாரும் இல்லை, இதில் குறை கண்டால், அவர்களிடத்தில் ஏதோ குறை இருக்கிறது. அந்தக் குறையை நீக்குவதற்கு நீங்கள் பாடுபட வேண்டுமென்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 நிதிநிலை அறிக்கையின்மீது, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, இந்த விவாதத்திலே கலந்துகொண்டு, கருத்துரை ஆற்றுவதற்கான வாய்ப்பினைத் தந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கும், தங்களுக்கும் என் நன்றியினை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி இந்த மன்றத்திலே இருக்கின்ற ஆளுங்கட்சி உறுப்பினர்கள், அவர்களுக்கு ஆதரவாக இருக்கின்ற எங்களைப் போன்றவர்கள், முக்கிய பிரதான எதிர்க்கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்களுடைய கருத்துகளைவிட, நாட்டு மக்கள் என்ன சொல்கிறார்கள்; இந்தத் திட்டத்தின்மூலம் பயன் பெறுகின்ற பயனீட்டாளர்கள் என்ன நினைக்கிறார்கள்; தமிழகத்தின் வளத்தை உருவாக்குகிற மிகப் பெரிய தொழில் அதிபர்கள், சமூகத்தின் அடித்தளங்களில் பணியாற்றுகின்ற தொண்டு நிறுவனங்கள், தமிழகத்தினுடைய எதிர்காலத்தில் அக்கறை கொண்ட சமூக ஆர்வலர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதுதான் முக்கியம்.

நேற்றைய மாலைப் பத்திரிகை, அதற்கு முந்தைய நாள் பத்திரிகை, இன்றைய காலைப் பத்திரிகைகளைப் பார்க்கின்றபோது, நானும் தேடித் தேடிப் பார்க்கிறேன், அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள், பதவிகளுக்கும், அதிகாரங்களுக்கும் ஆசையில்லாதவர்கள், எங்கேயாவது இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஏதாவது குறை ஒன்றைச் சொல்லியிருப்பார்கள் என்று உற்றுப் பார்த்தேன். அப்படிப் பார்க்க, பார்க்க, நான் குறை ஒன்றும் காணவில்லை என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடனே எங்களுடைய கருத்தைக் கேட்ட பத்திரிகையாளர்களிடம் நான் சொன்னேன்; அரவாணிகளிலிருந்து அகதிகள் வரை, கருவறையிலிருந்து கல்லறை வரை, ஒரு தனி மனிதனுடைய வாழ்க்கையில், ஒரு சமூகத்தின் ஓட்டத்தில், வாழ்வின் வெளிச்சத்தில் என்ன நிலைகளைப் பற்றியெல்லாம் ஓர் அரசு சிந்திக்க வேண்டுமோ, யாரைப் பற்றியெல்லாம் ஓர் அரசு கவலைப்பட வேண்டுமோ, எவர்களுக்கெல்லாம் அரசு உதவி அதிகம் தேவையோ, அப்படிப்பட்ட ஆதரவற்றவர்களை, வழியற்றவர்களை, திக்கற்றவர்களை,

ஏன் சமூகத்தால் மறுக்கப்பட்டு, even சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களைக்கூட, தங்கள் கருணையில் ஏற்றுக்கொண்டு, அற்புதமான திட்டங்களை வைத்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுவதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரே ஒரு கவிதை வரிகள்தான் என் ஞாபகத்திற்கு வருகின்றன. அந்தக் கவிதை வரிகளை மட்டும் இந்த மன்றத்திலே என்னுடைய பாராட்டுரையாகப் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன்:

"டாக்டர் கலைஞர் மக்களை நம்பினார்,
மக்கள் டாக்டர் கலைஞரை நம்பினார்கள்,
நம்பிக்கை நார் மட்டும் நம் கையில் இருந்தால்
உதிர்ந்த பூக்கள்கூட ஒவ்வொன்றாக வந்து ஒட்டிக்கொள்ளும்"

என்ற கவிஞனின் வார்த்தைகள்தான், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரை நான் இந்த மன்றத்திலே பதிவு செய்கின்ற வார்த்தைகள்.

*முற்பகல் 10–40*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட்டினுடைய ஒட்டுமொத்தமான நிலைப்பாடுகளைப் பார்க்கின்றபோது, வரக்கூடிய ஆறு மாதங்கள், ஏறக்குறைய இந்த ஆறு மாதங்களிலே தமிழகம் முழுவதும் சந்திக்க வேண்டிய மிகப் பெரிய சவால்கள், ஒரு மிகப் பெரிய சோதனையான காலகட்டத்திலே இந்த நாடும், தமிழகமும் இருக்கிறது. உலகம் முழுவதும் சந்தைப் பொருளாதாரத்தோடு போட்டி போட்டு, சாமானிய மக்கள் வாழ்க்கையிலே மேம்பாட்டைத் தருவதற்கான ஒரு கருவியாக இந்த நிதிநிலை அறிக்கை பயன்பட வேண்டும்.

நம்முடைய மரியாதைக்குரிய நிதியமைச்சருக்கும், நிதி அமைச்சகத்தினுடைய செயலாளருக்கும் என்னுடைய பாராட்டுக்கள். 80 வயதிற்கு மேற்பட்ட பேராசிரியர் அவர்கள் ஓர் அற்புதமான மாணவனாக இந்த அவைக்கு வந்து, திறமையாக ஒரு தேர்வு எழுதி, இந்தத் தேர்வினைத் திருத்திய சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல; பொது மக்கள் மத்தியிலும், முதல் தரமான மாணாக்கன் என்ற பெயர் பெற்ற பேராசிரியரையும் நான் இந்த அவையிலே பாராட்ட விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாக இருந்த நிதித் துறையினுடைய செயலாளர் மற்றும் அதிகாரிகளுக்கும் இந்தப் பாராட்டு. ஏனென்று சொன்னால், நான் ஏற்கெனவே இந்த அவையிலே பதிவு



செய்ததுபோல, ஒரு முக்கியமான காலகட்டத்திலே தமிழகத்தை முன்னெடுத்துச் செல்கின்ற பணி; ஒரு சிறிய தொய்வுகூட நிர்வாகத்தில் வந்துவிட்டால், தமிழகம் பின்தங்கிவிடும். இழக்கின்ற ஒவ்வொரு மணித்துளியும், இழக்கின்ற ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மாதமும், இந்த தேசத்தின் பொருளாதாரத்தில் நம்மை மிகவும் பின்னுக்குத் தள்ளிவிடும் என்கிற அற்புதமான, கவனமான, கரிசனமான உணர்வோடு ஒவ்வொரு துறையையும் தேடித் தேடிப் பார்த்து, அது விவசாயமாக இருந்தாலும் சரி, அது வியாபாரமாக இருந்தாலும் சரி, அது கல்வியாக இருந்தாலும் சரி, உழைக்கின்ற தொழிலாளர் வர்க்கமாக இருந்தாலும் சரி, மாணவர்களாக இருந்தாலும் சரி, இளைஞர்களாக இருந்தாலும் சரி, நெசவாக இருந்தாலும் சரி, எந்தத் துறையையும் அரசினுடைய கவனத்திலிருந்து விட்டுவிடக்கூடாது என்பதற்காக மிகக் கவனமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்ட, அற்புதமான இந்த ஆண்டிற்கான காலப் பெட்டகம் என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், இதை நாம் எப்படிச் செயல்படுத்தப் போகிறோம்? .

எங்கள் திருநெல்வேலி மாவட்டக் கிராமங்களிலே ஒரு பழமொழி சொல்வார்கள். ''சட்டி நிறைய சமையல்; அகப்பை மட்டும் ஓட்டை'' என்று சொல்வார்கள். ஒவ்வொரு துறைக்கும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை அள்ளிக் கொடுத்திருக்கின்றீர்கள். ஓர் ஆட்சி மாற்றம் என்பது ஆட்களின் மாற்றம் மட்டுமல்ல; அன்று அவர் முதலமைச்சராக இருந்தார், இன்று இவர் முதலமைச்சராக இருக்கிறார், அல்லது அன்று அவர் அமைச்சராக இருந்தார், இன்று இவர் அமைச்சராக இருக்கிறார், அல்லது அன்று அவர் அதிகாரியாக இருந்தார், இன்று இவர் அதிகாரியாக இருக்கிறார் என்று அமைச்சர்கள் மாற்றமும், அதிகாரிகள் மாற்றமும் மட்டுமே ஆட்சி மாற்றம் அல்ல; ஆட்சி மாற்றம் என்பது ஓர் அரசாங்கத்தின் சிந்தனையில், ஓர் அரசாங்கத்தின் அணுகுமுறையில், ஓர் அரசாங்கத்தின் செயல்பாட்டில் மாற்றம் வேண்டும். அதுதான் ஆட்சி மாற்றம்.

என் அன்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். கடந்த 67 நாட்களாக அந்த ஆட்சி மாற்றத்தின் விளைவுகளைத் தமிழகம் உணர்ந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஓரிரு செய்திகளை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு

செய்திருந்தார்கள். அந்த ஆய்வுக் கூட்டத்திலே, இவ்வளவு பெரிய செய்திகள், இவ்வளவு பெரிய விஷயங்கள் நமக்குக் கிடைக்குமா என்று ஆச்சரியப்படக்கூடிய அளவிற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு ஊராட்சியிலும், ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும், நகராட்சியிலும் இருக்கின்ற அன்றாட மக்கள் பணிகளுக்குத் தேவையான அத்தனை செய்திகளையும், இப்படியொரு அரங்கிலே இவ்வளவு அமைச்சர்கள், இவ்வளவு அதிகாரிகள், ஒரு நகரப் பஞ்சாயத்தின் தலைவரிலிருந்து, ஒரு நகர்மன்றத் தலைவரிலிருந்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் உட்கார்ந்து, 6 மணி நேரம் விவாதித்த அந்தக் காட்சியை நான் இன்றும் நினைத்துப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதையெல்லாம் இங்கே எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், அரசு நிர்வாகம் அப்படியிருக்கிறது. அந்த நிர்வாகத்தைத் தூண்டிவிட்டு, முடுக்கி விடுவதற்கான பணிகளை நாம் செய்ய வேண்டும். அந்தப் பணிகளைச் செய்தாலொழிய, இங்கே தந்திருக்கின்ற அற்புதமான பட்ஜெட்டிலே நாம் தந்திருக்கின்ற கோடிக்கணக்கான பணம் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ, அவர்களுக்குப் போய்ச் சேராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்கான அரசு இந்த அரசு. கிராமங்களிலே இருக்கின்ற சாதாரணமான, இருப்பதற்கு வீடற்றவர்கள், அன்றாடம் வாழ்க்கையே கேள்விக்குறியாக, காலையில் எழுகின்றபோதும், மாலையில் படுக்கின்றபோதும், இன்றைக்கு எதை உண்போம் என்கிற கேள்வியோடு எழுந்து, நாளை எப்படி உண்போம் என்கிற கேள்வியோடு படுக்கப் போகிற ஒவ்வொரு மனிதனுக்காகத்தான் இந்த அரசு சிந்திக்கிறது. அதற்காகத்தான் திட்டம் தீட்டுகிறோம்.

இன்றைக்கு மத்தியிலே இருக்கின்ற அன்னை சோனியா காந்தியின் வழிகாட்டுதலிலே செயல்படுகின்ற டாக்டர் மன்மோகன் சிங் அரசாக இருந்தாலும் சரி, டாக்டர் கலைஞரின் தலைமையிலே செயல்படுகின்ற தமிழக அரசாக இருந்தாலும் சரி, தமிழகத்திலே இருக்கின்ற கடைசி மனிதனைத்தான் ஒவ்வொரு மணி நேரமும் சிந்தித்துக்கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளம்தான் இந்த பட்ஜெட். நான் இந்த 'சட்டியிலே சமையல், அகப்பையிலே ஓட்டை' என்று சொன்னேனே, கடந்த ஐந்தாண்டுகளாக இருந்த ஆட்சியையும், இதையும் நான் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை. அந்தப் பிரேத விசாரணைக்குள்ளே, பரிசோதனைக்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால், நாளை இந்த அரசாங்கம் எப்படி நடக்க வேண்டும் என்று சொல்லவேண்டிய பொறுப்பு எனக்கிருக்கிறது.



கடந்த காலத் தவறுகளிலிருந்து படித்துக்கொள்ளாத யாரும், நிகழ்காலத்தில் வெற்றிகளை ஒரு நாளும் சாதித்துவிட முடியாது. எனவே, இந்த அரசிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு மட்டும் நான் சொல்லவில்லை. இந்த அரசுக்கு ஆதரவாக இருக்கின்ற எங்களையும் நான் சேர்த்துச் சொல்கின்றேன்: எங்களுக்கு ஒரு பொன்மொழியை நாங்கள் முன்னுதாரணமாக வைத்துக் கொள்ளுகின்றோம். 'Perform or perish'—'செய்து முடிப்போம், அல்லது செத்து மடிவோம்'. இந்த வரைமுறையை முன்னே வைத்து, அடுத்த ஐந்தாண்டுகளை நாம் ஒவ்வொரு நாளாக நகர்த்தினால், நிச்சயமாக நான் சொல்லுவேன்; டாக்டர் கலைஞர் அவர்கள், எனக்கு முன்னாலே பேசிய பெருமைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. முல்லைவேந்தன் அவர்கள் சொன்னதுபோல, இனிமேல் தமிழகத்தில் செய்வதற்கு ஏதுமே இல்லை என்கின்ற அந்த முடிவோடு இந்த ஆட்சி நடக்கும் என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை.

*முற்பகல் 10–45*

ஒவ்வொரு திட்டமும் சேர வேண்டிய பயனீட்டாளர் யார்? கிராமங்களிலே வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம். அதற்கு மத்திய அரசு கோடிக்கணக்கான ரூபாய்களை அள்ளித் தருகிறது. மத்திய அரசோடு மாநில அரசும் அதற்காகத் தமது பங்கீட்டுத் தொகையைக் கொடுக்கிறது. இதற்காக ஒவ்வொரு திட்டத்திற்கும் சில செயல்பாடுகளை வைத்திருக்கிறோம். இந்தச் செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும்?

Indira Aawaaz Yojana என்ற ஒரு திட்டம். இந்தத் திட்டத்திலே, வீடு இல்லாத ஏழைகளுக்கு வீடு கொடுக்கப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், மற்ற இதர வகுப்பில் மிகவும் பின்தங்கிய ஏழ்மை நிலையில் இருக்கின்ற மக்கள், இவர்களுக்காக வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே உள்ளவர்கள் என்று ஒரு பட்டியலைத் தயார் செய்ய வேண்டியது ஒவ்வோர் அரசாங்கத்தின் பொறுப்பு. நான் இந்த மன்றத்திலே கேட்கிறேன், அந்தப் பட்டியல் எங்கே இருக்கிறது? ஐந்தாண்டுகள் ஆட்சி நடத்திய, நிருவாகம் நடத்திய அதிகாரிகளை நான் கேட்கிறேன்; அப்படிப்பட்ட பட்டியல் இல்லாமல் வீடுகள் ஒதுக்கக் கூடாது என்று இருக்கிறதே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வந்திருக்கின்றபோது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களை சாட்சியாகவே வைத்துக்கொண்டு நான் கேட்டேன், அந்தப் பட்டியல் வேண்டுமென்று

கேட்டேன், அவரோடு வந்திருந்த அதிகாரிகள் அன்றையதினம் உத்தரவு போட்டார்கள், அந்தப் பட்டியல் உடனே வழங்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைய தேதி வரை அந்தப் பட்டியல் வந்து சேரவில்லை. அந்தப் பட்டியல் இல்லை. அந்த அதிகாரிகளை நான் குறை சொல்லவில்லை. ஏனென்று சொன்னால், இந்த அதிகாரிகளுக்கான அரசு நிருவாகத்தின் தலைமையைக் கொடுக்கின்றவர்கள் அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையை உணர்ந்திருந்தால் அந்தப் பட்டியலை ஏன் இன்னும் சரியாகத் தயார் செய்யவில்லை என்பது மிகப் பெரிய கேள்விக்குறி.

இந்தப் பணம் ஏழைகளுக்கான பணம், ஒவ்வொரு ரூபாயும், ஒவ்வொரு செங்கல்லும், ஒரு ஏழையினுடைய துயரத்தைத் துடைப்பதற்காக மத்திய அரசும், மாநில அரசும் இந்த நாட்டு மக்கள் வரிப் பணத்திலிருந்து கொடுத்த பணத்தினை யாரோ சிலர் ஊதாரித்தனமாகத் தங்கள் உல்லாசங்களுக்குப் பயன்படுத்துவதற்காக எந்தவிதமான வரைமுறையும் இல்லாமல் கடந்த நாட்களிலே ஒதுக்கப்பட்ட வீடுகளினுடைய சரித்திரத்தைப் பார்த்தாலே ஒரு பெரிய திட்டத்தினுடைய மாபெரும் நிதி எந்தப் பள்ளத்திற்குள் போய் இருக்கிறது என்று தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) நான் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே... (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அவர் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். நீங்கள் பேசுவது record ஆகாது, உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, ஒரு வாக்கியத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு வாக்கியத்தில் முடியுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார். அதற்காகத்தான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடு) பட்டியல் இருக்கிறது. எப்படித் தேர்வு செய்கிறார்கள் என்ற அடிப்படை விதியே தெரியாமல் பேசுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள். உங்கள் கருத்தை மாத்திரம் சொல்லுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் உதவி பெற்று தமிழகத்திலே கட்டப்படுகின்ற வீடுகள் கட்டுவதிலே, பயனாளிகளைத் தேர்வு செய்வதிலே, பெரிய





முறைகேடு என்று ஒரு தவறான தகவலை எந்தவித ஆதாரமுமின்றி, அடிப்படையுமின்றி, இன்னும் சொல்லப் போனால், அந்த விதிமுறைகளை அடி தெரியாமலே, ஏதோ வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டிருக்கிறார். பொறுப்பு வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர் அதன் விதிமுறைகளைத் தெரிந்துகொண்டு பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலிலே, அந்தப் பயனாளிகளைத் தேர்வு செய்வது அரசு அல்ல. ஆங்காங்கே இருக்கின்ற மக்களுடைய பிரதிநிதிகள், ஊராட்சி மன்றத் தலைவர்கள்தான் தீர்மானம் நிறைவேற்றி, அங்கே பயனாளிகளைத் தேர்வு செய்கிறார்கள். அதிலே ஊராட்சி மன்றத் தலைவர்கள், எல்லா அரசியல் கட்சி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். இனி நீங்கள் பேசுவது record ஆகாது. திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள், இந்த வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே உள்ள பட்டியல் எப்படித் தயார் செய்யப்பட்டது என்பதை, மாண்புமிகு உறுப்பினர் ஆதாரமில்லாமல் பேசுகிறார் என்று சொன்னார். ஆதாரம் இல்லாமல் இந்த அவைக்கு வரக்கூடிய அளவிற்கு நான் விவரமற்றவன் அல்ல. நான் எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக, என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மூன்று ஊராட்சி ஒன்றியங்கள், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், தென்காசி ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஒரு பகுதி, செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தினுடைய பகுதி, நானும், இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் கருப்பசாமி பாண்டியன் அவர்களும் சேர்ந்து எங்களுக்குள் பகிர்ந்துகொள்கின்ற இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள். இந்த ஒன்றியங்களிலே இருக்கின்ற ஒவ்வொரு கிராமத்திற்கும் இந்தப் பட்டியலை நான் வாங்கி, இந்தப் பட்டியல் அந்த மன்றத்திலே—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சாட்சியாக இருக்கிறார்கள். அன்றையதினம் அந்தக் கூட்டத்திற்கு வந்த உங்கள் இயக்கத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், நகர்மன்றத் தலைவர்களும் சாட்சியாக இருக்கிறார்கள். அன்றையதினம் அங்கே ஊரக வளர்ச்சித் துறையினுடைய செயலாளராக வந்த, நம்முடைய மரியாதைக்குரிய அசோக் வர்தன் ஷெட்டி அவர்கள் பகிரங்கமாக எச்சரித்தார்கள், ஏன் இந்தப் பட்டியல் உங்கள் வசம்

இல்லை என்று கேட்டார்கள். அங்கே வந்த ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், நாங்கள் இதுவரை தயார் செய்யவில்லை, எப்படியாவது சீக்கிரம் தந்துவிடுகிறோம் என்று அந்த அவையிலே சொன்னார்கள். (குறுக்கீடு) நான் சொல்லி...

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் இடையிலே குறுக்கிடக்கூடாது, உட்காருங்கள். நீங்கள் பிறகு பேசுங்கள். பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள். ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, இடையிலே நீங்கள் குறுக்கிடாதீர்கள். உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலேயிருந்து என்னிடம் அந்தப் பட்டியலைக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். தென்காசி ஒன்றியத்திலிருந்து அந்தப் பட்டியல் இன்னும் எனக்கு வரவில்லை. அதில், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் கொடுத்த பட்டியலை ஒரு சோதனைக்காக எடுத்து, ஒரு ஊராட்சி மன்றத் தலைவரிடம் கொடுத்து, அந்தப் பட்டியலை, கொடுக்கப்பட்ட பட்டியலை நான் சரிபார்க்கச் சொன்னேன். அந்தப் பட்டியலிலே இருக்கின்ற அதிர்ச்சியான செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில், சீவநல்லூர் கிராமத்திலே, வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே உள்ளவர்களை அடையாளப்படுத்துகின்றபோது, அந்தக் கிராமத்திலே மொத்தம் 166 பேர் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே உள்ளவர்களாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே 4 பேர்தான் தாழ்த்தப்பட்டவர்கள்.

இதைப்போல, இலத்தூர் என்கிற கிராமத்திலே, 460 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன. அதில் 7 பேர் மட்டுமே வறுமைக் கோட்டின் எல்லைக்குக்கீழ் உள்ளவர்களாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய அநீதி? இந்த சமூக அநீதிக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார்?

இன்னும், Indira Aawaaz Yojana என்கிற திட்டத்தின்கீழ், வீடுகள் யாருக்கு வழங்கப்பட வேண்டுமென்ற பட்டியலை ஒவ்வொரு கிராம சபையும் தயார் செய்து, அதை அந்தக் கிராமப் பஞ்சாயத்தி[illegible]





வாசலில் ஒட்டி வைத்து, அதற்கு ஆட்சேபனைகளை ஏற்று, அதை மீண்டும் வெளியிட்டு, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு நிரந்தரமான பட்டியலை வைத்திருக்க வேண்டும். அந்தப் பட்டியலில் உள்ளவர்களுக்கு மட்டும்தான், அந்த வரிசைப்படி வீடுகள் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் அந்தத் திட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னிடம் இருக்கிற விவரங்களை உங்களுக்குத் தருகிறேன். அந்தப் பட்டியலிலே இருக்கும் ஒரே நபருடைய பெயர், நான்கு இடங்களிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது, மூன்று இடங்களிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே பெயர் இரண்டு கிராமங்களிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு பஞ்சாயத்துக்களிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தால், இங்கே டாக்டர் கலைஞர் அவர்கள், பேராசிரியர் அவர்கள், நம்முடைய அமைச்சர் பெருமக்கள், நாம் எல்லோரும் ஒரு மாத காலமாக உட்கார்ந்து, விவாதித்துத் தருகின்ற கோடிக்கணக்கான பணம், மத்திய அரசு தருகின்ற ஆயிரக்கணக்கான கோடி பணம், இந்த நாட்டு மக்களுடைய வரிப் பணம் எந்த ஏழையினுடைய கண்ணீரைத் துடைக்கும்? எனவேதான், நான் மீண்டும் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, உடனடியாக இந்த வறுமைக் கோட்டின் ,எல்லைக்குக் கீழே உள்ளவர்களுடைய பட்டியலை, எந்தவிதமான அரசியல் கலப்பும் இல்லாமல், சாதி, சமூகம், மதம் என்கிற எந்த வேறுபாடும் இல்லாமல், உண்மையிலேயே ஏழ்மையையும், வறுமையையும் மட்டுமே கருத்தில் கொண்டு ஒரு பட்டியலைத் தயார் செய்ய வேண்டும் என்று நான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு, அவர்களுடைய கவனத்திற்கு வைக்க ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதிர்ச்சி தரக்கூடிய ஒரு செய்தியை அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். இதை ஆதாரத்தோடு காலையிலே என்னிடத்திலே அவர்கள் காட்டியிருக்கின்றார்கள். நான் அப்பொழுதே அவருக்குச் சொல்லியிருக்கின்றேன். அதை இந்த அவைக்குச் சொல்வதன்மூலம், தமிழ்நாட்டு மக்களுக்குச் சொல்வதாகக் கருதிச் சொல்கின்றேன். மிகத் தவறான முறையில், வேண்டுமென்றே திட்டமிட்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு அந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, கோடிக்கணக்கான ரூபாய் நல்ல காரியத்திற்காகச் செலவிடப்பட வேண்டியது, நச்சு நினைப்பினர்களால்

தீய காரியங்களுக்காக, தீய வழியிலே போயிருக்கிறது என்பதற்கு இதைவிட ஆதாரபூர்வமான சான்று இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எந்தவொரு நல்ல காரியமாக இருந்தாலும், சமூகப் பணியாக இருந்தாலும், வீடு வழங்குவதாக இருந்தாலும், அதற்கு ஒரு அளவுகோல், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு என்ற அளவுகோல் வைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், அந்த அளவுகோல் சரியானதாக இருக்க வேண்டும். அது இல்லாமல் தயாரிக்கப்பட்டிருப்பதால், இந்த அளவுகோல்களை எல்லாம் முறித்தெறிந்துவிட்டு இந்த அரசு மீண்டும் ஒரு மறு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏதாவது பதில் சொல்ல வேண்டுமென்றால், பிறகு சொல்லுங்கள். நீங்கள் பிறகு சொல்லலாம் அல்லவா? உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கீடு இருந்தால் time தானே ஆகிறது? (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டைப் பற்றி ஆய்வு செய்து தயார் செய்த பட்டியல், எந்த ஆண்டிலே இது தயாரிக்கப்பட்டது, எப்போது இந்த மாநில அரசு மத்திய அரசுக்கு அதைப் பரிந்துரை செய்தது என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி, யோஜனா திட்டம். மத்திய அரசாங்கம் சொன்னதற்குப் பிறகு 35 கிலோ அரிசி வேண்டுமென்று சொன்னதற்குப் பிறகு, 35 கிலோ அரிசிக்குத் தயார் செய்தது கடந்த கால ஆட்சியில்தான். அதிலே தயார் பண்ணிய பட்டியல்தான் இந்தப் பட்டியல். அதிலேதான் 35 கிலோ அரிசி கொடுத்தார்களே தவிர, அதற்கு முன்பு தயாரிக்கப்பட்ட பட்டியல் அல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். செங்கோட்டையன், அவர்கள்தான் சொல்லிவிட்டார்கள் அல்லவா? நீங்கள் பிறகு பதில் சொல்லுங்களேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த வறுமைக் கோடு என்ற பட்டியல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருக்கிறபோது தயார் செய்து மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதே தவிர, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கின்றபோது செய்யப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மன்றத்திலே நடந்த ஒரு செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் சொல்வதை ஒரு வாதத்திற்காக வைத்துக்கொண்டால்கூட, கடந்த 5 ஆண்டுகளும் இந்தத் தவறான பட்டியல் மேல்தான் நீங்கள்—அரசியல்—ஆட்சி நடத்தினீர்களா என்கிற உண்மையினை இந்த மன்றம் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. இரா. விசுவநாதன்:** முதல் அடிப்படை இதுதான். அரசு தேர்ந்தெடுப்பது இல்லை.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அந்தப் பட்டியலைக்கூட...

**திரு. இரா. விசுவநாதன்:** உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் தேர்வு செய்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ஐந்தாண்டுகள், ஒன்று மட்டும், அதாவது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவைத் தலைவர் உத்தரவில்லாமல் நீங்கள் பேசக்கூடாது. அனுமதியில்லை. முதலில் உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தயாரிக்கப்பட்டது என்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டைச் சொல்கிறார்களே தவிர, இந்த யோஜனா திட்டம், 35 கிலோ அரிசி கொடுக்க வேண்டுமென்ற திட்டமே கடந்த ஆண்டு ஜனவரி மாதம்தான் வந்தது. அதற்கப்புறம் அவசரம், அவசரமாகத் தயாரிக்கப்பட்டு, ஆளுங்கட்சிக்காரர்களை அந்தப் பட்டியலிலே சேர்த்து அளித்து, அவர்களுக்கு 35 கிலோ அரிசி கொடுத்ததுதான் உண்மை. உண்மையாக வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் இந்தப் பட்டியலிலே இல்லை என்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பீட்டர். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை, உட்காருங்கள். பீட்டர், பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்காக நான் இந்தத் தவறுகளை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று சொன்னால், கடந்த காலத் தவறுகள் எதிர்காலத்தில் நடக்காமல் இருப்பதற்கான நல்ல பாதையினைப் போட்டுக் கொடுக்கவேண்டிய பொறுப்பு நம் எல்லோருக்கும் இருக்கிறது என்பதற்காகத்தான்; பேசுவதற்காக அல்ல. இது உணவு வழங்கல் துறையிலே உள்ள முக்கியமான, இந்தத் துறை எப்படிச் செயல்படுகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

அடுத்தது, உள்ளாட்சித் துறை எப்படிச் செயல்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டு. இந்த நிதிநிலை அறிக்கையிலே அடுத்த பெரிய நிதி ஒதுக்கீடு, பொதுப் பணித் துறைக்கும், சாலைகள், போக்குவரத்து, Highways–நெடுஞ்சாலைத் துறைக்கும். கடந்த வாரம் நம்முடைய உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்கு வந்திருக்கிறது. அந்த வழக்கிலே நம்முடைய மாண்புமிகு உயர் நீதிமன்ற நிதிபதி அவர்களுடைய தீர்ப்பை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலே, சாலைகளே போடாமல், bill–கள் தயார் செய்து பணம் கொடுக்கப்பட்டதை நம்முடைய உயர் நீதிமன்றம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

*முற்பகல் 11–00*

**THIRU S. PETER ALPHONSE:** "Petitioner alleges that the duo, the two engineers without inviting tenders for the road works secretly issued the work orders through negotiation, but no work was carried out. However, they raised bills and received the money. The Judge found that the then Chief Engineer Thiru A. Saravanavel had inspected the roads in May 2005 and recorded it in his minutes that the so called urgent repair works had not been carried out at all. But the bills were produced and the amounts were claimed by the duo. It was most unpardonable and they should be held wholly responsible for the planned cheating." அந்த நீதிபதி அருமையான வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்; 'planned cheating'—'திட்டமிட்டு ஏமாற்றுதல்'. இந்த வார்த்தைகளை, இவ்வளவு கடுமையான வார்த்தைகளை உயர் நீதிமன்ற நீதிபதி உபயோகித்திருக்க வேண்டுமென்று சொன்னால், இந்த ஒரு இடத்தில் அல்ல, இரண்டு இடத்தில் அல்ல, இந்தப் பணம் என்பது ஏழைகளுடைய வியர்வை. இந்த ஏழைகளுடைய வியர்வைதான் இங்கே வரிப் பணமாக வந்து நிறைகிறது. இந்த ஏழைகளின் வியர்வையை, ஒவ்வொரு பைசாவையும், ஒவ்வொரு ரூபாயையும் செலவழிக்கின்றபோது, ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பொறுப்புணர்வு வேண்டும். போடாத சாலைகளுக்கு எல்லாம், போட்டதாகக் கணக்கு எழுதி பணம் எடுக்கப்படும் என்று சொன்னால், சாலைகளுக்காக நீங்கள் ஆயிரம் கோடி, இரண்டாயிரம் கோடி, மூன்றாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி என்ன பயன்?

அதைப்போல காவல் துறை. இந்த தேசத்தை, தமிழகத்தை வழிநடத்த வேண்டிய, பாதுகாக்க வேண்டிய பொறுப்பு. அங்கே என்ன நடந்திருக்கிறது? போலி F.I.R.–களே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. Forged F.I.R.s... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் முதலில் நீதிமன்றத்தில் இன்னும் வழக்கில் இருக்கின்ற ஒரு செய்தியை இங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொண்டிருக்கிறார். இது ஒரு தவறான முன்னுதாரணத்தை இங்கே ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

இரண்டாவதாக, அந்த வழக்கு, ஒரு தலைமைப் பொறியாளர் தவறு நடந்திருக்கிறது என்றும், அதற்குப் பின்னால் வந்த தலைமைப் பொறியாளர் தவறு நடக்கவில்லையென்றும், இரு மாறுபட்ட கருத்துகளைக் கூறியிருப்பதாகவும் நீதிமன்றத்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே, உண்மை நிலையைக் கண்டறிவதற்குக் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று நீதிமன்றம் கூறியிருக்கிறது. இந்த நிலையில், சட்டமன்றத்தில் இதை ஒரு விவாதப் பொருளாக எடுத்துக்கொண்டு, குற்றம் நடந்ததாகவே பீட்டர் அல்போன்ஸ் இங்கே பதிவு செய்துகொண்டிருக்கிறார். இது ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும். இந்த நடைமுறையைப் பயன்படுத்தி நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்குகளையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் பேச முற்பட்டால், நீதிமன்றத்தினுடைய கண்ணியம் காப்பாற்றப்பட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நீதிமன்றத் தீர்ப்பையோ, நீதிபதிகளைப் பற்றியோ விமர்சனம் செய்யவில்லை. நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட கருத்துகளை, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை, அரசாங்கத்தின் சார்பாகத்தான்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிமன்றத்தின் கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்போது ஒன்றும் தேவையில்லை. (குறுக்கீடு) நீதிமன்றத்தின் கருத்தைச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அதைப்போலவே, உச்ச நீதிமன்றம் கருத்துத் தெரிவித்திருக்கிறது: ஆயிரக்கணக்கான முதல் தகவல் அறிக்கைகள், காப்பீட்டுக் கழகங்களை ஏமாற்றுவதற்காக, மிகப் பெரிய பொறுப்பிலே இருக்கின்ற போலீஸ் அதிகாரிகளும், மற்றவர்களும் சேர்ந்துகொண்டு, முதல் தகவல் அறிக்கைகளையே மோசடியாக அச்சிட்டு, கோடிக்கணக்கான ரூபாய்களைக் கையாடல் செய்ததாக உச்ச நீதிமன்றம் குற்றம் சாட்டியிருக்கிறது:

"Mainly these F.I.R.s were used for false insurance claims and the Police had registered 1,000 odd cases for insurance claims based on these F.I.R.s. In



these, 300 odd cases were charge sheeted and some of them were closed. They involved in a major level of cheating to the tune of crores of rupees, the official said. So, the Supreme Court has ordered the CBI to investigate into the affairs of the whole thing."

நான் எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், நாம் போடுகின்ற திட்டங்கள் இந்த அதிகார அமைப்பின்மூலமாகத்தான், அது உள்ளாட்சித் துறையாக இருந்தாலும் சரி, அது நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும் சரி, அது பொதுப் பணித் துறையாக இருந்தாலும் சரி, போக்குவரத்துத் துறையாக இருந்தாலும் சரி, நாம் கொடுக்கின்ற கோடிக்கணக்கான பணம் இந்த வாய்க்கால்கள் வழியாகத்தான் போக வேண்டும். That is what we call the delivery system. அந்த விநியோக முறை, அடிப்படையிலேயே உளுத்துக் கிடக்கும் என்று சொன்னால், அந்த விநியோக முறையைச் சரி செய்யவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது என்பதற்காகத்தான் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அது இந்த அமைச்சர் பெருமக்களுக்கு இருக்கிறது. இரண்டாவதாக, பல்வேறு திட்டங்களைப் பற்றியெல்லாம் இந்த மாமன்றத்திலே நாம் நம்முடைய கருத்துகளை, வரக்கூடிய இந்த 30 நாட்களில் எடுத்து வைக்க இருக்கிறோம். நான் சில செய்திகளை மட்டும் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 11–05*

தமிழ்நாட்டை ஒரு முதலீட்டாளர்களின் முகத்துவாரமாக—the destination of investment—மாற்ற வேண்டிய மிகப் பெரிய பொறுப்பைச் சுமந்திருக்கிறார். இங்கு சில ஆண்டுகளாக அந்த முனைப்பு இல்லாத காரணத்தால்தான், the Industrial Map of India—இந்தியாவினுடைய தொழில் வரைபடத்திலே தமிழகம் எங்கேயோ பின்னுக்கு நிற்பதைப் போன்ற ஓர் உணர்வு இருக்கிறது. கடந்த ஓராண்டு காலத்தில் பஞ்சாபிற்கு 61 ஆயிரம் கோடி ரூபாய் அந்நிய முதலீடு வந்திருக்கிறது. ஹரியானாவுக்கு 35 ஆயிரம் கோடி ரூபாய் அந்நிய முதலீடு வந்திருக்கிறது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால் Microsoft நிறுவனத்தினுடைய அதிபர், பெங்களூரில் போய் உட்கார்ந்து, அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரோடு உட்கார்ந்து, 70 ஆயிரம் கோடி ரூபாயை, வரக்கூடிய 5 ஆண்டுகளில் முதலீடு செய்வதாகச் சொல்கிறார். எனக்கு மிகப் பெரிய மன மகிழ்ச்சி. இந்த வயதில்கூட இவ்வளவு கஷ்டங்களைச் சுமந்து, பெங்களூருக்குப் போய், Microsoft நிறுவனத்தையே பார்த்து, அந்தப் பண முதலீட்டை இங்கு வாங்கி வரக்கூடிய ஒரு முதலமைச்சர்

இன்று பொறுப்பேற்றிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன்.

முதலீடுகள் என்பது ஏழைகளுக்கு எதிரானது அல்ல. இன்று New York மாநிலம்–America–வில் இருக்கின்ற New York மாநிலம், நம்முடைய மேற்கு வங்க மாநிலத்தோடு அவர்கள் sister status, இரண்டு சகோதரிகள் மாநிலம் என்ற ஒப்பந்தம் போட்டுக்கொள்கிறார்கள். முதலீட்டிற்காக வருகிறார்கள். அனில் அம்பானி ரூ.4 ஆயிரம் கோடியைக் கொண்டு வந்து, மேற்கு வங்க மாநிலத்திலே முதலீடு செய்கிறார். அந்த முதலீடுகளைத் தேடிப் போகிற ஓர் அரசாக இந்த அரசு இருக்கிறது. முதலீட்டாளர்களைப் பார்த்து, முதலீடுகளைப் பெறுவதற்காக, கௌரவம் பார்க்காமல், யார் முதலீடு கொண்டு வந்தாலும், கதவுகளைத் திறந்து வைத்து, இதை ஒரு முதலீட்டாளர்களின் முகத்துவாரமாக மாற்றுவதற்கான ஓர் அமைப்பை இந்த பட்ஜெட் உருவாக்கித் தந்திருக்கிறது. அதிலே அரசு மட்டுமல்ல, அதிகாரிகள் மட்டுமல்ல, தொழில் முனைவோர்கள், இந்தியாவினுடைய, குறிப்பாகத் தமிழகத்தினுடைய தொழில் வளத்திலே ஆர்வம் கொண்டவர்களை உள்ளடக்கி ஒரு புதிய தொழில் கொள்கையை வகுக்கப் போகிறோம் என்கிற அந்த அற்புதமான அறிவிப்பை நான் மனமார வரவேற்கிறேன்.

காமராசரினுடைய தொண்டன் என்கின்ற முறையிலே நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முட்டை வழங்குகின்ற நிகழ்ச்சியிலே கலந்துகொள்கின்றபோதுகூட, நம்முடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவரும், நானும் கலந்து கொள்கின்றபோது, நான் பெருமையோடு சொன்னேன். பெருந்தலைவரை, இந்த தேசத்தின் விடுதலைக்காகத் தன் தேக்கு மர தேகத்தை இந்த நாட்டினுடைய அக்கினித் தீயில் வேக வைத்த அந்த மாபெரும் மனிதனை ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் 15 ஆம் தேதி நினைவுகொள்கின்ற அளவுக்கு, அந்த மாபெரும் தலைவனுக்கு அஞ்சலி செலுத்துகின்ற அந்தக் கட்டாயத்தினை சட்டபூர்வமாகவே மாற்றித் தருவேன் என்று (மேசையைத் தட்டும் ஒலி) சொன்ன முதலமைச்சர் அவர்களை நான் நன்றியோடு பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் தலைவர், இனிய தலைவர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு, அவர்கள் நினைவாக ஸ்ரீபெரும்புதூரிலே, எங்களுடைய அருமைக்குரிய சகோதரி யசோதா அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியிலே, ஒரு மிகப் பெரிய விமான ஓட்டி பயிற்சி நிலையம், அது ஒரு multi–dimensional educational activity–ஆக, அதை உள்ளடக்கியதாக



இருக்க வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்தோம். இன்று அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு, ஏற்கெனவே மத்திய விமானத் துறை அமைச்சரிடம் தொடர்புகொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக நம்முடைய சென்னை விமான நிலையத்திலே இருக்கின்ற Flying Club–ஐச் சார்ந்தவர்கள்கூட என்னை வந்து பார்த்தார்கள். அந்த Flying Club அரசுக்குச் சொந்தமானது. அரசாங்கத்தினுடைய ஆதரவில்தான் நடக்கிறது. அதையும் சேர்த்து உள்ளடக்கி அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள்.

எங்கள் அருமைக்குரிய நண்பர் கோவை தங்கம் அவர்களுக்கு, அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியிலே தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பயன்படுகின்ற வகையிலே ஒரு கல்லூரியை இந்த முறை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கும் நாங்கள் நன்றி சொல்கிறோம்.

போகின்ற வழி தூரம்; போகின்ற பாதை நீண்ட நெடிய பாதை. கூட வருகின்ற நாங்கள் நம்பிக்கைக்கு உகந்தவர்கள். நிச்சயம் பயணம் வெற்றி பெறும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வெற்றி பெற வாழ்த்துக்கள். வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. கே.பி. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசும்போது எங்களுக்குப் பேச வாய்ப்பில்லை என்கிறீர்கள். அவர் பேசி முடித்த பிறகும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அனுமதி இல்லை. உட்காருங்கள். திரு. ஆறுமுகம், பேசுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்களுடைய குடும்பத் தலைவர், தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், தமிழகத்தை ஐந்தாவது முறையாக ஆண்டுகொண்டிருக்கிற முத்தமிழ் அறிஞர், முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், இந்தியக் கண்டத்தினுடைய மாண்புமிகு ம்க்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், எங்களுடைய சின்ன அய்யா அவர்களுக்கும், எங்களுடைய தலைவர் அண்ணன் ஜி.கே.எம். அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

இந்தப் பேரவையிலே அளிக்கப்பட்டிருக்கிற 2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை பற்றி எங்களுடைய நிறுவனத் தலைவர், மக்கள் காவலர், மருத்துவர் அய்யா அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே முதலாவதைக் குறிப்பிட்டு என்னுடைய உரையைத் துவக்கலாம் என்று கருதுகிறேன். பயனடையாத பிரிவினரே இல்லை என்ற சாதனை பட்ஜெட்டை நம்முடைய கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இருக்கிற தமிழக அரசாங்கம் கொடுத்திருக்கிறது என்ற நல்ல செய்தியை எங்களுடைய நிறுவனத் தலைவர் மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்கள் சொல்லியிருப்பது, தமிழ்நாட்டிற்குப் பறைசாற்றுகிறது என்று சொல்லி, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கருணை நிறைந்த உள்ளத்தோடு மக்களுக்கு இந்த ஆண்டு ஆற்றவுள்ள பணிகளை அன்பு உள்ளம் கொண்ட பேராசிரியர் பெருந்தகைமூலமாக அளித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கை என்பது அனைவரையும், அனைத்துத் தரப்பு மக்களையும் அரவணைத்து எடுத்துச் செல்லும் தமிழ்நாட்டு அரசுக்கு ஒரு பொற்காலம் என்பதை நிலைநாட்டுகிற வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே, 2006–2007–லே வருவாய் ரூ.38,731 கோடியாகவும், அதிலே திருத்திய வரவு–செலவு ரூ.39,860 கோடியாகவும், வருவாய்ப் பற்றாக்குறை ரூ.1,129 கோடி எனவும், மூலதனச் செலவு ரூ.6,102 கோடி எனவும், ஆக, நிகரப் பற்றாக்குறை ரூ.7,231 கோடி என்பதையும் கோடிட்டு, அதை முழுவதையும் நாங்கள் சமாளிப்போம் என்று ஒரு சவாலாக இன்றைக்கு நம்முடைய தமிழக அரசாங்கம் நிதிநிலை அறிக்கையை, அனைத்துத் தரப்பு மக்களும் ஏற்றுக்கொள்கிற ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையாக, புதிய வரிகளே போடாத ஒரு நிதிநிலை அறிக்கையாகச் சமர்ப்பித்திருப்பது தமிழக மக்கள் மத்தியிலே மிகப் பெரிய வரவேற்பை ஏற்படுத்தி இருக்கிறது.

கடந்த கால ஆட்சியிலும், நாங்கள் 5 ஆண்டு காலம் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றி இருக்கிறோம். அப்பொழுது இருந்த அரசாங்கம், சிக்கனம் என்ற பெயரிலே—எதை எடுத்தாலும் சிக்கனம், இதைச் செய்யமாட்டோம், அதைச் செய்யமாட்டோம் என்று சொல்லி, மக்கள் மத்தியிலே ஒரு மாயையைத்தான் ஏற்படுத்தி இருக்கிறது என்பதற்கு நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே ஒரு பகுதியிலே



வந்திருக்கிறது. நம்முடைய பேராசிரியர் அவர்கள் படித்திருக்கிறார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிகிறபோது 31–3–2001–லே நம்முடைய தமிழக அரசாங்கத்தினுடைய கடன் ரூ.28,685 கோடி. ஆனால் சிக்கனம். சிக்கனம் என்று சொல்லி, கடந்த 5 ஆண்டு காலத்திலே நம்முடைய தமிழகத்தின் தலைமீது வைத்திருக்கிற கடன் எவ்வளவு என்று சொன்னால், 56,094 கோடி ரூபாயைக் கடனாக, இரண்டு மடங்கு—கடந்த தி.மு.க. ஆட்சியிலே 28 ஆயிரம் கோடி என்று சொன்னால், அண்ணா தி.மு.க. ஆட்சியிலே 56 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாகக் கடன் சுமையைத் தமிழகத்திற்குத் தந்துவிட்டுச் சென்றவர்கள்தான் கடந்த ஆட்சியாளர்கள். அதன்மூலம் நம்முடைய வரிப் பணம் ஒரு மாதத்திற்கு 446 கோடி ரூபாய் வட்டியாக மட்டும் சென்றுகொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே சமயத்திலே, எவ்வளவு நிதிப் பற்றாக்குறை இருந்தாலுங்கூட, மொத்த உற்பத்தி மதிப்பீட்டிலே 3 சதவிகிதம் அளவிற்குக் கட்டுப்படுத்துகிற எந்தவிதப் புதிய வரியும் விதிக்கமாட்டோம் என்கிற நல்ல அறிக்கையையும் தந்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, இந்த நிதிநிலை அறிக்கையிலே விவசாயத்திற்கான நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். கடந்த தொடரிலே நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். விவசாயிகளுக்கான ஒட்டுமொத்தக் கடனையும் தள்ளுபடி செய்கிறோம் கூட்டுறவுக் கடனிலே என்று சொல்லி, தள்ளுபடி செய்தார்கள். அதற்கு மிகப் பெரிய வரவேற்பு. இப்பொழுது இன்னொன்றையும் செய்திருக்கிறார்கள். அது என்னவென்று சொன்னால், விவசாயிகள் படுகிற கடனுக்கு 9 சதவிகித வட்டி என்பதை 7 சதவிகித வட்டியாகக் குறைத்திருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியைச் சொல்லி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது விவசாயிகளின் வயிற்றிலே பால் வார்க்கிற செய்தியாக இருந்துகொண்டிருக்கிறது.

இன்னொரு பக்கம் பார்த்தால், விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருட்களை நல்ல விலைக்கு விற்கவும், காலத்திற்கேற்ப விலை ஏறுகிறபோது விற்பதற்கான ஒரு வழியைக் காணும் வகையிலே, சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களிலே மூன்று முனையங்களை ஏற்படுத்தி, அதிலே குளிர்பதனப் பெட்டியிலே இருந்து, அதனைப் பாதுகாக்கிற வகையிலே இருந்து, அத்தனை செலவுகளையும் அங்கே செய்திருக்கிற ஒரு நல்ல நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். மக்கள் மத்தியிலே அதற்கு மிகப் பெரிய வரவேற்பு இருந்துகொண்டு இருக்கிறது. அதிலே

[திரு. கி. ஆறுமுகம்] [2006 ஜூலை 24

அதேபோன்று, கல்வியைப் பார்க்கிறபோது, ஒரே மாதிரியான கல்வி இல்லை என்பதை எல்லோரும் அறிந்து மிகவும் கொதித்தெழுகிறார்கள். பல்வேறுவிதமான கல்விகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஏழைகளுக்கு ஒரு கல்வி, பணக்காரர்களுக்கு ஒரு கல்வி என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. கல்வி முறையிலே பார்த்தால், மெட்ரிகுலேஷன் பள்ளி, ஆங்கிலோ—இண்டியன் பள்ளி, சாதாரணமாகப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஒரு பள்ளி, நம்முடைய தமிழ்நாடு அரசினுடைய கல்வி என பல கோணங்களிலே இருந்துகொண்டிருக்கின்றன. இதையெல்லாம் ஒரே கோணத்திலே எடுத்து வருவதற்கு நம்முடைய தமிழக அரசாங்கம் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் பயிற்று மொழி என்பது மிக, மிக முக்கியமானது. இன்றைக்கு ஆங்கிலத்தை—வெளிநாட்டு மோகம், ஆங்கில மொழியினுடைய மோகம், அதன் தாக்கம் கிராமப் பகுதிகளையும் விட்டு வைக்கவில்லை. அதனாலேதான் இன்றைக்குப் புற்றீசல்களாக கிராமங்களிலும் நர்சரி பள்ளிகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. அதனாலே ஏராளமான சங்கடங்கள். பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டுமென்று நினைப்பவர்கள் தட்டுத் தடுமாறி 5—வது வரையிலே கான்வென்ட்டிலே படிக்க வைக்கிறார்கள். மீண்டும், 6—வது வகுப்பில் வரும்போது அல்லது உயர்நிலைப் பள்ளிக்கு வரும்போது, சாதாரண அரசுப் பள்ளிக்குச் செல்கிற ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் ஒரே மாதிரியான கல்விக் கொள்கையை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், பயிற்று மொழியைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பயிற்று மொழி, தாய் மொழியாக இருக்கிற தமிழிலே இருக்க வேண்டும். வேண்டுமானால், ஆங்கிலம் ஒரு பாட மொழியாக, அது ஒரு மொழியினுடைய நோக்கத்தை, ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக, அவர்களை 1 ஆம் வகுப்பிலிருந்து 10—வது செல்வதற்குள்ளாக, ஆங்கிலத்திலே எழுத, பேச, படிக்க, நல்ல புலமை பெற்றவர்களாக ஆக்குவதற்கு தமிழக அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, பாடப் பிரிவுகளில் இருக்கிற பயிற்று மொழியை முறையாகத் தமிழ் மொழியிலே கொடுத்தால்தான், அது சிறந்து விளங்குகிற வல்லுநர்களைத் தோற்றுவிக்க முடியும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்தினுடைய முதல் குடிமகன் மாண்புமிகு அப்துல் கலாம் அவர்களும், பல்வேறு கல்வியாளர்களும் தமிழிலே படித்தவர்கள்தான், இன்றைக்கு உலகளாவிய ஆராய்ச்சியா ளர்களாகவும்,



2006 ஜூலை 24] [திரு. கி. ஆறுமுகம்]

கல்வியாளர்களாகவும் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, நம்முடைய தாய் மொழியாக இருக்கின்ற தமிழிலேயே, அந்தப் பயிற்று மொழித் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று எல்லோருக்கும் ஒரேவிதமான பாடப் பிரிவுகளை, பொதுப் பள்ளிக் கல்வி முறையை—Common School System கொண்டு வருவதற்கான முயற்சியை நம்முடைய முதல்வர் அவர்கள் எடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

*முற்பகல் 11—20*

அதேபோன்று, வட மாநிலங்களிலே பல்வேறு பகுதிகளிலே ஒரு நிலை இருந்துகொண்டிருக்கின்றது. அதிலும் குறிப்பாக, டெல்லியிலே ஒரு நிலைமை இருக்கிறது. அது என்னவென்று சொன்னால், அருகில் பள்ளி முறை—Neighbourhood School System என்ற ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. அது என்னவென்று சொன்னால், ஒரு பள்ளி இருக்கிறது என்றால், அதைச் சுற்றியிருக்கின்ற மாணவர்கள் இலவசமாக, 20 சதவிகிதம் கல்விக் கட்டணம் இல்லாமல் படிக்கின்ற வாய்ப்பு. அது எந்தக் கல்வி நிலையமாக இருந்தாலும், எந்தப் பள்ளிக்கூடமாக இருந்தாலும் இருப்பதற்கான வழிவகையை நம்முடைய அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஏராளமான தனியார் கல்லூரிகள் தமிழகத்திலே தொடங்கிக்கொண்டிருக்கின்றன. அப்படித் தொடங்குகின்ற தனியார் கல்லூரிகளிலே மிகப் பெரிய மோசடி நடந்துகொண்டிருக்கின்றது. அதைப் பற்றிப் பத்திரிகைகளிலே செய்தி வந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியும். இங்கேயிருக்கின்ற ஜேப்பியார் போன்றவர்களெல்லாம் அரசு நிலங்களை அபகரித்து, கையகப்படுத்தியிருக்கின்றார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. இப்படி ஏராளமான தனியார் பொறியியல் கல்லூரிகள், தொழில் கல்லூரிகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்ற இந்த வேளையிலே, அவர்கள் கையகப்படுத்தியிருக்கின்ற நிலங்களை மீண்டும் மீட்டு எடுப்பதற்கு நம்முடைய அரசாங்கம் மிகக் கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அவர்கள்மீது கடுமையான நடவடிக்கையை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயங்கக்கூடாது என்பதை இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்கின்றேன்.

அதேபோன்று, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்திலே ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள், வியாபாரப் பலகைகளிலே தமிழ் இல்லை.

ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் விவசாயிகள் மத்தியிலே ஒரு மிகப் பெரிய குறை இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்கிற அந்தப் பொருளுக்கு அவர்களே விலை நிர்ணயம் செய்கிற ஒரு வாய்ப்பை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, இப்பொழுது பரவலாக நான் பல இடங்களிலே கேட்டிருக்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே விதை உற்பத்தி செய்வதை மிக, மிகக் குறைத்துக்கொண்டதாகவும், ஏற்கெனவே தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 100 சதவிகிதம் என்று சொன்னால், கடந்த ஆட்சிக் காலத்திலே வெறும் 30 சதவிகிதம் மட்டும்தான் விதை உற்பத்தி செய்திருக்கிறார்கள். அது நெல்லாக இருந்தாலும், மணிலாவாக இருந்தாலும், கேழ்வரகாக இருந்தாலும், கம்பாக இருந்தாலும் அதனுடைய விதை உற்பத்தி 100 சதவிகிதம் என்பது 30 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், கடந்த ஆட்சிக் காலத்திலே விவசாயிகளுக்கு எதிரான ஆட்சி நடைபெற்றிருக்கிறது என்பதை அது தோலுரித்துக் காட்டிக்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு) அதேபோன்று, உழவர் சந்தைகளை மீண்டும் திறந்திருப்பதற்கு விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்துகொண்டிருக்கிறது. ஆனாலும்கூட, அந்த உழவர் சந்தைகளை மீண்டும் நவீனப்படுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். திரு. பாண்டுரங்கன், உட்காருங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** காவல் துறைக்கு 3–வது போலீஸ் கமிஷன் அமைத்திருப்பதை சாலச் சிறந்த ஒன்றாகக் காவல் துறையினர் கருதுகிறார்கள். அவர்களுடைய அத்தனை வகையான நலத் திட்டங்களையும் கேட்டறிந்து, அவர்களுக்கான நல்ல ஊதியங்களைக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் ஐயா அவர்கள் பல்வேறு அறிக்கைகளை விட்டிருக்கிறார்கள், பல்வேறு கூட்டங்களிலும், மாநாடுகளிலும் சொல்கிறார்கள், இந்த நாட்டிலே அதிகமாக உழைத்துக்கொண்டு இருப்பவர்கள் யார் என்று சொன்னால், 24 மணி



நேரம் உழைப்பவர்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்கள்; அவர்களுக்கு இப்போது வழங்கப்படுகிற சலுகையைப் போன்று, சம்பளத்தைப் போன்று—8 மணி நேரம்தான் வேலை செய்கிற நேரம், ஆனால் 24 மணி நேரம் வேலை செய்கிற அந்தக் காவலர்களுக்கு—3 மடங்கு சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை எங்களுடைய ஐயா அவர்கள் தொடர்ந்து வைத்து வருகிறார்கள். அந்தக் கோரிக்கையையும் ஓரளவுக்காவது நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று கல்வி. இன்று கல்விக்குப் புத்துயிர் வந்திருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக அதை வரவேற்கிறோம். ஏனென்று சொன்னால், இதுவரையிலே தமிழக வரலாற்றிலே கல்விக்காக இரண்டு அமைச்சர்கள் இருந்தது இல்லை. இப்போதுதான் பள்ளிக் கல்விக்கு ஓர் அமைச்சர் என்றும், உயர் கல்விக்கு ஓர் அமைச்சர் என்றும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் உயர்த்தி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அண்டை மாநிலங்களிலே இன்றைக்குக் கல்விக்கு, மூன்று துறைகளுக்கு மூன்று அமைச்சர்கள் இருப்பதாகத் தகவல் வந்து கொண்டிருக்கிறது. அந்த வகையிலே, அடிப்படை ஆரம்பக் கல்விக்குத் தனியாக ஓர் அமைச்சரை நியமித்தால், அது சாலச் சிறந்ததாக இருக்கும் எனக் கருதுகிறார்கள் கல்வியாளர்கள். ஏனென்று சொன்னால், எங்களுடைய டாக்டர் ஐயா அவர்கள்—பசுமைத் தாயகம் சார்பிலே நடைபெற்ற 3 நாள் கருத்தரங்கிலே அங்கு வந்த முன்னாள் துணை வேந்தர்கள், 20–க்கும் மேற்பட்ட துணை வேந்தர்கள் அதிலே கலந்துகொண்டு பேசினார்கள். என்னவென்று சொன்னால், இங்கிருக்கிற கல்வியில் ஆரம்பக் கல்விதான் மிக, மிக முக்கியம். ஆரம்பக் கல்வியாலேதான் இந்த நாட்டிலே வறுமையை ஒழிக்க முடியும், அறியாமையை அகற்ற முடியும், இந்த நாட்டிலே இருக்கிற அத்தனை பேர்களும் படிப்பதற்கான ஒரு வாய்ப்பை ஆரம்பக் கல்வியிலே கொடுத்தால்தான் அது உயர் கல்விக்கு வருகிறபோது ஒரு சரியான நிலைப்பாட்டிலே வரும் என்பதற்காகவே அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை இங்கே நாங்கள் வெளிப்படுத்துகிறோம்.

அதுமட்டுமல்லாமல், ஆரம்பக் கல்விக்கு, கல்விக்கு ஒதுக்கப்படுகிற நிதியிலே, 50 சதவிகிதக் கல்வி நிதியை ஆரம்பக் கல்விக்கு ஒதுக்கினால்தான் அத்தனை கட்டமைப்பு வசதிகளுக்கு, ஏராளமான ஆசிரியர்களை நியமிப்பதற்கும், பல்வேறு வகையிலே அது உபயோகமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. கி. ஆறுமுகம்] [2006 ஜூலை 24

அதேபோன்று, மணல் கொள்ளையர்களுக்கும், அரிசி கடத்துபவர்களுக்கும் கடுமையான சட்டத்தைக் கொடுத்து, தண்டனை கொடுக்கிறோம் என்று சொல்லி, அதை நடைமுறைப்படுத்தியிருக்கிற நம்முடைய தமிழக அரசாங்கத்திற்குப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே எங்களுடைய வாழ்த்துக்களைச் சொல்லிக்கொள்கிறோம்.

முற்பகல் 11–25

அதே சமயத்திலே, விமான நிலைய விரிவாக்கம், மீனம்பாக்கத்திலே இன்றைக்கு மிகப் பெரிய பூதாகரமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பகுதிகளிலே பூர்வீகக் குடிகளாக இருக்கிற மக்கள், எங்கு நாங்கள் செல்வது என்ற நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு, அந்த விமான நிலையம் விரிவாக்கம் செய்வதற்கு ஏற்ற பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டு, குடியிருப்பவர்களை விடுவதற்கான முயற்சியை நம்முடைய தமிழக அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்திலே, தமிழகத்திலே தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம், ஈரோடு, வேலூர் போன்ற பகுதிகளிலே புதிய விமான நிலையங்கள் அமைப்பதற்கு மத்திய அரசாங்கத்தோடு நாம் பேச்சு நடத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கடந்த ஆட்சியிலே சுனாமி என்பது உங்களுக்குத் தெரியும். இரண்டு ஆண்டுகளுக்கு முந்தைய செய்தி. சுனாமிக்கான நிதி ஏறக்குறைய 4,897.7 கோடி ரூபாய் இருந்துங்கூட, கடந்த ஆட்சியாளர்களாலே வெறும் 806 கோடி ரூபாய் மட்டுமே செலவு செய்யப்பட்டு, எஞ்சியிருக்கிற தொகை இன்னும் அப்படியே கிடப்பிலே கிடக்கிறது. அதற்காக நான் கடந்த நான்கு நாட்களாகப் பல்வேறு துறைகளிலே அங்கு இருக்கிற அதிகாரிகளை சந்தித்துப் பேசினேன். அந்தத் துறையைக் கடந்த இரண்டாண்டுகளாகச் சரியாக இயக்க முடியாமல் மீனவர்களுக்கு எதிரான ஆட்சியாக இருந்துகொண்டிருந்த நிலைமையை மாற்றி, இன்றைக்கு அதற்குப் புத்துயிர் கொடுக்கிற ஒரு அரசாக நம்முடைய அரசாங்கம் இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் தொகையிலே, அந்தந்தப் பகுதியிலே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிகமான அளவிலே வீடுகளைக் கட்டிக் கொடுப்பதுடன், கட்டமைப்பு வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலேகூட, இன்னும் பல்வேறு பகுதிகளிலே, குறிப்பாக, சதுரங்கப்பட்டினம், மெய்யூர்,



2006 ஜூலை 24] [திரு. கி. ஆறுமுகம்]

வெண்முஷ்ணம், இடையூர் போன்ற பகுதிகளிலே இன்னும் புதிய வீடுகளே கட்டப்படாமல் கிடக்கின்றன. புதுப்பட்டினம் போன்ற பகுதிகளில் அவற்றையெல்லாம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், கடந்த ஆண்டு பெய்த மழையினாலே ஏராளமான ஏரிகள் உடைந்திருக்கின்றன, பாலங்கள் தகர்ந்திருக்கின்றன, மதகுகள் உடைந்திருக்கின்றன. அவை தற்காலிகமாகப் போடப்பட்ட நிலையிலே இன்றும் இருந்துகொண்டிருக்கின்றன. மழை இன்னும் இரண்டு மாதங்களிலே வர இருக்கிறது. அதற்குள்ளாக இந்த ஏரிகளையும், மதகுகளையும், பாலங்களையும் சீர் செய்யவில்லையென்று சொன்னால், அடுத்த ஆண்டு விவசாயிகள் பயிர் வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். அப்பொழுது ஏரிகளுக்கும் தற்காலிகமாகவே அங்கே தடை போட்டு, அணை போடப்பட்டிருக்கிறதே தவிர, முழுவதுமாக அந்தக் கரைகளைப் பலப்படுத்தவில்லை. அதை உடனடியாக நம்முடைய அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கடந்த ஆட்சியிலே கொண்டு வரப்பட்டு, அது செயல் இல்லாமல் போய்விட்டது. இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வந்து, வருடத்திற்கு 500 கோடி ரூபாயைச் செலவழிக்க இருக்கிறோம். அதன்மூலம் ஒரு வருடத்திற்கு 2,500 கிராமங்கள், ஊராட்சிகள பயன் பெறும் என்கிற நல்ல திட்டத்தை, அடிப்படைக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கான ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் பாட்டாளி மக்கள் கட்சி பாராட்டுகிறது.

அதேபோன்று, கடந்த கூட்டத்திலே எங்களுடைய தலைவர் அண்ணன் ஜி.கே.எம். அவர்கள் பேசுகிறபோது மிகப் பெரிய சர்ச்சை எழுந்தது. வறுமைக் கோட்டை எப்படி நிர்ணயித்திருக்கிறீர்கள், அது எப்படியெல்லாம் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்குப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே 9 வழிகாட்டு முறைகளை மேற்கொண்டு எங்களுடைய தலைவர் அவர்கள் பேசினார்கள். அதை வலியுறுத்த வேண்டும் என்று —9 காரணிகள்—எப்படியெல்லாம் அலகுகள் நிர்ணயிக்க வேண்டும், வறுமைக் கோடு என்றால் என்ன, எப்படி அவர்களுக்கு அதைக் கொடுக்க

அதில் விளம்பரங்களெல்லாம் ஆங்கிலத்திலே இருக்கின்றன. அதை உடனடியாகத் தார் பூசி அழிக்க வேண்டுமென்று போராட்டம் நடத்தியபோது, நம்முடைய மாண்புமிகு அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள்: "டாக்டர் அய்யா அவர்களே, நீங்கள் ஆளை அனுப்பத் தேவையில்லை, நான் ஆணையை அனுப்புகிறேன்" என்று சொன்னார்கள். இப்போது அந்தத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்துவதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பல்வேறு கோணங்களிலே இந்தத் தமிழ் மொழி எப்படியெல்லாம் நிலைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்கு நாங்கள் சொல்லித் தெரிய வேண்டுமென்பதில்லை. உதாரணம் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு நீதிமன்ற மொழி, வழிபாட்டு மொழி, திருமண மொழி, விளம்பரப் பலகை மொழி, திரைப்படம் போன்று பல்வேறு ஊடகங்களில் இன்றைக்குத் தமிழ் மொழி எவ்வளவு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பதற்கு உதாரணம் சொல்ல முடியும். தமிழ் மொழியிலே இன்றைக்குத் திருமணம் செய்துகொள்கின்றவர்கள் மிகக் குறைவானவர்கள். வட மொழிகளில்தான் இன்றைக்குத் திருமணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படித் திருமணம் நடைபெறுகிறபோது, தமிழிலே திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று நினைக்கின்றவர்கள், அப்படிச் செய்து கொண்டார்கள் என்று சொன்னால், அவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலும், தமிழ் மொழிக்குப் புத்துயிர் ஊட்டுகின்ற வகையிலும், அப்படித் தமிழ் மொழியிலே திருமணம் நடத்திக்கொள்கின்றவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடையாக நம்முடைய தமிழக அரசாங்கம் வழங்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அது மட்டுமல்லாமல், இசைத் தமிழ். தமிழ் இசை இன்றைக்கு நசுங்கிக்கொண்டிருக்கின்றது. அந்த இசையை மீட்டு எடுப்பதற்கு நம்முடைய தமிழக அரசாங்கம் முனைப்போடு செயலாற்ற வேண்டுமென்று கேட்டு, அதற்கு மாவட்டந்தோறும் இசைக் கல்லூரிகளை அமைத்து, அதன்மூலம் நல்ல திறமையான பட்டம் பெற்றவர்களைக் கொண்டு ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் நல்ல இசை ஆசிரியர்களைக் கொண்டு மாணவர்களுக்கு இசையைக் கற்றுக் கொடுக்கின்ற பணியை நம்முடைய அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும்.



அது மட்டுமல்லாமல், நம்முடைய அரசாங்கத்தில், தமிழிலே படத்தின் பெயர் வைத்துவிட்டால் வரி விலக்கு அளிக்கிறோம் என்று அறிவித்திருக்கின்றார்கள். அது வரவேற்பதாக இருந்தாலுங்கூட, பெயரை மட்டும் தமிழிலே வைத்துவிட்டு, அதில் பார்த்தால், பல்வேறு மொழிக் கலப்போடு படம் எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். அதற்கு முழுமையான வரி விலக்கு கொடுப்பதைத் தவிர்த்து, தமிழ் மொழி வழியிலேயே அந்தப் படம் எடுக்கப்பட்டிருக்குமேயானால், அதற்கு 100 சதவிகிதம் வரி விலக்கு கொடுக்கலாம். தமிழ்ப் பெயர் வைப்பதற்கு வேண்டுமானால் 50 சதவிகிதம் வரி விலக்கு கொடுக்கலாம் என்ற அறிவிப்பை நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அப்பொழுதுதான் தமிழ் மொழியை, தமிழ்நாட்டிலே தமிழ்த் திரைப்படங்களிலே 100 சதவிகிதம் பெறுகின்ற வாய்ப்பு ஏற்படும்.

இன்றைக்கு அரசு ஊழியர்கள் மிகத் தெம்பாக இருக்கின்றார்கள். மிகத் தெளிவோடு இருக்கின்றார்கள். தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள். ஏனென்று சொன்னால், முன்பு 30 ஆண்டுகள் பணி மூப்பு என்று சொன்னால், அவர்களுக்கு முழுமையான ஓய்வூதியம் இல்லை. 33 ஆண்டுகள் பணியில் இருந்தால்தான் முழு ஓய்வூதியம் என்ற நிலையை மாற்றி, 30 ஆண்டுகள் பணி புரிந்தாலே அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். கடந்த ஆட்சியிலே அவர்களுக்குத் துயரத்தைக் கொடுத்த அந்த நிலையிலே, இப்போது அவர்களுக்கு எல்லாவிதச் சலுகைகளையும் கொடுத்து, ஏற்கெனவே பணி ஓய்வு பெற்றவர்களுக்கு, அவர்களுக்கு அளிக்க வேண்டிய தொகை அன்றையதினம் மூன்று ஆண்டுகளாகப் பகுத்து, மூன்று ஆண்டுகளாக, ஒவ்வொரு ஆண்டுக்கும் அவர்களுடைய அந்தத் தொகை காப்பீட்டினுடைய தொகையாக கொடுக்கப்பட்டது. அதை இப்போது பணக் கொடையாகக் கொடுக்கிறேன் என்று அறிவித்திருக்கிற நம்முடைய முதல்வர் அவர்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, படித்த இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் மாதாந்திர உதவித் தொகை கொடுக்கின்ற நல்ல திட்டத்தை அமல்படுத்துவதற்குப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அங்கிருக்கிற பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு, அருள்மிகு திரிபுரசுந்தரி அம்மன் கோயில் நிலத்திலிருந்து 6.18 ஏக்கர் நிலம் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கிறபோது, அந்த நிர்வாகம் அந்தப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அருள்மிகு திரிபுரசுந்தரி பெண்கள் மேல்நிலைப் பள்ளி என்று பெயர் சூட்ட வேண்டும் என்று கோரினார்கள். வைக்கிறோம் என்று சொன்னார்கள், வைக்கவில்லை. நம்முடைய அரசாங்கம் அந்தப் பெயரை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து நான் வலியுறுத்தி வருவது, களத்தூரான் கால்வாய்த் திட்டம். அது 50 கிராமங்களுக்கு நல்ல பாசனத் திட்டம். அது கிடப்பிலே கிடக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குண்டூர் ஏரி, செங்கற்பட்டு நகரத்தின் மத்தியப் பகுதியிலே இருக்கிறது. கடந்த ஆண்டு உடைபட்டு, அது சரி செய்யப்படாமல் இருக்கிறது. அதனால் அதன் கீழே வாழ்கின்ற மக்கள் என்றைக்கு மழை வருமோ, தாங்கள் எல்லாம் என்ன ஆவோமோ என்று பயந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நிலையைப் போக்குவதற்கு, அந்தக் கரையைப் பலப்படுத்துவதற்கும்—வடிகால் வசதி இல்லாமல் இருக்கிறது—அதற்கான அகலமான வடிகால்களை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரே ஒரு கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** எங்களுடைய மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் என்று சொன்னாலே, காஞ்சிக்குப் பெயர் பட்டு. பட்டுப் புடவைக்கு—கடந்த ஆட்சிக் காலத்திலே நான் பேசினேன்—காஞ்சிப் பட்டுக்குத் தனித் தன்மை உண்டு. பல்வேறு நகரங்களிலிருந்து, பல்வேறு பகுதிகளிலேயிருந்து பட்டு வந்தாலுங்கூட, காஞ்சிபுரத்திற்குத் தனித் தன்மை உண்டு. அது உலகளாவிய பிரசித்தி பெற்றது. அந்தப் பட்டுக்கு இன்றைக்கு மிகப் பெரிய சோகக் கதை இருக்கிறது. அந்தப் பட்டுத் தொழில் நசிந்துகொண்டிருக்கிறது. பட்டுக்குக் காஞ்சிப் பட்டு என்று முத்திரையிட வேண்டும் என்று நான் கடந்த ஆட்சியிலே பேசினேன். அப்போது ஆட்சியாளர்கள் சொன்னார்கள், நாங்கள் முத்திரையிடுகிறோம்



என்று சொன்னார்கள். முத்திரையிடவில்லை. நம்முடைய முதல்வர் அவர்களும், நம்முடைய கைத்தறி அமைச்சர் அவர்களும், எப்படியாவது கருணை உள்ளத்தோடு பரிசீலித்து, அந்தப் பகுதியினுடைய தனித் தன்மை வாய்ந்த பட்டுக்கு, காஞ்சிப் பட்டு என்ற முத்திரையை ஒவ்வொரு சேலையிலும் இடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, எனக்கு இந்த அளவிற்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, இடம் சாருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

***செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலின்போதே சொன்னபடி இந்த நிதிநிலை அறிக்கையைத் தேர்தல் அறிக்கையாகச் சமர்ப்பித்த நமது தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எனது வணக்கத்தை, நன்றியைச் சமர்ப்பித்துக்கொள்கின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மகிழ்ச்சியோடு வரவேற்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

குறிப்பாக, இந்த நிதிநிலை அறிக்கையில் யாரெல்லாம் மையப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற வரிசையில், துப்புரவுப் பணியாளர்கள், அதேபோன்று, இந்தச் சமூகத்தில் மிகுந்த மனித நேயத்தோடு கவனிக்கப்பட வேண்டிய ஊனமுற்றவர்கள், இந்தச் சமூகத்தை நாகரிகமாகக் கொண்டு செல்லக்கூடிய இடத்திலே இருக்கக்கூடிய நெசவாளர்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள், வேலை தேடக்கூடிய இளைஞர்கள், சமூகத்தினுடைய சரி பகுதியாக இருக்கக்கூடிய பெண்கள், இவர்களையெல்லாம் மையமாக வைத்து இந்த நிதிநிலை அறிக்கை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டுகிறது, வரவேற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

வேண்டும். ஆண்டு வருமானம் அவர்களுக்கு என்ன? அவர்கள் இருப்பது கூரை வீடா? ஓட்டு வீடா? அல்லது சாதாரண வீடா? அதேபோன்று, உணவுப் பழக்க வழக்கங்கள். எந்த மாதிரி உணவு உண்ணுகிறார்கள் என்று அதையெல்லாம் அளவுகோலாக வைத்து, 9 காரணிகள் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே ஒரு சில கோரிக்கைகள் இருக்கின்றன. நான் கடந்த ஆட்சியிலே தொடர்ந்து சொல்லிப் பார்த்தேன். அந்தக் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேறாமல் இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, நம்முடைய கலைஞர் ஆட்சியிலேதான் என்னுடைய தொகுதியிலே இருக்கிற திருக்கழுக்குன்றம் வட்டம் உதயமானது. அந்த வட்டத்திலே இருக்கிற வட்டாட்சி அலுவலகம் இன்னும் வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. நீதிமன்றக் கட்டடம் வாடகைக் கட்டடத்திலே இருக்கிறது. தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டடத்திலே இருக்கிறது. இப்படி எண்ணற்ற அலுவலகங்கள் இன்னும் வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. அவற்றிற்கு நிரந்தரமான கட்டடங்கள் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நம்முடைய விவசாயத் துறை அமைச்சரிடம் சொன்னேன். எங்களுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய காட்டாங்குளத்தூருக்கும், திருக்கழுக்குன்றத்திற்கும் அந்தப் பகுதியிலே விதைக் கிடங்குகளே இல்லை. நெல் விதைகள் வைப்பதற்குக் கிடங்குகள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன்; அதையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை. தொடர்ந்து நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை வைத்துக்கொண்டு வருகிறேன். இப்பொழுது 100 மாணவர்களாக உயர்த்தப்படும் என்று அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டிலாவது இப்போது இருக்கும் 50 மாணவர்களோடு சேர்த்து 150 மாணவர்களாக உயர்த்தி, அவர்கள் படிப்பதற்கான ஒரு வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதே சமயத்திலே, 1969–லே ஆரம்பிக்கப்பட்ட அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இதுவரையிலே கூடுதலாக ஒரு மருத்துவரோ, அல்லது மருத்துவப் பணியிடங்களோ அதிகரிக்கப்படாமல் அப்படியே இருக்கிறது. அது ஜி.எஸ்.டி. சாலையில் அமைந்திருக்கக்கூடிய மிகப் பெரிய



மருத்துவமனையாக இருந்தாலுங்கூட கட்டமைப்பு வசதிகளும் மருத்துவ வசதிகளும், குறைவாக இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், நெரும்பூர், வள்ளிபுரம், புன்னவாக்கம் போன்ற ஆரம்ப சுகாதார நிலையங்களும் மிக மோசமான நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் நிலை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கின்ற சதுரங்கப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர சுகாதார நிலையமாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா மாவட்டங்களிலேயும் சாலைப் பணியாளர்கள் இருந்தார்கள். போராட்டம் நடத்தினார்கள். ஆனால் திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலே மட்டும் சாலைப் பணியாளர்கள் போராட்டமே நடத்தியதில்லை. ஏனென்று சொன்னால், அங்கே சாலைப் பணியாளர்களே கடந்த ஆட்சிக் காலத்திலே நியமிக்கப்படவில்லை. அதற்குக் காரணம், ஏற்கெனவே நாங்கள் 1,500 பேர் வேலை செய்துகொண்டிருக்கிறோம், நாங்களே சாலைப் பணியாளர்களாகச் செயலாற்றுகிறோம் என்று சொல்லி அன்றைக்கு அவர்கள் எல்லாம் கோரிக்கை வைத்ததன் பயனாக அப்படியே விட்டுவிட்டார்கள். ஆனால் அந்த, 1,500 பேர்களும் இன்றைக்கு என்.எம்.ஆர்.–களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் 20 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி இருக்கிறார்கள். அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எங்களுடைய பகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் கோயில், பட்சிதீர்த்தம் என்று பெயர் பெற்றது. அங்கு வட மாநிலங்களிலிருந்தும், பல்வேறு மாநிலங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் வருகிறார்கள். அதற்கு மலை மேலே நடந்து செல்லுகிற நிலை இருக்கிறது. எனவே, அதற்கு இழுவை இரயில் அமைக்க வேண்டும் என்று இந்தச் சமயத்திலே நம்முடைய தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த நிதிநிலை அறிக்கை மட்டுமல்லாது, இந்த அரசாங்கம் உருவாக்கப்பட்டவுடனேயே நமது மாண்புமிகு அமைச்சர்கள், குறிப்பாக, நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், பல்வேறு மாவட்டங்களுக்கு வருகை தந்து, குடிநீர் நிலை எவ்வாறு இருக்கிறது, சுகாதார நிலை எவ்வாறு இருக்கிறது, தெரு விளக்குகள் இருக்கின்றனவா என்பது குறித்தெல்லாம் ஆய்வு செய்து, அதற்கான முடிவுகள் எடுத்து, தற்போது திண்டுக்கல் போன்ற இடங்களில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வருவதற்கான ஒரு உறுதியான நிர்வாக ஏற்பாட்டைச் செய்து கொடுத்திருப்பது என்பது பாராட்டிற்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் 80 ரூபாய் கூலி என்பது கிடைக்கப்பெறவில்லை, அதற்கான காரணங்கள் என்ன என்பது குறித்தெல்லாம் அந்த உள்ளாட்சித் துறையினுடைய ஆய்வின்போது, காரணங்களையும், யதார்த்த நிலைமைகளையும் நாங்கள் வெளிப்படுத்தினோம். அதை ஏற்றுக்கொண்டு இப்போது தமிழகத்திலே செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய ஆறு மாவட்டங்களில் 80 ரூபாய் கூலியை உறுதிப்படுத்தி இந்தத் திட்டத்திலே வெளியிட்டிருப்பது என்பதை ஒரு நல்ல அம்சமாக நான் பார்க்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு அறிவிப்பதற்கு, பட்ஜெட் கூட்டத்தொடருக்கு முன்பான ஆய்வு என்பது பயன்பட்டது. நமது வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள், அதேபோன்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் எங்களுக்கெல்லாம் வகுப்பு எடுப்பதைப் போன்று அந்தப் பொது விநியோக முறை குறித்து எடுத்தார்கள்.

அதேபோன்று, நமது வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், சுகாதார நலத் துறை அமைச்சர் அவர்கள், இவர்களெல்லாம் இந்தப் பணிகளிலே ஈடுபட்டது என்பதும், மக்களுடைய பிரச்சினையை உடனடியாகத் தெரிந்து கொண்டது என்பதும் பாராட்டுக்குரியது. நல்ல மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை இப்போது வழங்கியிருக்கிறீர்கள். இத்தகைய நிர்வாக ஏற்பாடுகளின்மூலமாகச் சிறப்பான பணிகளைச் செய்ய இந்த அரசாங்கம் தொடங்கியிருக்கிறது. அந்த அடிப்படையிலே மக்கள் மத்தியில் நிறைய எதிர்பார்ப்புகள், நிறைய நம்பிக்கை இருக்கிறது. அதாவது, சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லக்கூடிய இடங்களில் எல்லாம், அமைச்சர்



வருகிறபோதும், சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் மனுக்கள் குவிந்து கொண்டேயிருக்கின்றன. ஆகவே, எதிர்காலத்தில் இத்தகைய நம்பிக்கையை நிறைவேற்றக்கூடிய வகையில் இணைந்து கூட்டாக ஒரு நிர்வாகம், அதோடு அரசுத் தரப்பு அதிகாரிகள் அனைவரும் உள்ளிட்டு ஒரு நல்ல நம்பிக்கையை, மக்கள் மத்தியிலே அரசு வழங்க வேண்டியிருக்கிறது.

அந்த வகையிலேதான் முதல் பிரச்சினையாக நமது அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவது, நமது நகர்ப் பகுதிகளில் பட்டா இல்லாத மக்கள், கிட்டத்தட்ட பல இலட்சக்கணக்கான மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சென்ற அரசின்போது இதே கோட்டைக்கு முன்னால் மறியல் நடத்துவதற்காக வந்த சென்னையினுடைய கல்குட்டை மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் காவல் துறையால் கடுமையாகத் தாக்கப்பட்டு, அவர்கள் எல்லாம் இரத்தம் வழிந்து திரும்பிய நிகழ்ச்சி கடந்த காலங்களிலே நடந்திருக்கின்றது. ஆகவே, தமிழகத்தினுடைய தலைநகர் போன்ற பகுதிகளிலேயே, பட்டா இல்லாது இருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். திண்டுக்கல் போன்ற இடங்களிலும், அதேபோன்று குமரி போன்ற இடங்களிலும் நகரத்தை மையமாக வைத்த இடங்களிலேயே இந்த பட்டா பிரச்சினை என்பது தொடர்கிறது. ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு குறிப்பிட்ட அரசாணை, ஓராண்டுக்கு அவர்களுடைய விதிகளைத் தளர்த்தி, நகர்ப்புற மக்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்தால் பட்டா வழங்கக்கூடிய நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்கள். அந்த நடவடிக்கை குறித்து ஏற்கெனவே இருந்த ஆட்சியில் இதே சபையிலே நான் பல முறை அதை வலியுறுத்தியிருந்தேன். ஆனால் அது நடக்கவில்லை. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையிலும் சரி, வரக்கூடிய காலத்தில் நகர்ப்புறங்களில் இருக்க்க்கூடிய British ஆட்சிக் க்ாலத்தினுடைய revenue புறம்போக்குகளை ஆய்வு செய்து, அதன்மீது உரிய நடவடிக்கை எடுத்து பட்டா வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, திண்டுக்கல்லில் ரேடியோ மைதானப் புறம்போக்கு என்று இருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியில் பொது மக்கள் ரேடியோ கேட்க வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு மைதானம். இப்போது அந்த மைதானமும், அதனுடைய தேவையும் இல்லை. ஆனால் அது புறம்போக்கு என்று இருக்கிறது. அதேபோன்று மின் மயானங்கள் வந்துவிட்டன. ஆனால், பல இடங்களில் மயானப் புறம்போக்கு என்று இருக்கிறது. ஆகவே,

தேவையான அரசு நிலம் எது, தேவையில்லாத அரசு நிலம் எது என்பதனைக் கண்டறிந்து, பட்டா வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலோ, அல்லது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலோ ஒரு குழு என்பதை அமைத்து, அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகின்றேன்.

முற்பகல் 11–40

இரண்டாவதாக, கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு காலனி வீடுகளுக்காக எடுக்கப்பட்ட நிலங்களின்மீது பல்லாயிரக்கணக்கான வழக்குகள் நீதிமன்றங்களிலே நிலுவையாக இருக்கின்றன. அவர்களுக்கும் பட்டா என்பது கிடைக்கப்பெறாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. சென்ற ஆட்சியிலேகூட 3 இலட்சம் பட்டா கொடுக்கப்பட்டது என்று அந்தக் குறிப்பேட்டில் இருந்தபோது, யாருக்குக் கொடுத்தீர்கள் என்ற கேள்வியை, இதே மன்றத்திலே நாங்கள் எல்லோரும் எழுப்பியிருக்கிறோம். ஆகவே, இந்த பட்டா என்பது தமிழகத்தினுடைய மக்களால், கிராமப்புற மக்களால் தொடர்ந்து கேட்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு வாழ்வாதாரமான மிக முக்கியமான பிரச்சினை. அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தமிழகத்தினுடைய மருத்துவமனைகளினுடைய தரத்தை உயர்த்துவது சம்பந்தமாக இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பதை நான் வரவேற்கின்றேன். அதே சமயத்தில், நம்முடைய பெரிய மாவட்டங்களில் இருக்கக்கூடிய தலைமை மருத்துவமனைகளில் M.R.I. போன்ற scan வசதிகள் செய்து கொடுப்பது நல்ல அம்சம். ஆனால், எங்களைப் போன்ற மாவட்டங்களில் இருக்கக் கூடியவர்களுக்கு Endoscopy என்ற க்ருவிகூட அங்கு இல்லை. அதேபோன்று, 500 M.A. என்று சொல்லக்கூடிய X-ray வசதியும் அங்கு இல்லை. ஒரு Colour Doppler, X-ray வசதி என்பது, நவீன கருவி என்பது இருக்கிறது. அதுவும்கூட பல்வேறு மருத்துவமனைகளில் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அதே மாதிரி, இதய, நரம்பியலுக்கான மருத்துவர் பணியிடங்கள் காலியாகவே இருக்கின்றன. இவற்றையெல்லாம் நமது மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடத்தில், ஏற்கெனவே நாங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். இதைத் தொடர்ந்து,



இவற்றின்மீது உரிய நடவடிக்கை எடுத்து, அந்தக் குறைந்தபட்ச வசதிகளை, தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, சிறுநீரக நோய்க்காக, இதய நோய்க்காக முதல்வர் அவர்களினுடைய நிவாரண நிதி என்பது ஒரு குறிப்பிட்ட அளவு வழங்கப்படுகிறது. இன்றைக்குச் செலவுகள் அதிகமாவதன் காரணமாக, அதனுடைய தொகையைக் கொஞ்சம் அதிகரித்துக் கொடுத்தால் நோயாளிகளுக்கு உதவிகரமாக இருக்கும். குறிப்பாக, குழந்தைகள் இதய நோய்க்குப் பதிவு செய்கிறபோது, மதுரை அரசு மருத்துவமனையில் 6,000 நோயாளிகள் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள்.

குழந்தைகளுக்காகவாவது குறைந்தபட்ச முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்குத் தனி வரிசை எண் என்பது பதிவு செய்யப்பட வேண்டும். மொத்த நோயாளிகளோடு குழந்தைகளை இணைக்க வேண்டாம். இதனால் 2, 3 குழந்தைகள் சிகிச்சை கிடைக்காமல் கடந்த காலங்களிலே இறந்த அனுபவங்கள் இருப்பதன் காரணமாக, அதற்கு ஒரு தனி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறைகள் எல்லாம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அவற்றிற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். வருகிற மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் அவற்றிற்குச் சரியான விளக்கங்களைத் தருவோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்.*

**செல்வி கே. பாலபாரதி:** *அடுத்ததாக, நமது காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய சிறுதாவூர் பகுதியில் 1967–ல் பேரறிஞர் அண்ணா அவர்களினுடைய தலைமையில் அமையப்பெற்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு, 20 தலித் குடும்பங்களுக்கு வழங்கிய தலா 2 ஏக்கர் நிலம் உள்ளிட்ட அவர்களினுடைய குடியிருப்புகளுக்கான நிலங்கள் உள்ளிட்ட 53 ஏக்கர் நிலங்கள் 1990 வரை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிற்பாடு அந்த நிலங்கள் அபகரிக்கப்பட்டு, 2005 ஆம் ஆண்டு, சம்பந்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் மார்க்சீய கம்யூனிஸ்டு கட்சியிடம் வந்து புகார் செய்து, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் புகார் செய்யப்பட்டது.*

இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களினுடைய நிலங்களை யார் ஆக்கிரமிப்புச் செய்து வைத்திருக்கிறார்கள், அதற்கு உள்ளே நடந்த நிர்வாக முறைகேடுகள் என்ன என்பது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, நமது அரசு அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான நிலங்களை மீட்டு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–45*

அதேபோன்று, இராமநாதபுரம் மாவட்டத்தில் சாயல்குடி என்ற பகுதியில் பத்தாயிரம் ஏக்கர் நிலங்கள் மோசடி செய்யப்பட்டிருக்கின்றன. வேப்பங்குளத்தில் வில்லங்கம் போட்டுப் பார்த்தால் ராஜஸ்தான் மாநிலத்தைச் சார்ந்த ஒரு நபர் அந்த நிலங்ளை எல்லாம் எடுத்திருப்பதாக வருகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நில மோசடி என்பது குவியல், குவியலாகத் தமிழகத்திலே நடந்திருக்கிறது. இது குறித்து ஒரு தனி விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த விவசாயிகளுக்கு, நிலங்களை இழந்தவர்களுக்கு, போலி பட்டாக்களை உருவாக்கியவர்களுக்கு உரிய சட்ட ரீதியான நடவடிக்கையையும், நிலங்களை வழங்குவதற்குமான நடவடிக்கையையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, கல்வியினுடைய நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். கல்வியினுடைய எல்லா நிலைகளுக்குள்ளும் நான் செல்லவில்லை. ஆனால் கல்வியைக் கற்றுக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்களை உருவாக்கக்கூடிய தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் இன்றைக்கு ஒரு சீட் வாங்குவதற்கு 2 இலட்சம் ரூபாய், அதை வேண்டுமானால் 1½ இலட்சம் ரூபாயாகக் குறைத்துக்கொள்ளலாம், இன்னும் வேண்டுமென்றால், 1.55 இலட்சமாக மாற்றிக்கொள்ளலாம் என்று பகிரங்கமாகப் பேரம் பேசக்கூடிய அளவுக்கு நிலைமை மோசமாக இருக்கிறது. கல்வியைக் கடவுள் என்று போற்றக்கூடிய சமூகத்தில் கல்வியைக் கற்றுத் தரக்கூடிய ஆசிரியர்களை உருவாக்கக்கூடிய இந்தப் பயிற்சி நிலையங்களில் இப்படி 2¼ இலட்சம் ரூபாய்க்குத் தமிழகத்தில் கல்வி விலை போய்க்கொண்டிருக்கிறது என்று சொன்னால், இந்தச் சமூகம் எங்கே போகிறது என்ற கேள்வி எதிர்காலத்திலே நம்மை நோக்கிக் கேட்கப்படும். ஆகவே, உடனடியாக இந்தத் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் கல்வி கொள்ளை அடிக்கப்படுவது, விற்கப்படுவது ஒரு பெரிய மோசடியாக நடந்துகொண்டிருக்கிறது. இதன்மீது உரிய



நடவடிக்கை எடுக்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெண்கள் சம்பந்தமாக—இந்த நிதிநிலை அறிக்கையில் திருமண உதவித் திட்டத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருப்பதும், கர்ப்பிணிப் பெண்களுக்கு ஆறாயிரம் ரூபாய் 6 மாத காலங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதும் மிக நல்ல நடவடிக்கைகள் என்ற முறையில் நான் வரவேற்கின்றேன். பெண்கள் கடத்தப்படுவது, பெண் குழந்தைகள் கடத்தப்படுவது, பெண்கள்மீதான குடும்ப ரீதியான வன்முறை, சமூக ரீதியான வன்முறைகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன என்று தேசிய ஆணையமும், மனித உரிமைக் கழகமும் சொல்லியிருக்கின்றன, ஆய்வு செய்திருக்கின்றன. ஆகவே இவை குறித்து ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசின்போது நியமிக்கப்பட்ட—தமிழ் மாநில பெண்கள் ஆணையம் ஒன்று நிறுவப்படுவதற்கு நீங்கள் வரக்கூடிய மானியக் கோரிக்கையிலே கொள்கைபூர்வமான முடிவெடுத்து உதவக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, இந்த ஆணையத்தினுடைய தலைவர் எத்தனை ஆண்டு காலம் பதவியில் இருக்கலாம், உறுப்பினர்கள் யார், இவர்களுடைய அதிகாரம் என்ன என்பதனை வரையறுக்கக்கூடிய, பெண்கள் ஆணையத்திற்கான ஒரு சட்டமுன்வடிவையும் தயாரித்து, இந்தச் சட்டமன்றத்திலே அதை நீங்கள் ஒரு சட்டமாகக் கொண்டு வந்து, பெண்கள் ஆணையத்தை ஒரு அதிகாரபூர்வமான ஆணையமாக நிறுவுவதற்கு உதவி செய்ய அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கணவனால் கைவிடப்பட்டோர், விதவைப் பெண்களுக்கான உதவித் தொகையை 400 ரூபாயாக உயர்த்தியிருக்கிறீர்கள். கடந்த அரசின்போது, அநேகமாக இந்த உதவித் தொகைக்காக விண்ணப்பித்தவர்கள் யாருக்குமே உதவித் தொகை என்பது புதியவர்களுக்கு வழங்கப்படவே இல்லை. ஏனென்று சொன்னால், வாய்மொழி உத்தரவாக, பழையவர்கள் இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே புதியவர்களுடைய விண்ணப்பத்திற்குக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிபந்தனைகளைப் பார்த்தால் மிகவும் கேலிக்குரியதாக இருக்கின்றன. அதாவது, முதிய ஒரு பெண்ணுக்கு மகனும் இருக்கக்கூடாது, மருமகனும் இருக்கக்கூடாது. சொந்த வீடும் இருக்கக்கூடாது, வாடகை வீடும் இருக்கக்கூடாது. பிச்சையும் எடுக்கக்கூடாது, சாகும் தருவாயிலும் இருக்கக்கூடாது. இப்படி நிபந்தனைகளாக வைத்து அந்த 200 ரூபாயை அவர்கள் கடைசி வரை வாங்கவே முடியவில்லை. ஆண் வாரிசு மட்டுமே தாயாரையோ, தந்தையாரையோ காப்பாற்றுவது இல்லை. ஆகவே, இந்த நிபந்தனைகளை,

400 ரூபாய் உதவித் தொகையைப் பெறக்கூடிய நிபந்தனைகளை இன்னும் கொஞ்சம் தளர்த்தி, சாதாரண மக்களுக்கு, யதார்த்தமான நிலைமையில் எப்படிப் போய்ச் சேர்க்க முடியுமோ (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய நிபந்தனைகளை உருவாக்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று ஊனமுற்றோர்களுக்கான விதிகளிலும் இதேபோன்றுதான் நிலைமைகள் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கின்றன.

இறுதியாக, திண்டுக்கல் பகுதியில் சிறுமலையில் விளையக்கூடிய பழங்கள் அறநிலையத் துறையால் பஞ்சாமிர்தத்திற்காகப் பயன்படுத்தப் படுகின்றன. அண்மையில் ஆளுநர் அவர்கள் வந்தபோது, அந்தப் பஞ்சாமிர்தம் சிறுமலைப் பழத்தால் செய்யப்பட்டது என்று பெருமையோடு குறிப்பிட்டார்கள். ஆனால், டெண்டர் முறைமூலமாக அந்த விவசாயிகளுக்கு ஒரு நிரந்தரமான, நியாயமான விலை கிடைப்பதில்லை. சிறுமலைப் பழங்கள் உலக அளவிலே புகழ்பெற்ற, மிகத் தரம் வாய்ந்த பழங்கள். ஆகவே, அத்தகைய மலை விவசாயிகளிடம் நேரடியாக அறநிலையத் துறை கொள்முதல் செய்வதற்கும், ஒரு நியாயமான விலையை நிர்ணயம் செய்துகொள்வதற்கும் அறநிலையத் துறையும், அரசும் நடவடிக்கை எடுத்து, அந்த சிறுமலைப் பழங்களைக் கொள்முதல் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–50*

அதேபோன்று, திண்டுக்கல்லில் தோல் பதனிடக்கூடிய தொழில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சுத்திகரிப்பு நிலையங்களை மேற்கு வங்க மாநிலத்தில் அரசு ஏற்று நடத்துகிறது. இங்கே நமது திண்டுக்கல் போன்ற இதர மாவட்டங்களில் அந்தச் சுத்திகரிப்பு நிலையங்களை அரசே எடுத்துக்கொள்ள முன்வந்தால் மிகவும் நல்லது. அதே சமயத்தில், இப்போது சுத்திகரிப்பு நிலையங்களில் மின்சாரத்திற்கான செலவு கூடுதலாக அந்த நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகிறது. இந்தத் தொழில் மிகவும் நலிவடைந்துகொண்டு செல்வதனால், இந்தத் தொழிலிலே 3 மதங்களைச் சேர்ந்த தொழிலாளிகள் வேலை செய்வதனால், குறைந்தபட்சம் அந்த மின் கட்டணத்தில், அல்லது மின்சாரம் வழங்குவதில் சில சலுகைகளையாவது வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நமது பகுதிகளில், கிராமப்புறங்களில் பஸ் போக்குவரத்து மிகவும் மோசமாக இருந்துகொண்டிருக்கிறது. கிராமப்புறப்



பகுதிகளில் மினி பஸ்கள் வருவதை வரவேற்கிறோம். ஆனால், அதே சமயத்தில் அரசாங்கமே மினி பஸ்களை அனுப்பினால், அது இன்னும் நல்ல உதவியாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், கிராமப்புறங்களில் மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸ் இருப்பதனால் காலை நேரம், மாலை நேரங்களில் மாணவர்களை நகரங்களுக்குக் கொண்டு வரக்கூடிய அளவில் அதை முறைப்படுத்தி பஸ் போக்குவரத்துக்களை அனுமதிப்பது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) மிகவும் ஒரு நல்ல நடவடிக்கை என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்கள். (குறுக்கீடு)

## 5. சட்டமன்ற வளாகத்திற்குள் கொசுத் தொல்லை

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னங்க? (குறுக்கீடு) சரி, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு பயம் கலந்த அச்ச உணர்வோடு உட்கார்ந்துகொண்டு இருக்கவேண்டிய ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதற்குக் காரணம், சட்டமன்ற வளாகத்திற்குள் எங்கு பார்த்தாலும் கொசுக்கள் பறந்து கொண்டிருக்கின்றன. (சிரிப்பு) தமிழகத்தில் இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான ஏழையெளிய, நடுத்தர மக்கள் சிக்குன்குன்யா, டெங்கு, ஃப்ளூ போன்ற நோய்களினால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அதற்கு மூல காரணம் கொசுக்கள் என்று ஆய்வறிக்கை கூறுகின்றது. ஆகவே, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்களை இந்தக் கொசுத் தொல்லையிலிருந்து காப்பாற்றும்படிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடவடிக்கை எடுப்போம்.

## 4. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2006-2007, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது விவாதம் தொடர்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி அவர்கள்.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் வந்து கருத்துகளைச் சொல்வதற்குக் காரணமாக இருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், முக்காலமும் உணர்ந்து, எக்காலமும் சிறப்பாக, இந்த 21 ஆம் நூற்றாண்டினுடைய வீரம் மிக்க இளைஞராக, அகவை எண்பதைத் தாண்டிய நிலையிலும், நாங்களெல்லாம் போற்றி வணங்குகின்ற முறையில் செயல்பட்டு வருகின்ற தமிழக முதல்வர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இன்று தமிழகத்தில் தொடர்ச்சியாக வலம் வந்துகொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாவட்டத்தினுடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய சாரதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, நீங்கள்தான் நான் இந்த அவையில் வந்து உரை நிகழ்த்துவதற்குக் காரணம். எனவே, உங்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி மக்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-55*

தேர்தல் காலத்தில் நமது தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் அறிக்கையே நிதிநிலை அறிக்கையாக வரும் என்று சொன்னார்கள். ஒன்றுகூட பாக்கியில்லாமல் அத்தனையையும் நிதிநிலை அறிக்கையில் கொண்டு வந்திருக்கிறார்கள். தேர்தல் அறிக்கை என்பது, ஏதோ தேர்தல் காலத்தில் சொல்லிவிட்டு, காற்றோடு பறந்து செல்கின்ற ஒன்று என்று இருந்த நிலையை மாற்றி, தேர்தல் காலத்தில் மக்களிடத்தில் சொன்ன கோரிக்கைகளை, அந்த அறிக்கையை இன்றைக்குச் சிறப்பாக இந்த நிதிநிலை அறிக்கையின்மூலம் செய்து காட்டியிருக்கின்றார்கள்.

நிதிநிலை அறிக்கை என்பது வெறும் சலுகைகளை அள்ளித் தருகின்ற ஒரு நிகழ்ச்சியாக மட்டுமல்லாமல், ஒரு நாட்டின், ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தொழிலும், விவசாயமும் சேர்ந்து வளர வேண்டும், இன்றைய இந்த நூற்றாண்டில் வெறும் சேவைத் துறையை மட்டும்



வளர்ச்சியாக வைத்து வளர்ச்சி விகிதம் காட்டப்பட்டு வருகிறது. இந்த நாட்டின் பல பகுதிகளில் இன்றைக்கு விவசாயம் சீரழிந்து, நஷ்டம் ஏற்பட்ட காரணத்தால் விவசாயிகள் தற்கொலையை நாடிச் சென்றுகொண்டிருக்கக்கூடிய இந்த நாட்டில், விவசாயிகள் முதலில் பாதுகாக்கப்பட வேண்டும், விவசாயமும், தொழிலும் சேர்ந்து வளர்க்கப்பட வேண்டும் என்பதை அடிப்படையாக வைத்து, இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. விவசாயம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், விவசாயி பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான கடன் தள்ளுபடி இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தில்கூட, மத்தியில் வி.பி. சிங் அவர்கள் இருக்கும்போதுகூட விவசாயிகளுக்கு வெறும் 10,000 ரூபாய் வரையில்தான் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், நமது தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சியில் விவசாயிகள் வாங்கிய ஒட்டுமொத்தக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது மட்டுமல்ல, (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு சேர்ந்து, தாய்மார்களுடைய மனமெல்லாம் குளிர்கின்ற முறையில் நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பது இந்திய வரலாற்றிலுமில்லை, தமிழக வரலாற்றிலுமில்லை, இன்றைக்குத் தாய்மார்களின் நெஞ்சங்களிலெல்லாம் நிறைந்த தலைவராக நமது தலைவர் கலைஞர் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த இடத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டும். சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காத கதையாக இன்றைக்கு அதிகாரிகள் மட்டத்தில், ஆட்சியாளர்களுடைய திட்டங்களை விரைவாக அமல் நடத்துவதில் காலதாமதமும், மெத்தனப் போக்கும் நடந்து கொண்டிருக்கிறது. அவற்றைச் சரிபார்த்து, உரியவர்களிடம் ஒப்படைப்பதற்குக்கூட இன்னும் அதற்கான முயற்சி பல இடங்களில் எடுக்கப்படவில்லை. அதை விரைவாக எடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, இன்றைக்குத் தொழிலில் அந்நிய மூலதனம் தமிழகத்திற்கு வர வேண்டுமென்பதில் மட்டும் ஆர்வம் காட்டவில்லை; இங்கே புதிதாக, சிறு தொழில்கள் தொடங்குவதற்கும், இருக்கிற தொழில்களைப் பாதுகாப்பதற்குமான உரிய ஒரு நடவடிக்கையை இந்த நிதிநிலை அறிக்கையில் நாங்கள் காண முடிகிறது. எனவே, தொழில் இன்றைக்கு வளர வேண்டிய மாநிலங்களில் தமிழ மாநிலமும் ஒன்றாக இருக்கிறது. கடந்த காலம் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி நடத்தும்போது தொழில் வளர்ச்சியில் மூன்றாவதாக இருந்த தமிழகம் இன்றைக்குக் கீழ்நிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறது. எனவே, அதை மீண்டும் தூக்கி நிறுத்தி, தொழில் வளர்ச்சியை முன்னேற்றப் பாதையில்

[திரு. தி. இராமசாமி] [2006 ஜூலை 24

கொண்டு செல்லவேண்டியதற்கான அடித்தளமும் இன்று நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

சுருங்கச் சொன்னால், எங்களது தலைவர் தா. பாண்டியன் அவர்கள் ஆட்சியைப் பற்றியும், இந்த அறிக்கையைப் பற்றியும் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்கும்போது ஒன்றைச் சொன்னார்கள். ஒரு கம்யூனிஸ்ட், முதலமைச்சராக அந்த நாற்காலியில் அமர்ந்திருந்தால் எதைச் செய்வார்களோ, அதைத்தான் இன்றைக்கு நமது கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே அமர்ந்து செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற விவரத்தைப் பத்திரிகைகளுக்குப் பேட்டியாக அறிவித்தார்கள். அப்படிப்பட்ட ஒரு உணர்வு இருக்கின்ற காரணத்தால்தான் பஞ்சாப் மண்ணில் உதித்த மாவீரன் பகத்சிங்கிற்கு, இந்த நூற்றாண்டிலே ஒவ்வொரு வருடமும் அவரை நினைவுபடுத்துகின்ற முறையில் அரசின் சார்பில் விழாக்கள் எடுக்கப்படும் என்று அறிவித்திருப்பது இன்றைக்கு இந்திய சுதந்திரத்தைப் போற்றுகின்ற ஒரு செயல், இன்றைக்கு இளைஞர்களுடைய வீரத்தை, எழுச்சியை உருவாக்குகின்ற ஒரு நடவடிக்கை. இந்த நாட்டின்மீது பற்றுக் கொண்ட ஒவ்வொரு இளைஞனுக்கும் இந்தத் தமிழ்நாட்டின்மீது, வளர்ச்சியின்மீது அக்கறை கொண்ட ஒவ்வொரு இளைஞனுக்கும் உயிர் என்பதுகூட இன்றைக்குப் பெரிதல்ல. அது வெல்லம் அல்ல. மாவீரன் பகத்சிங் போன்றவர்கள், இந்த நாட்டிற்காகத் தன்னுடைய இன்னுயிரையும் ஈந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தியாக சீலர்களாக, அர்ப்பணிப்பு உணர்வோடு இளைஞர்கள் வளர்ந்து வர வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான், மாவீரன் பகத்சிங் அவர்களுடைய அந்த நூற்றாண்டு விழா இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பது மிகுந்த ஒரு வரவேற்பை, இளைஞர்களுக்கு ஒரு பேராதரவைப் பெற்று, நமது அரசுக்குப் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

*நண்பகல் 12–00*

பல உறுப்பினர்கள் பேசும்போது சொன்னார்கள். இன்றைக்கு அமைச்சர் பெருமக்கள், ஏதோ கோட்டையிலே மட்டும் கொலு வீற்று, அங்கேயிருந்து உத்தரவுகளைப் போட்டு ஆட்சி நடத்திக் கொண்டிருப்பவர்கள் என்பதல்ல. மக்களுடைய கருத்தை நன்கு அறிந்து, உணர்வுகளைத் தெளிவாகப் புரிந்து, அதற்குத் தகுந்தாற்போல ஆட்சி



2006 ஜூலை 24] [திரு. தி. இராமசாமி]

நடத்துகின்ற அடிப்படையில், இன்றைக்கு மாவட்டந்தோறும் அமைச்சர்களுடைய சுற்றுலா. நமது மரியாதைக்குரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், உணவுத் துறை அமைச்சர் அவர்களும் நேரடியாக மாவட்டங்களுக்கு வருகை தந்து, அரிசி கடத்தப்படுகிறதா, இரண்டு ரூபாய் அரிசி முறையாக விநியோகிக்கப்படுகிறதா, நல்ல தரமான அரிசியாக இருக்கிறதா, அதிகாரிகள் முறையாக நடந்துகொள்கிறார்களா என்ற விவரத்தை மட்டும் அல்ல, குடிதண்ணீர் எப்படி வழங்கப்படுகிறது, நல்ல ருசியான குடிதண்ணீர் கிடைக்கிறதா, எத்தனை அடி குழாய்கள் செயல்படுகின்றன, எங்கேயிருந்து தண்ணீர் கிடைக்கிறது, இன்றைக்குப் பக்கத்திலே இருக்கின்ற ஆற்று நீரைப் பக்கத்து மாவட்டங்களுக்கு எப்படிப் பயன்படுத்துவது என்ற விவரங்களை எல்லாம் நேரில் கேட்டு, அந்த விவரத்தின் அடிப்படையிலான ஒரு திட்டத்தை இங்கே தீட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஓர் அமைச்சர் நேரடியாக, தலையிலே தலைப்பாகையைக் கட்டிக் கொண்டு, ஒரு லாரியிலே கடத்தப்படுகின்ற அரிசியை எதிரே நின்று தடுத்து நிறுத்தி, அதைப் பிடித்து உரியவர்களிடம் ஒப்படைத்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொல்லப்படுகின்ற ஒரு நிலைகூட இன்றைக்கு நமது ஆட்சியில் உள்ளது. அதை உணவு அமைச்சர் அவர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால், குற்றத்தைத் தடுக்க வேண்டும், கடத்தலை நிறுத்த வேண்டும் என்ற உணர்வு மேலோங்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நாங்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எங்கள் விருதுநகர் மாவட்டத்தில் கால்நடைகள் நோய்கள் குறித்த அந்த நுண்ணயிர்ப் பிரிவுகள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், கடந்த காலத்தில் கால்நடைகள் நீலநாக்கு நோய், காணை நோய் போன்ற நோய்களினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, பெரும் நஷ்டத்திற்கு ஆளாயின. இன்றைக்கு அப்படிப்பட்ட நுண்ணுயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய அந்த நுண் ஆராய்ச்சி, அந்த மருத்துவமனை அமைப்பது, எங்கள் விருதுநகர் மாவட்டத்தில் அமைப்பது எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ஆனால், கால்நடைகளுக்கு மேய்வதற்கான மேய்ச்சல் நிலங்கள் என்பது பெரும்பாலும் இன்றைக்கு இல்லை, குறைந்துவிட்டது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பாஸ் வழங்கி கால்நடைகள் மேய்த்து வந்தார்கள். ஆனால், இன்றைக்கு

எங்கள் மாவட்ட மலை, வன விலங்குச் சரணாலயம் என்று அறிவிக்கப்பட்டு, அங்கே ஆடு, மாடுகள் செல்வது தடுத்து நிறுத்தப்பட்டு வருகிறது. பாஸ் வழங்குவது நிறுத்தப்பட்டு விட்டது. எனவே, இன்றைக்குக் கால்நடைகள் மேய்வதற்கான அந்த மேய்ச்சல் நிலங்கள் இல்லை. மேற்குத் தொடர்ச்சி மலையை விரிவுபடுத்தி வளப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையில் இந்தக் கால்நடைகள் அந்த மலையிலே மேய்ந்து வருவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அதேபோல, தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி பெருக வேண்டும். நாங்குநேரி டைசல் பார்க்-ஐ விரிவுபடுத்தி, அதை மேம்படுத்துவதற்கான முயற்சியை நமது அரசு எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், ஏற்கெனவே நமது நீதியரசர் ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் தென் மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து, அறிக்கை தயார் செய்யப்பட்ட நேரத்தில் புதிய தொழில்களை உருவாக்க வேண்டும், இந்தப் பகுதியில் பின்தங்கிய பகுதியாக இருந்து, வேலையற்றவர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை என்பது அடிக்கடி ஏற்பட்டு வருகிறது. எனவே, புதிய தொழில்கள் உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்ட டைசல் பார்க், கடந்த காலத்தில் அதை மேம்படுத்தி, சரியாகப் பராமரிக்கப்படவில்லை. இப்பொழுது அதை மேம்படுத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

அதே சமயத்தில் அந்த மாவட்டத்தில் செயல்பட்டு வந்த தொழிற்சாலைகள் சில மூடப்பட்டுள்ளன. சில தொழிற்சாலைகள் மூடுகின்ற நிலையில் உள்ளன. குறிப்பாக, ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டுவிட்டது கடந்த ஆட்சியில். அதேபோல, ஆலங்குளம் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நல்ல நிர்வாகத் திறமையின்மையின் காரணமாக மூடுகின்ற நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. எனவே, மூடிய அந்த ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலையைத் திறக்க வேண்டும், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம், அதன் நிர்வாகத்தைச் சீரமைத்து இலாபகரமாக நடத்துவதற்கான முயற்சியையும் இன்றைய அரசு செய்ய வேண்டும்.

*பிற்பகல் 12-05*

அதேபோல, வேலை நியமனத் தடைச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கின்ற இளைஞர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இப்பொழுது



தமிழ்நாட்டில் காலியாக இருக்கின்ற அத்தனை பணியிடங்களும் மிக விரைவாக நிரப்பப்பட்டு வருகின்றன. அவை எல்லாம் இளைஞர்களிடத்தில் ஒரு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் உண்டாக்கிக்கொண்டிருக்கின்றன.

இப்பொழுது கல்வித் துறையிலே ஆசிரியர் பணியிடங்கள் நியமனம் என்று வரும்போது, இரண்டு முறையும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று தேர்வுத் துறைமூலம், மற்றொன்று வேலைவாய்ப்புத் துறை அலுவலகம்மூலம் என்று இரண்டு முறைகளையும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, படித்துவிட்டு நீண்ட காலமாக வேலையற்று, வேலையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் தேர்வு எழுதித்தான் வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற நிலை வந்தால், யாருமே வேலைக்குச் செல்ல முடியாது. இப்படிப்பட்ட நிலையில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் அந்தப் பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுவதற்கான விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். ஏற்கெனவே தேர்தல் அறிக்கையில் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த ஆசிரியர்கள் எல்லாம் மிகுந்த நம்பிக்கையோடு இருந்தார்கள். ஆனால், இடையிலே வருகின்ற அறிவிப்புகள் அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்ற ஒரு நிலை இருக்கிறது. எனவே, வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் அவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுடைய பட்டியல் இங்கே விவாதத்திற்கு வந்தது. அந்தப் பட்டியல் இப்பொழுது மீண்டும் சரிபார்க்கப்படும் என்று நமது முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட அந்தப் பட்டியலை சிற்றூராட்சிகளுக்கு அனுப்பி, அதைச் சரி பார்க்கின்ற வேலையை இப்பொழுது அதிகாரிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை, ஏற்கெனவே எடுக்கப்பட்ட அந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற அந்த list-ஐ ரத்துச் செய்துவிட்டு, புதிதாக census கணக்கு எடுப்பதுபோன்று, இப்பொழுது ஆசிரியர்களைக் கொண்டு புதிய கணக்கு எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நாங்கள் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதிகாரிகள், அரசு ஊழியர்களுக்குப் பல சலுகைகள் இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகத்தைச் சீரமைப்பதற்கான குழுவும் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஓர் அர்ப்பணிப்பு

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல் நடத்த வேண்டுமென்ற கோரிக்கை அந்தப் பகுதி மக்களிடம் தொடர்ச்சியாக இருந்துகொண்டிருக்கிறது. நிலத்தடி நீர் குறைகின்ற காரணத்தாலும், நாளடைவில் ருசி மாறுமே என்ற காரணத்தாலும், அதற்காகப் பண விரயமும் அதிகமாகிக் கொண்டிருக்கின்ற காரணத்தாலும், இந்தத் திட்டம் வேண்டுமென்ற கோரிக்கை அந்தப் பகுதி மக்களிடம் இருந்துகொண்டிருக்கிறது. ஏற்கெனவே ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரத்திற்கு நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தாமிரபரணித் தண்ணீரைக் கொண்டு வருவதற்காகப் பெருமுயற்சி எடுத்து, அந்த வேலையும் அங்கே தொடங்க இருக்கிறது. எனவே, தாமிரபரணித் தண்ணீரும், பிளவக்கல் தண்ணீரும், ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதிக்கு வந்து சேர்ந்தால் குடிதண்ணீர்ப் பஞ்சமே இல்லை என்ற நிலை ஏற்பட்டு, நல்ல ருசியான தண்ணீரை அந்த மக்கள் பருகுவார்கள்.

அதேபோல, விவசாயத் துறையில் சர்க்கரைச் சோளம், காட்டாமணக்கு போன்ற மாற்றுப் பயிர்கள், Bio-diesel தயாரிப்பதற்குப் பயன்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்று சேர்த்துக்கொள்ள வேண்டும். இப்போது, அரசுப் பழப் பண்ணைகளும், விதைப் பண்ணைகளும், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை, இரண்டு பழப் பண்ணைகள், இரண்டு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. பழக்கன்றுகளுக்குக் கொடுக்கப்படுகின்ற மானியத்தைத் தொடர்ச்சியாக மேலும் அதிகப்படுத்தி, அந்தப் பழக்கன்றுகள் நடுகின்ற விவசாயிகளை— காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம் போடுகின்ற அந்த விவசாயிகளை எப்படி ஊக்கப்படுத்துகிறோமோ, அதேபோல, பழக்கன்றுகளை நடுகின்ற அந்த விவசாயிகளையும் ஊக்கப்படுத்தி, விவசாயத் துறை மேலும் தமிழ்நாட்டில் தலைசிறந்து வளர்வதற்கு நமது அரசு உத்தரவிட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கோரிக்கையாக வைக்கிறேன்.

அதேபோல, விவசாயத்தோடு சேர்ந்து, இன்றைக்கு விவசாயிகள் மட்டுமல்ல, விவசாயத் தொழிலாளியும் சேர்த்திருந்தால்தான் சிறப்பு. இருவரும் நன்றாக வாழ வேண்டும் என்ற அடிப்படையில், ஏற்கெனவே கலைஞர் அவர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட அந்த விவசாயத் தொழிலாளர் நல வாரியம் இடையிலே முடக்கப்பட்டது. அந்தத் திட்டத்தை அகற்றுவதற்கான முயற்சி நடந்தது. தேர்தலைக் காரணம் காட்டி, மோசடித் திட்டமாக உழவர் நலத் திட்டம் என்ற ஒரு திட்டம் வந்தது. அந்தத் திட்டத்திலும் மக்களுக்குப் பலன் இல்லை. எனவே, விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பாகக் கலைஞர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. (குறுக்கீடு)



பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. தி. இராமசாமி:** இப்பொழுது இந்த நிதிநிலை அறிக்கையில், விவசாயத் தொழிலாளர் நல வாரியம் மீண்டும் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வந்திருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடு செய்யாதீர்கள். உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. தி. இராமசாமி:** அந்த அறிவிப்பு, தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்கள் நெஞ்சத்தில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பாண்டுரங்கன், அமைதியாக உட்காருங்கள். உங்களுக்கு அனுமதியில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் இப்போது கன்னிப் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கிறார், எல்லோரும் உட்காருங்கள். பிறகு பேசலாம், உட்காருங்கள்.

**திரு. தி. இராமசாமி:** ஒரு புதிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. எனவே, விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைத்ததன்மூலம், விவசாயத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்ததன்மூலம், விவசாயத்திற்கு விவசாயத் தொழிலாளர்கள் உறுதுணையாக, பக்கபலமாக இருவரும் இணைந்து விவசாயத் துறையில் ஒரு மாபெரும் முன்னேற்றம் தமிழ்நாட்டில் ஏற்படுவதற்கு உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** அந்தத் திட்டத்தை மீண்டும் அமலுக்குக் கொண்டு வந்த நமது தமிழக அரசைப் பாராட்டுகிறேன். ஆனால், அந்த விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை இப்பொழுது Revenue இலாகாவில், தாலுகா ஆபீசோடு இணைப்பதன்மூலம், அந்த விவசாயத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய சலுகைகள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு, கிடைப்பதில் காலதாமதமும் ஆகிறது. இதைக் கவனிப்பதற்கும் அவர்கள் வீணாகச் சிரமப்படுகிறார்கள். எனவே, அந்த விவசாயத் தொழிலாளர் நல வாரியத்திற்கு என்று ஒரு தனி இலாகா

உணர்வோடு அரசு ஊழியர்கள் பணியாற்ற வேண்டிய காலம் இப்பொழுது வந்திருக்கிறது. இருந்தாலும் அவர்களுக்கு என்று இருக்கின்ற சில குறைகளில், மின் வாரியத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, அவர்களும் அரசு ஊழியர்கள்தான் என்ற அடிப்படையில், மற்ற ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுபோன்ற, D.A. 50 சதவீதத்தை அடிப்படைச் சம்பளத்தோடு சேர்த்து, அவர்களுக்கும் மற்ற அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகளை வழங்க வேண்டும். அதேபோல, போனஸ் பற்றி—தகுதியுள்ள தற்காலிக மின் வாரிய ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரமாக்குவதற்கு நமது அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

இப்பொழுது பணம் கட்டி 2 இலட்சத்து 40 ஆயிரம் மின் இணைப்புப் பெற்றவர்களுக்கு எல்லாம் இலவச மின்சாரம் வழங்கப்படும் என்பது மனதைக் குளிர வைக்கிறது. அதே நேரத்தில், அந்தப் பணத்தையும் கட்டி மின்சாரம் பெற முடியாமல் 1991—லிருந்து காத்திருப்போர் பட்டியலில் இருக்கின்ற விவசாயிகளுக்கு எல்லாம் உடனடியாக மின்சாரத்தை வழங்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும். ஏற்கெனவே மின் துறை அமைச்சர் அவர்கள், ஆளுநர் உரை விவாதம் இங்கே நடந்து கொண்டிருக்கும்போது 40 ஆயிரம் புதிய மின் இணைப்புகள் விவசாயத்திற்கு வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு தொடர வேண்டும். அந்தக் காத்திருப்போர் பட்டியலில் இருக்கின்ற அனைத்து விவசாயிகளுக்கும் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12–10*

எல்லாவற்றுக்கும் மேலாக, இங்கே நிதிநிலை அறிக்கையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியைப் பற்றிச் சொல்லவில்லை. அது பல உறுப்பினர்களுக்கு ஒரு சந்தேகத்தை உருவாக்கிவிட்டது. ஏற்கெனவே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி என்பது தொடருமா? இல்லையென்றால், அந்த நிதி ரத்துச் செய்யப்பட்டுவிடுமா என்பது போன்ற சில சந்தேகங்களை...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி நிதி என்பது ஒரு தொடர் நிலை. அது இல்லையென்றால்தான் அறிவிக்கப்பட்டிருக்கும். இருக்கின்ற காரணத்தால் அறிவிக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதைப்போல, (குறுக்கீடு) தொடரும் என்று அறிவித்திருக்கிற நமது முதலமைச்சர் அவர்களுக்கு உறுப்பினர்கள் சார்பில் நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராமசாமி, பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** இறுதியாக, எங்கள் தொகுதியில் இருக்கிற ஒரு சில பிரச்சினைகள். அதாவது, ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் வத்திராயிருப்பு பகுதி ஒரு பெரிய பகுதி. அந்த வத்திராயிருப்பு பகுதியைத் தாலுகாவாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை கடந்த காலத்திலிருந்து தொடர்ந்துகொண்டிருக்கிறது. அதை நமது அரசு பரிசீலனையில் எடுத்து, வத்திராயிருப்பு ஒன்றியத்தையும், மற்ற பகுதிகளையும் இணைத்து, ஒரு தனித் தாலுகாவாக ஆக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

இப்பொழுது பூமிக்கடியில் இருக்கின்ற நீர் பெரும்பாலும் குறைந்து வருகிறது. ஆழ்குழாய்க் கிணறுகள்மூலமாகத்தான் தண்ணீரை எடுத்து, குடிதண்ணீருக்குப் பயன்படுத்தி வருகிறோம். நிலத்தடி நீரை அதிகப்படுத்துவதற்கான முயற்சியைச் செய்ய வேண்டுமென்று நமது பாரதப் பிரதமர் அவர்கள்கூட அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். நிலத்தடி நீரைக் குடிதண்ணீருக்குப் பயன்படுத்தப் பயன்படுத்த, நாளடைவில் தண்ணீரினுடைய ருசி கெட்டுவிடுகிறது. தேவையான தண்ணீரும் கிடைப்பது இல்லை. இதனால் குடிநீருக்குச் செலவு செய்யப்படுகின்ற பணம் அதிகமாக விரயமாக்கப்படுகிறது. எனவே, நிலத்தடி மேற்பாப்புத் தண்ணீரைக் குடிதண்ணீருக்குப் பயன்படுத்துகின்ற முறை தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் அமலாக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, எங்கள் விருதுநகர் மாவட்டத்திற்குக்கூட, பெரும் பகுதி நகரங்களுக்கும், கிராமங்களுக்கும், தாமிரபரணித் தண்ணீரை கொண்டு வருவதற்கான முயற்சி நடந்து, வேலை முடிவடைகின்ற நிலையிலிருக்கிறது.

அதேபோல, நமது தலைவர் கலைஞர் அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட அணை, எங்களுடைய ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் வத்திராயிருப்புக்கு மேற்கே, பிளவக்கல் அணை இருக்கிறது. அந்த அணைப் பகுதியிலிருந்து வத்திராயிருப்பு ஒன்றியம் முழுவதற்கும் ஒரு

ஏற்படுத்தினால், நான்கில் ஒரு பங்கு இருக்கக்கூடிய அந்த விவசாயத் தொழிலாளர்களெல்லாம் வாழ்கின்ற காலம் வரை, நமது தமிழக முதல்வர், கலைஞரை நினைத்துக் கொண்டிருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறி, ஒட்டுமொத்தமாக நிதிநிலை அறிக்கை, தமிழ்நாட்டினுடைய அடுத்த கட்ட வளர்ச்சிக்கு, மேலும் முன்னேறிச் செல்வதற்கான ஒரு வாய்ப்பை, தெளிவான திட்டங்களை உருவாக்கியிருக்கின்ற நிதிநிலை அறிக்கை. அத்தனையும் ஒட்டுமொத்த வளர்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன என்பதைச் சொல்லி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த நேரத்தில் வரவேற்று, முடித்துக்கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன். (குறுக்கீடு) என்ன விஷயம்? சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மோசடித் திட்டம் என்று, (குறுக்கீடு) ஒரு நிமிடம். நான் பேசிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம் ஒரு மோசடியான திட்டம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ஏறத்தாழ, முதற்கட்டமாக ரூ.100 கோடியும், அதற்குப் பிறகு தொடர்ந்து ரூ.170 கோடியும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு மோசடித் திட்டம் என்று சொல்வதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். சிவபுண்ணியம், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். One minute.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட உழவர் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் கூறுகிறார்கள். இப்போது எங்களது கட்சியைச் சார்ந்த உறுப்பினர் மாண்புமிகு இராமசாமி அவர்கள் அதைப்பற்றி வருத்தமாகச் சொல்கிறார். நான் சொல்வது என்னவென்றால், உழவர் பாதுகாப்புத் திட்டம் என்பது, 2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு, 2005





ஆம் ஆண்டு, ஐந்தாண்டு காலம் முடிகிற வரையிலும் அதைப் பற்றியே அக்கறையில்லாமல், கடைசியாக, தேர்தல் வருகிறது என்ற காரணத்தினாலே, ஆதாயம் கருதிப் போடப்பட்டது என்று வேண்டுமானால் திருத்திக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, வேண்டாம்.

***திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது சொல்லுங்கள், உட்காருங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** காலங்காலமாகக் கண் மூடிக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தட்டியெழுப்பி, பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்புவதில் சண்டமாருத எதிர்ப்பையும் மீறி, பெருவெற்றி கண்ட மாவீரர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரும், அவர்தம் சீடராம், தமிழ்த் தாயின் தலைமகனாய், ஈடு இணையற்ற அறிவாசானாய் விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் துயில்கின்ற திசை நோக்கி என்னுடைய வணக்கத்தை முதலில் நான் தெரிவித்திட விரும்புகின்றேன்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், இந்த மன்றத்திற்கு முதன்முதலில் வந்தமர்ந்தபோது, "நாங்கள் எதிர்த் தரப்பிலே இருந்தாலும், இறுதி வரையில் இந்த எதிர் வரிசையிலே இருப்போம் என்ற நம்பிக்கையோடு நாங்கள் இங்கே வரவில்லை. என்றைக்காவது ஒரு நாள் பொறுப்பேற்றுக்கொள்கின்ற நாள் வரும்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே சொன்னதை இந்தச் சபையிலே நினைவுபடுத்தி, எனக்கு வாய்ப்பை வழங்கிய, உருவாக்கித் தந்த, மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், உலகமெல்லாம் பாவிக் கிடக்கின்ற தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பெரும் நம்பிக்கையாக விளங்குகின்ற ஆருயிர் அண்ணன் வைகோ அவர்களுக்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகளுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், நான் சார்ந்த திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியின் வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை நான் தெரிவித்திட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "I am going to avoid deficit financing" என்று கடந்த காலத்தில் நிதியமைச்சர்கள் பட்ஜெட் தயாரிக்கின்றபோது சொல்வார்கள். ஆனால், இன்றைய காலகட்டத்தில், நடப்புச் சூழ்நிலையில், பற்றாக்குறை பட்ஜெட் என்பது தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்ட நிலையில், இந்தப் பற்றாக்குறையைச் சமாளிப்பது எப்படி என்பதற்குப் பல வழிகள் இருக்கின்றன—பல வழிகளில் இந்தப் பற்றாக்குறையைச் சமாளித்தாலும், நம்முடைய பற்றாக்குறையை, குறிப்பாக, மத்திய அரசிடமிருந்து நாம் பெறுவதில் எந்தவிதத் தயக்கமும் நாம் காட்டவேண்டிய அவசியம் இல்லையென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'மோதுதலற்ற அணுகுமுறையைக் கடைப்பிடித்து' என்று நம்முடைய பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு மாநில அரசு, மத்திய அரசோடு மோதுதலற்ற அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது என்பது வரவேற்கக்கூடியது, பாராட்டக்கூடியது. இன்னும் சொல்லப் போனால், ஒரு ஜனநாயக அமைப்பில் மத்திய, மாநில அரசு உறவுகளில் அந்த மோதுதலற்ற அணுகுமுறை என்பது பாராட்டக்கூடியதுதான். ஆனால், அந்த அணுகுமுறையின்மூலமாக மட்டும், நாம் பெற முடிவதை, பெற வேண்டியதைப் பெற முடியாவிட்டால், எப்படியாவது, எந்த வகையிலாவது, நம்முடைய உரிமைகளை, நம்முடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசிடமிருந்து நாம் பெறவேண்டியதைப் பெற்றே ஆக வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதே மன்றத்தில்தான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்தபோது இங்கே சொன்னார்கள்; "நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையான திட்டங்களை எடுத்துச் செல்கிறபோது, நிதிநிலைப் பற்றாக்குறை ஏற்படுமானால், அந்த இடையூறுகளை, பற்றாக்குறையை நீக்குவது மத்திய சர்க்காரின் இன்றியமையாத கடமை" என்று சொல்லிவிட்டு, மேலும் சொல்கிறார்: "மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் முயற்சிகளை எடுக்கின்றபோது மத்திய சர்க்கார் இதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை என்றால், மத்திய சர்க்காரின் போக்கு அம்பலப்படுத்தப்படும், மத்திய சர்க்காரின் போக்கு கண்டிக்கப்படும், மத்திய சர்க்காரின் போக்கு சந்திக்குக் கொண்டு வரப்படும் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்" என்று அன்றைக்கு முதலமைச்சராக இருந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள்.



பிற்பகல் 12–25

எனவே, மோதுதல் இல்லாத அணுகுமுறையில், நாம் பெற வேண்டியதைப் பெற்றால் மகிழ்ச்சி, இல்லையென்றாலுங்கூட, நமக்கு அண்ணா சொல்லிவிட்டுப் போன வழிமுறைகளைப் பின்பற்றி, நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான நிதி ஆதாரங்களை மத்திய அரசிடமிருந்து பெற வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே அண்ணாதான் சொன்னார், "போராட்டம் என்பது, கிளர்ச்சி என்பது தவிர்க்க முடியாதது, ஜனநாயகத்தில் ஒரு அங்கம்" என்று சொன்னார். "கிளர்ச்சி என்பது ஜனநாயகத்தின் ஒரு அங்கம்" என்று சொன்னார். "Agitation is a part of democracy" என்று சொன்னார். சொல்லிவிட்டுச் சொன்னார், "Agitation is a constitutional form of expressing either a displeasure or a demand" என்று சொன்னார். எனவே, நம்முடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு எந்த வகையிலும் மத்திய அரசை வலியுறுத்தி, நாம் பெற வேண்டிய உதவிகளைப் பெற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மனித உடலில் இதயம் எப்படி இருந்து மனிதனை இயக்குகிறதோ, அதைப்போல, ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு இதயமாக இருந்து வருபவர்கள் ஏழை விவசாயப் பெருமக்கள். அந்த விவசாயப் பெருமக்கள் உற்சாகம் அடைந்தால்தான் பொருளாதாரம் வளர்ச்சி பெற முடியும். உற்பத்திகள் பெருகும். உற்சாகத்தை விவசாயிகள் இழந்துவிட்டால், பொருளாதார வளர்ச்சியை இந்த நாட்டிலே நாம் நிச்சயமாகப் பெற முடியாது. எனவே, விவசாயிகள், விவசாயப் பெருமக்கள், காலங்காலமாகக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்ற அந்த விவசாயப் பெருமக்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நம்முடைய நிதிநிலை அறிக்கையில் இன்றைக்கு விவசாயப் பெருமக்களுக்குக் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், கூட்டுறவு வங்கிகள்மூலமாக மட்டும் விவசாயிகள் கடன் முழுமையாகப் பெற்று பலன் அடைந்துவிடவில்லை. பல இலட்சக்கணக்கான விவசாயிகள், எண்ணற்றவர்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன்களைப் பெற்றிருக்கிறார்கள். அந்த எண்ணற்ற விவசாயப் பெருமக்களுக்கு இந்த பட்ஜெட்டில் எந்தவிதமான சலுகையும் காட்டப்படவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். இன்றைக்கு பட்ஜெட்டைப் பார்த்தால், முதல் கட்டமாக முப்பதாயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இலட்சக்கணக்கான மற்ற குடும்பங்களுக்கு எந்தக் காலவரையறையும் நிர்ணயம் செய்யப்படவில்லை. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படுவதற்குக் காலவரையறை நிர்ணயிக்கப்படவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, படித்துப் பட்டம் பெற்ற மாணவர்கள், இந்த நாட்டில் ஏறத்தாழ ஐம்பது இலட்சம் இளைஞர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட எண்ணற்ற அந்த இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு, படித்துவிட்டு வேலையில்லாமல் திண்டாடுகின்ற இளைஞர்களுக்குப் பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. அதற்கு மாறாக, படித்துவிட்ட அந்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ததற்குப் பிறகும் ஐந்தாண்டுகள் அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று சொன்னால், மாதாமாதம் உதவித் தொகை மூன்றாண்டுகளுக்கு வழங்குவதாக பட்ஜெட்டிலே இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுகள் கழித்து, அவர்கள் வாங்குகின்ற அந்த உதவித் தொகையும் மூன்றாண்டுகளோடு நின்றுவிட்டால், அதற்குப் பிறகு அவர்களுடைய கதி என்ன என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே, இப்படிப் பல திட்டங்கள் நம்முடைய பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டிருந்தாலுங்கூட, முழுமையாக இந்தத் திட்டங்கள் எல்லாம் செயல் வடிவம் ஆவதற்கான வழிவகை எதுவும் இந்த பட்ஜெட்டிலே இல்லை என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்திட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-30*

அது மட்டுமல்ல; முதியோர் உதவித் தொகை, விதவைகளுக்கு, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு, ஆதரவற்ற விதவைகளுக்கு, உடல் ஊனமுற்றவர்களுக்கு எல்லாம் இங்கே உதவி செய்வதற்கு, பென்ஷன் வழங்குவதற்குத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க, வட்டாட்சியரிடமும், சம்பந்தப்பட்ட அதிகாரியிடமும் நாங்கள் மனுக்கள்



வழங்கி, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், விசாரணையை முடிப்பதற்கு ஒரு கால அவகாசம் எடுத்துக்கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த உதவியை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் மன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கு வருகிறேன். எங்களுடைய திருமங்கலம் தொகுதியைப் பொறுத்தமட்டிலும், காலங்காலமாக திருமங்கலம் தொகுதி மக்கள் மட்டுமல்லாமல், சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற ஏராளமான, நூற்றுக்கணக்கான கிராம மக்களும் நீண்ட காலமாகப் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று எதிர்பார்த்து வருகிறார்கள். அங்கே போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக. போக்குவரத்து நெரிசல் என்பது, காலங்காலமாக, திருமங்கலம் நகரத்தில் பார்க்கலாம். நம்முடைய அமைச்சர் பெருமக்களாக இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சராக இருந்தாலும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், மதுரையிலிருந்து, தென் பகுதிக்கு, விருதுநகருக்கு, திருநெல்வேலிக்குச் செல்கின்றபொழுது, நீங்கள் பார்க்கலாம். திருமங்கலத்தில் எப்பொழுது பார்த்தாலும் நெரிசலாக, traffic jam ஆகக்கூடிய ஒரு நிலைமை அங்கே உருவாகி வருகிறது. அதற்காகத்தான் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக அங்கே இருந்து வருகிறது. அந்தப் புதிய பேருந்து நிலையத்திற்கு, ஊரின் தென் பகுதியில், வேண்டிய இடம் ஏற்பாடாகியிருக்கிறது. தேவையான புறம்போக்கு இடமும் இருக்கிறது. தனியார் நிலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அங்கே புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, திருமங்கலத்தில் ஒரு sub-court தேவை என்பது நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. அங்கே ஒரு குற்றவியல் நீதிமன்றமும், அதேபோல, மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் இருந்து வருகின்றன. ஏறத்தாழ 110 வழக்கறிஞர்கள், அங்கே வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். ஒரு வருடத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் மேல்முறையீட்டிற்காக மதுரைக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலையும் இருந்து வருகிறது. எனவே, மதுரையிலிருந்து விருதுநகருக்குச் செல்கின்ற வழியில் ஒரு மிகப் பெரிய நகராட்சியாக இருந்து வருகின்ற திருமங்கலத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வீர. இளவரசன்] [2006 ஜூலை 24

ஒரு பெரிய நகராட்சியாக இருக்கின்ற திருமங்கலத்தில், ஏறத்தாழ 300 கிராமங்களை உள்ளடக்கியுள்ள அந்தத் திருமங்கலம் சுற்றுவட்டாரத்தில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்று அமைத்திட வேண்டும். திருமங்கலத்தைப் பொறுத்தமட்டில், அங்கே தனியார் கலைக் கல்லூரி ஒன்று மட்டும்தான் இருக்கிறது. அரசுக் கலைக் கல்லூரி ஒன்று அமைத்தால், 300–க்கும் மேற்பட்ட கிராம மாணவர்கள் விருதுநகருக்கும், மதுரைக்கும் சென்று படிக்கின்ற நிலைகளெல்லாம் மாறி, திருமங்கலத்திலேயே படிப்பதற்கு வசதி ஏற்படும். எனவே அந்த அடிப்படையில், திருமங்கலத்தில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்று அமைப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், திருமங்கலம் தொகுதியைப் பொறுத்தமட்டிலும் ஒரு பின்தங்கிய தொகுதியாக இருந்து வருகிறது. குறிப்பாக, திருமங்கலம் ஒன்றியப் பகுதியும், கள்ளிக்குடி ஒன்றியப் பகுதியும் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக, கிராமங்களை, குக்கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளாக இருந்து வருகின்றன. அங்கே பெரிய தொழிற்சாலைகள் கிடையாது. ஒன்றிரண்டு தொழிற்சாலைகளைத் தவிர்த்து, பெரிய தொழிற்சாலைகள் எதுவும் கிடையாது. எனவே, அந்தப் பின்தங்கிய பகுதியில் இருக்கின்ற மக்கள் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கும், அதேபோல, அவர்களுடைய பொருளாதார நிலை மேம்படுகின்ற வகையிலும், திருமங்கலம் தொகுதியை உள்ளடக்கிய திருமங்கலம் தாலுகாவைப் பின்தங்கிய பகுதியாக அறிவித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திடவும், தொழில் வளம் பெருகவும், பொருளாதார நிலை மேம்படவும் இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களது திருமங்கலம் தொகுதியில், திருப்பரங்குன்றம் ஒன்றியம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. ஒரு பாதி ஒன்றியத்தில், திருமங்கலம் தொகுதி வருகிறது. அந்தத் திருப்பரங்குன்றம் ஒன்றியத்தில் நிலையூர் கால்வாய்ப் பாசனத் திட்டம் என்ற ஒரு திட்டம் இருந்து வருகிறது. திருப்பரங்குன்றம் ஒன்றியத்தில் இருக்கின்ற பெரும்பாலான கிராமங்களுக்கு அந்த நிலையூர் கால்வாய் செல்கிறது. ஆனால், அந்த ஒன்றியத்திலே இருக்கின்ற நெடுமதுரை, தொட்டியபட்டி என்ற இரண்டே இரண்டு கிராமங்களுக்கு மட்டும் அந்த நீர்ப்பாசன வசதி அங்கே செய்து தரப்படவில்லை. எனவே, இந்த அரசு நிலையூர் கால்வாய்ப் பாசனத் திட்டத்தை நெடுமதுரை, தொட்டியபட்டி ஆகிய இரண்டு



2006 ஜூலை 24] [திரு. வீர. இளவரசன்]

கிராமங்களுக்கும் விரிவுபடுத்தித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம் தொகுதியில் இருக்கின்ற குக்கிராமங்கள், பல கிராமங்கள், இன்னும் பஸ்களை, பேருந்துகளைப் பார்த்தறியாத கிராமங்களாக இருக்கின்றன. எனவே, நான் அது சம்பந்தமாக உரிய அதிகாரிகளிடம் மனுக்களும் கொடுத்திருக்கிறேன். எனவே, அனைத்துக் கிராமங்களுக்கும் பஸ் போக்குவரத்தை ஏற்படுத்துகின்ற வகையில் இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

திருமங்கலம் தொகுதியில் இருக்கின்ற பெரும்பாலானவர்கள் விவசாயப் பெருமக்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை, உடனடியாகக் கடன் கிடைப்பதற்கு, கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குடிதண்ணீர் வசதி. எங்கள் தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று, கள்ளிக்குடி ஒன்றியப் பகுதி முழுவதும் இருந்து வருகிறது. ஆனால், குறிப்பிட்ட கிராமங்கள் தவிர்த்து, மற்ற கிராமங்களுக்கு அந்தக் குடிநீர்த் திட்டம், இன்னும் செல்லவில்லை. எனவே, குடிநீர் வசதியில்லாத கிராமங்களுக்குக் குடிநீர் வசதியை ஏற்படுத்துவதற்குத் தகுந்த திட்டங்களை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இந்த பட்ஜெட்டிலே விவசாயிகளுக்கு இன்னும் சலுகைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். நான் சொல்வதற்குக் காரணம், விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கிறார்கள். நான் சொல்லித் தெரியவேண்டிய அவசியமில்லை. மூத்த உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள், முதலமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் தெரியும். விவசாயிகள், முன்னேற்றம் அடைந்தால்தான், நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய முடியும். அதற்காகத்தான் அவர்களுக்கு அதிக வாய்ப்பை அளிக்க வேண்டும். மற்ற வர்க்கத்தைவிட, மற்ற தரப்பினரைவிட, இந்த நாட்டில் இருக்கின்ற அனைத்துத் தரப்பைவிட விவசாயப் பெருமக்கள் மிகவும் அவல நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு

ஒரு பாதுகாப்பு, அவர்களுக்கு ஒரு கூடுதலான வாய்ப்பு, அவர்களுக்கு ஒரு கூடுதலான சலுகையை இந்த அரசு வழங்கி அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும். அதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்து. அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு அதிகமான சலுகைகளை வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், "ஆட்சியை ஓர் அரசியல் கட்சிதான் நடத்துகிறது என்றாலும், நிர்வாகத்தில் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது. நாங்கள் அரசின் உள் வாயில்படியில் இருக்கலாம். நீங்கள் பக்க வாயில்படியில் இருக்கலாம். ஆயினும், அரசின் கோட்டைக்குள்தான் எல்லா அரசியல் கட்சிகளும் இருக்கின்றன" என்று எதிர்க்கட்சிகளைப் பார்த்து அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே சொன்னார்கள் என்பதை இந்த மன்றத்திற்கு நினைவுபடுத்தி, "சில நேரங்களில் ஆர்வத்தின் காரணமாக நேர் வழி நடக்காது, இப்பக்கம், அப்பக்கம் சில நேரம் சாய நேரிட்டாலும், எங்களைத் தடுத்து நிறுத்தி, நல்வழி நடத்திச் செல்லவேண்டிய பெரும் பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பைத் தாங்கள் செம்மையாக நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்று அன்றைய பேரவைத் தலைவரைப் பார்த்து, அன்றைக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நம்முடைய பேரவைத் தலைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கவனப்படுத்தி, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜ கண்ணப்பன் அவர்கள்.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொழுது புலர்ந்தது, வசந்தம் தேர் ஏறி இங்கே மீண்டும் வந்திருக்கிறது. இலையுதிர்க் காலம் விடைபெற்றுச் சென்றிருக்கிறது. தமிழ்ச் சமுதாயத்தின் காவல் அரணாகத் திகழும் திராவிட முன்னேற்றக் கழகம், நம்முடைய ஒப்பற்ற தலைவர், திராவிட இயக்கத் தம்பிமார்களின் ஒரே அண்ணன், எங்களையெல்லாம் அரசியலிலே நிரந்தரமாக இடம் பெறுவதற்கு அரவணைப்புச் செய்திருக்கின்ற ஒப்பற்ற தலைவர், உலகத் தமிழ் மக்களுடைய நம்முடைய தலைவர், ஐந்தாவது முறையாக இந்த நாட்டினுடைய அரசுப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற ஆருயிர் அண்ணன், தலைவர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராகப்



பொறுப்பேற்றிருக்கிறார். கலைஞர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறபொழுது, அவருடைய பேச்சாற்றல், எழுத்தாற்றல், இவற்றையெல்லாம் நாம் சொல்கின்றபொழுது, அவருடைய கருத்திலே புயலின் வேகம், புலியின் சீற்றம், கரும்பின் இனிமை, காவிய ரசனை, தமிழின் ஊற்று, தன்மான உணர்வு, இவை எல்லாம் நிரம்பியிருக்கிற ஒரு மாபெரும் தலைவன் இந்த நாட்டிற்குப் பொறுப்பேற்று இன்றைக்கு ஏழை மக்களுக்கு நல்வழி காட்ட வந்திருக்கிறார். தேவனின் ஆட்சி வருமென்று கிறிஸ்தவர்கள் நம்பியிருந்ததைப்போல, கலைஞர் ஆட்சி வருமென்று தமிழக மக்கள் நம்பியிருந்தார்கள். அது நிறைவேறியிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கை என்பது, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய வழிகாட்டுதலில், நம்முடைய ஆருயிர் அண்ணன் இனமானப் பேராசிரியர் அவர்கள் வழங்கியிருக்கிற ஒரு அமுத சுரபி, அட்சயபாத்திரம். இடுப்பு ஒடியப் பாடுபடும் ஏழை மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை இங்கே தந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கைதான் இந்த நிதிநிலை அறிக்கை.

*பிற்பகல் 12–40*

உலக வரலாற்றில் எத்தனையோ ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், உள்ளூர் வரலாற்றில் ஒரேயொரு தேர்தல் அறிக்கையின்மூலம் இந்த நாட்டைக் கைப்பற்றியவர் தலைவர் கலைஞர் என்பதை இந்த நாடு உணர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பதவியேற்ற நாளில் முத்தான மூன்று திட்டங்களுக்குத் தன்னுடைய முத்திரை பதிக்கும் கையெழுத்தையிட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். 122 கோரிக்கைகளிலே, தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட அந்த ingredients என்று சொல்வார்களே, தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளில் 68–னை 30 நாட்களில் நிறைவேற்றியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

தந்தை பெரியார் நெஞ்சிலே தைத்த முள்ளை எடுத்து எறிந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். தந்தை பெரியாரைப் பற்றிக் கலைஞர் அவர்கள் சொல்கின்றபோது, "தஞ்சைக் கோபுரம்போல் உயர்ந்தவர், தாஜ்மகாலைப்போல சரீரம் படைத்தவர், ஐயாவின் பேச்சு என்றால், அதிரசம் தின்பது போல் நம்முடைய கழகத்தவர்களுக்கு; அணுகுண்டு வீசியதைப்போல் நம்முடைய கயவர்களுக்கு" என்று அன்றைக்குச் சொன்னார். அப்படிப்பட்ட தந்தை பெரியாரின் உணர்வுகளைத் தன் உள்ளத்திலே உள்ளடக்கி, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சிறப்பானதொரு உத்தரவிட்டு, இந்த நாட்டு மக்கள்,

பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் அத்தனை பேருக்கும் ஒரு வழிகாட்டுதலை, சம அந்தஸ்த்தை உருவாக்கியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆட்சி என்பது யாக குண்டத்தால் உருவான ஆட்சி அல்ல, தியாகத் தீயில் உருவான ஆட்சி. கமண்டலங்களிலிருந்து தெளிக்கப்படும் நீரால் உருவானது அல்ல இந்த ஆட்சி. இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி உள்ளிட்ட கட்சித் தோழர்கள், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையின் உழைப்பிலே உருவான ஆட்சி. இந்த ஆட்சியைப் பற்றி நாள் குறிப்பவர்களுக்கு நான் சொல்வேன், எறும்புகள்கூடி இமயத்தைச் சாய்த்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் ஆட்சியை எந்தக் கொம்பாதி கொம்பனும், யாரும் சாய்த்துவிட முடியாது என்பதை இந்த நேரத்திலே சொல்கிறேன்.

உழைக்கும் உரிமையைப் பறித்தவர்கள் யார்? ESMA, TESMA சட்டங்கள் நிலை என்னவாயிற்று? போராடும் தொழிலாளியின் உரிமைகளைப் பறிக்கின்ற ESMA, TESMA சட்டங்களை ரத்துச் செய்தவர் கலைஞர் அவர்கள். அவதூறு வழக்குகள் வாபஸ் பெறப்பட்டது யாருடைய காலத்திலே? எதிர்க்கட்சிகள்மீது போடப்பட்ட ஏராளமான வழக்குகள், அவதூறு வழக்குகள். நம்முடைய தலைவர் அவர்களின் பெருந்தன்மையால், அனைவரையும் அரவணைக்கின்ற போக்கால், மாற்றாரை மதிக்கின்ற மனப்பான்மையால் மனித நேயத்தோடு இந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற்றாரே, அது யாருடைய காலத்தில் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கே பேசிய அருமை நண்பர் சொன்னார். மத்திய அரசோடு மோதல் போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது என்று இங்கே தெரிவித்தார். ஆம், அது உண்மைதான். கடந்த காலங்களிலே தமிழ்நாடு எப்படி அந்த நிலைக்கு உருவானது என்பதை நீங்கள் நன்றாக அறிந்திருப்பீர்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, அவர் டெல்லிக்குச் சென்றபோது என்ன நடந்தது? ஜூலியஸ் சீசரைப் பற்றிச் சொல்வார்கள். 'He came, he saw, he conquered'. 'ஜூலியஸ் சீசர் வந்தார், கண்டார், வென்றார்' என்று சொல்வார்கள். அதைப்போல, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் டெல்லிக்கு வந்தார். மன்மோகன் சிங், திருமதி சோனியா காந்தி உள்ளிட்ட தலைவர்களைக் கண்டார். பல்வேறு திட்டங்களைக் கொண்டு வருவதற்கான காரியங்களிலே வென்றார்



என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால வரலாறு. அதற்கு உதாரணமாக நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். சென்ற ஆண்டைவிட, இந்த ஆண்டுக்கு 37 சதவிகிதம் அதிகமாக, 3,700 கோடி ரூபாய் அதிகமான நிதியினைப் பெற்றுத் தந்த ஒரே தலைவர் கலைஞர் என்பதை இந்த நாடு மறந்திருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவுடைமைக் கட்சி நண்பர்கள் இங்கே பேசினார்கள். அவர்களுடைய சித்தாந்தம் எனக்குத் தெரியும்.

"எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்,
இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்,
வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை
நீங்கி வர வேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை."

அந்தத் தத்துவத்தை உள்ளடக்கிய இந்த நிதிநிலை அறிக்கை என்று அண்ணன் தா.பா. மனம் திறந்து பாராட்டியதாக, நம்முடைய ஸ்ரீவில்லிப்புத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ராமசாமி அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆம். பொதுவுடைமைக் கொள்கைக்கு இன்றைக்கு அல்ல, நேற்றைக்கு அல்ல, என்றைக்குமே உயிர் கொடுக்கின்ற தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நாடு உணர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்களுடைய பயணத்தைப் பற்றி, அவருடைய அரசியல் வாழ்க்கையைப் பற்றி இங்கே பேசுகின்றபொழுது, அவர் நடந்து வந்த பாதை என்பது, சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்ட பாதை அல்ல. கல்லும், முள்ளும், கரடும், முரடும் நிறைந்த பாதைகள். எத்தனை கல்லடிகள், சொல்லடிகள் என்பதை அவருடைய காலத்திலே நாம் பார்த்திருக்கிறோம்.

இங்கே இந்த பட்ஜெட்டைப் பற்றி தேர்தல் அறிக்கையைப் பற்றி, நான் சொல்கின்றபோது, இதில் நான் விரிவாக உள்ளே செல்லவில்லை. ஏனென்று சொன்னால், எல்லாக் கருத்துகளையும் எல்லோரும் பேசியிருக்கிறார்கள். ஒரு சில குறிப்பிட்ட கருத்துகளை மாத்திரம் இந்த நேரத்திலே சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இங்கே மாற்றாரை மதிக்கின்ற போக்கு என்ற நிலை வருகின்றபோது, நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் நெஞ்சாரச் சொன்னார்களே, நாங்கள் உங்களோடு தொடர்ந்து வருகிறோம் என்று. அது எதைக் காட்டுகிறது? அது தோழமையைக் காட்டுகிறது. அது தூண்டிவிடும் போக்கைக் காட்டவில்லை. கர்ம வீரர் காமராஜர் அவர்களைப் பற்றிச் சொல்கின்றபோது நம்முடைய தலைவர், அவருடைய பிறந்த நாளை 'கல்வி வளர்ச்சி நாள்' என்று அறிவித்து, அதற்குச் சட்டமும் இயற்றப்

[திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்] [2006 ஜூலை 24

போகிறோம் என்ற அறிவிப்பையும் இன்றைக்குத் தந்திருக்கிறாரே, அமரர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களது பெயரால், திரைப்பட நகரைப் புதிதாக்கி, ஏற்கெனவே இருக்கின்ற அந்த நகரை நவீனமாக்கி M.G.R. Film and Television Institute என்று பெயர் வைக்கப் போகிறோம் என்று தெரிவித்திருக்கிறாரே, அது எதைக் காட்டுகிறது?

*பிற்பகல் 12–45*

ஒரு காலத்திலே சொன்னார். சிந்தைக்குரிய நண்பர், செல்வாக்குள்ள முதலமைச்சர் என்று அமரர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பாராட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதைப்போல, இந்த நாட்டிற்காகத் தன் உயிரை நீத்த நம்முடைய அன்னை இந்திரா காந்தி அம்மையார் குடும்பம். அந்தக் குடும்பத்திலே இருந்து, இந்த நாட்டினுடைய இளைய தலைவராக, பாரதப் பிரதமாக இருந்த ராஜீவ் காந்தி அவர்களுடைய நினைவாக விமானம் ஓட்டுகின்ற பயிற்சி நிலையம். இங்கு விமானம் ஓட்டுகிற விற்பன்னர்களுக்குப் பயிற்சி கொடுக்கின்ற ஓர் அருமையான நிலையம். ஆகவே, இப்படி எல்லாத் தலைவர்களையும், பொதுவுடைமைக் கருத்துகளையும் இங்கே வைக்கிறார். தேசியத் தலைவர்களையும் இங்கே ஏற்றுக்கொள்கிறார். ஏன்?

பாட்டாளிகளுக்கு ஒன்றுமில்லையா என்று அங்கே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இருக்கிறது, அதுதான் சமூக நீதி. பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கொள்கைகள் திராவிட இயக்கத்தின் கொள்கையோடு ஒத்துப்போகின்ற சமூக நீதிக் கொள்கைகள். அந்த சமூக நீதிக்காக இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்திருக்கின்ற முயற்சி, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, சிறுபான்மை மக்களுக்காக அவர் எடுத்திருக்கிற முயற்சியை, பாட்டாளிகள் பாராட்டாமல் இருக்கமாட்டார்கள். இன்றைக்கு 52 ஆயிரம் பேர்களுக்கு Engineering கல்லூரிகளில் இடம்—39 ஆயிரம் பேர்களுக்கு அன்றைக்குக் கிடைத்தது. கூடுதலாக 13 ஆயிரம் பேர்களுக்குக் கிடைக்கப் போகிறது. இது எதைக் காட்டுகிறது? 'கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது' என்று சொல்வார்கள். எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல், அமைச்சர்கள் அளவிலே, முதலமைச்சர் அளவிலே பேச்சுவார்த்தை நடத்தி, கல்லூரிகளுடைய நிறுவனர்களை எல்லாம் அழைத்து, சுமுகமான சூழ்நிலை. நீதிமன்றத்திற்குச் சென்றாலுங்கூட, நியாயமான உணர்வோடு, இன்றைக்கு அந்த நிலைகள் எல்லாம் பேசித் தீர்க்கப்பட்டு, 52 ஆயிரம் பேர் பொறியியல் கல்லூரிகளிலே படிக்கின்ற வாய்ப்பை நாம் உருவாக்கி இருக்கிறோம்.



2006 ஜூலை 24] [திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்]

இன்றைக்கு வேலைவாய்ப்பைப் பற்றி இங்கே பேசினார்கள். நம்முடைய கண்ணியம் மிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இங்கே தெரிவித்தார்கள். வேலைவாய்ப்பு என்பது ஒரே நாளில் தீர்ந்து விடுகிற பிரச்சினை அல்ல. இந்திய நாட்டில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, எல்லா நாடுகளிலும் இருக்கின்ற மிகப் பெரிய பூதாகரமான பிரச்சினை. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் என்ன முயற்சிகள் எடுக்கிறோம் என்பதைத்தான் ஒரு முக்கியமான அங்கமாக இந்த நேரத்திலே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கடந்த ஆட்சிக் காலங்களிலே வேலை நியமனத்திற்குத் தடை. அந்தத் தடையின் காரணமாகப் பல ஆயிரம் பேர்களுக்கு, பல இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடையாது. E.B.–யிலே எடுத்துக் கொண்டால் ஆட்கள் கிடையாது. கூட்டுறவுத் துறையிலே எடுத்துக் கொண்டால் பல இடங்கள் காலியாக இருக்கின்றன. உள்ளாட்சித் துறையிலே இடங்கள் காலியாக இருக்கின்றன. பொறியாளர்கள் இடங்கள் காலியாக இருக்கின்றன. சத்துணவுத் துறையிலே இடங்கள் காலியாக இருக்கின்றன. இப்படிப் பல இடங்களிலே, வேலை நியமனத் தடைச் சட்டம் இருந்த காரணத்தினாலே, பணியிடங்கள் எல்லாம் காலியாக இருக்கின்றபோது, அரசு நிர்வாகத்தை ஓர் அரசு எப்படி நடத்த முடியும்? அதை உணர்ந்த காரணத்தினாலேதான் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் வேலை நியமனத் தடைச் சட்டத்தை ரத்துச் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) வேலைவாய்ப்பை. உருவாக்குகின்ற ஒரு மாபெரும் திட்டத்தைத் தந்திருக்கிறார்.

அது மட்டுமல்ல. வேலைவாய்ப்பை ஓர் அரசாங்கமே அனைவருக்கும் கொடுத்துவிட முடியாது. இங்கே பேசுகின்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். அரசியல் ரீதியாக நாம் கருத்துகளைச் சொன்னாலுங்கூட, 50 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து இருக்கின்றார்கள் என்று சொன்னால், அந்த 50 இலட்சம் பேர்களுக்கும் ஓர் அரசாங்கம் வேலை கொடுத்துவிட முடியாது. 'ஜீ பூம் பா' என்று மந்திரக்கார வேலை எல்லாம் செய்ய முடியாது. ஆக்கபூர்வமான காரியங்களை நாம் செய்தாக வேண்டும். அதற்கு என்ன வழி? தனியார் துறையிலும் வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற திட்டங்கள். அரசுமூலமாகவும் வேலைவாய்ப்பைக் கொடுக்கின்ற திட்டங்கள். அதன்மூலம், அதாவது, internal employment, external employment என்று சொல்வார்கள். அதுபோல, வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய திட்டங்களை, அதைப்போல Project

என்று சொல்லக்கூடிய பெரிய திட்டங்களை எல்லாம் இந்த நாட்டிற்குக் கொண்டு வந்தால்தான் உண்மையாகவே இந்த நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு வேலை கொடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். அதன் முதல் முயற்சியாகத்தான் ஓய்வறியாச் சூரியன் ஓய்வு எடுக்கச் சென்ற நேரத்திலேகூட, WIPRO, INFOSYS நிறுவனங்களோடு பேசி, 1,250 கோடி ரூபாய் செலவிலே 25 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பைத் தருகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) திட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்.

அது தவிர, சாலைப் பணியாளர்களுக்கு வேலை. அதைப்போல, சத்துணவுப் பணியாளர்களுக்கு எல்லாம் வேலை தரப் போகிறோம் என்று பல வேலைவாய்ப்பு அறிவிப்புகள். அரசுக் கல்லூரிகளிலே இன்று வேலை; டாக்டர்கள், செவிலியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் என்று பலதரப்பட்ட மக்களுக்கு வேலை, போக்குவரத்துத் துறையிலே வேலை; மின் துறையிலே வேலை என்று பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற அளவிலே ஒரு சக்தியாக இந்த அரசு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–50*

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லாத நேரத்தில், சென்ற ஆட்சி பொறுப்பேற்ற நேரத்திலே 28 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இருந்தது என்று சொல்லி எத்தனை பிரளயங்கள் நடந்தன என்பது இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், ஏற்கெனவே இருந்தவர்களுக்குத் தெரியும். ஆனால், இன்றைக்குக் கடன் எவ்வளவு தெரியுமா? 56 ஆயிரம் கோடி ரூபாய் சுமையோடுதான் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் அதற்காக அங்கலாய்க்கவில்லை; கூப்பாடு போடவில்லை; கூக்குரல் இடவில்லை. பொறுமையாக, நிதானமாக, தனக்கே உரிய அரசியல் முதிர்ச்சியோடு, பொருளாதார நிபுணர்களையெல்லாம் தன்னகத்திலே வைத்திருந்தாலும், அவருக்குத் தெரியாத பொருளாதாரம் இல்லை என்பதை நான் அறிவேன்.

50 ஆண்டு அரசியலிலே அவர் பெற்ற அனுபவங்கள், அதை வைத்து அருமையான பட்ஜெட்டை, வரி இல்லாத பட்ஜெட்டைத் தந்திருக்கிறார் என்றால், ஒரு பக்கம் 56 ஆயிரம் கோடி ரூபாய் கடன், ஒரு பக்கம்



வரியே போடக்கூடாது, ஆனால் ஒரு பக்கம் சலுகைகளையும் வழங்க வேண்டும். எப்படிச் சலுகைகள்? ஏற்கெனவே இருந்த சலுகைகள். பஸ்ஸிலேயும் *இலவசமாகப் போக வேண்டும், சைக்கிளும் கொடுக்க வேண்டும், சாப்பாடும் போட வேண்டும், இரண்டு முட்டைகளையும் கொடுக்க வேண்டும், அதுபோக, ரூபாய் 200-ஐ 400 ஆக்க வேண்டும், ஓய்வூதியம். அதற்கே ரூபாய் 400 கோடி, 500 கோடி. உடல் ஊனமுற்றோருக்கு ரூ.500. அப்புறம், இளைஞர்களுக்குத் தனியாகப் பணம் கொடுக்க வேண்டும். இப்படி எல்லாமே *இலவசம். இதுதான் நாட்டினுடைய சித்தாந்தம். அப்படி இருந்தாலுங்கூட, எதற்காகக் கொடுக்கிறோம்? இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை, ஏழை எளிய மக்களைக் கைதூக்கி விடுவதற்காக.

ஒரு முறை அவர் சொன்னார், "தாழ்ந்து கிடக்கிற தமிழனைக் கைதூக்கி விடுவதற்கு நாங்கள் முயற்சி எடுக்கிறோம். நீங்கள் கை கொடுக்க வாருங்கள். கழுத்தறுப்பு வேலைகளிலே ஈடுபடாதீர்கள்" என்று ஒரு தடவை கலைஞர் அவர்கள் சொன்னது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. ஆகவே, கைதூக்கி விடுகின்ற நிகழ்ச்சியாகத்தான் இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம், ஏற்கெனவே இருந்த திட்டங்களையும் சேர்த்து, டி.வி. பெட்டி கொடுக்கிறோம், மற்றும் பல திட்டங்களையெல்லாம் கொண்டு வருகிறோம்.

2 ரூபாய்க்கு அரிசி. சொன்னார்களே, அதுதான் நம்முடைய முல்லைவேந்தன் அவர்கள் சொன்னார். ஒரு நாள் சம்பளத்திலே ஒரு பெண் ஒரு மாத அரிசியை வாங்க முடியும் என்ற நிலையை உருவாக்கி இருக்கிறார் கலைஞர் அவர்கள் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மைதான். கூழுக்கு அழுத நிலை மாறி...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ** என்று சொன்ன அந்தச் சொல், அதைப் பெறுகின்றவர்கள் உள்ளத்தை புண்படுத்தும். ஆகவே** என்பதை இலவசம் என்று மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கருத்தை நான் இலவசமாகத்தான் சொல்கின்றேன். ** அல்ல. (சிரிப்பு)

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** அதுதான் தலைவர் அவர்களே, அவருக்கும், எங்களுக்கும் இருக்கிற வித்தியாசம். அவர் எதையுமே ஆழ்ந்த கருத்தோடு சிந்திப்பவர்கள். நாங்கள் சில நேரத்திலே

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

உணர்ச்சிவசப்பட்டு விடுவோம். ஆகவே, தலைவர் அவர்களின் கூற்று என்பது, எந்தக் காலத்திலும் அவருடைய நிதானத்தை இழக்காமல் சொல்லுகின்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பில், 'இலவசம்' என்று திருத்திக்கொள்ளப்படுகிறது.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** ஆகவே, அத்துணை திட்டங்களையும் இலவசமாகத் தந்துவிட்டார்—டி.வி.-ஐப் பற்றி இன்றைக்குக் கேட்டார்கள், 30 ஆயிரம்தானே என்று கேட்டார்கள். 750 கோடி ரூபாய் இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. 25 இலட்சம் டி.வி.-க்கு மேல் வாங்குகிற அளவிற்கு நிதி ஆதாரங்களைத் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை நாம் காண முடிகிறது. ஆகவே, இப்படி எல்லா இலவசத் திட்டங்களையும் அறிவித்து, இன்னும் திட்டங்களைத் தந்துகொண்டிருக்கிறார். அதுதான் ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறார் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, தொழில் வளத்தைப் பொறுத்தமட்டில் இன்றைக்குத் தமிழ்நாடு எந்த இடத்தில் இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே தொழில் வளர்ச்சியிலே தமிழகத்தை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியாகத்தான் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே முதலமைச்சர் அவர்கள் தலைமையில், தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிறப்புக் குழு Special Task Force) ஒன்று அமைக்கப்படும் என்பதை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கான வாய்ப்புகள் உருவாகின்றபொழுது, பல்வேறு தொழிற்சாலைகள் இந்த மாநிலத்திற்கு வருகின்ற வாய்ப்பை அவர் பெற்றுவிடுவதற்கு, அவரிடம் இந்தத் துறை இருப்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே விவசாயிகளைப் பற்றிச் சொன்னார். விவசாயத் தொழிலாளர்களுக்கான கோரிக்கைகளைப் பற்றிப் பேசுகின்றபோது, தமிழ்நாட்டிலே இருக்கிற நூற்றுக்கு 60 சதவிகிதம் பேர் இந்த நாட்டிலே விவசாயிகளாக இருக்கிறார்கள். அந்த விவசாயத் தொழிலை உட்படுத்திய



தொழிலைச் செய்கின்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கெல்லாம் என்ன உத்தரவாதம் என்று கேட்டால், அதுதான் இந்த உத்தரவாதம். நீங்கா பயமும், கண்களிலே கலக்கமும் கொண்டிருந்த விவசாயி, 'கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று சொல்வார்கள் அந்தக் காலத்திலே. ஆகவே, இலங்கை வேந்தனையே கடன் பட்டார் நெஞ்சம்போல், ஒரு மனிதனுடைய துக்கத்திற்கு, உயர்ந்த கஷ்டத்திற்குச் சொல்கின்றபோது 'கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று சொல்வதைப்போல, கடன் பட்டுக் கிடந்த அந்த விவசாயப் பெருங்குடி மக்களை நிம்மதிப் பெருமூச்சு விட வைத்திருக்கிற ஒரே தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நாடு மறந்து இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக 6,866 கோடி ரூபாயை ஒதுக்கி, முதல் கட்டமாக இப்பொழுது நிதி ஆதாரங்களை எல்லாம் தந்து, கடனை மட்டும் தள்ளுபடி செய்யவில்லை, கடன்களையும்—விவசாயக் கடன்களையும் கொடுக்கிறோம் என்று ஆயிரம் கோடி ரூபாய் அள்ளித் தந்திருப்பது பாராட்டுக்குரியது. இந்த நிதிநிலை அறிக்கை மிகவும் பாராட்டுக்குரிய அறிக்கை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தரிசு நில மேம்பாடு. நிலமற்ற ஏழைகளுக்காக 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைப் பிரித்துக் கொடுக்கின்ற ஓர் அருமையான திட்டம்.

பிற்பகல் 12–55

கர்ப்ப கால உதவி. மகளிர் நலனைப் பொறுத்தமட்டிலே நான் ஒன்றை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லாக் குடும்பங்களிலும் வசதி வாய்ப்பு இருப்பது கிடையாது. நூற்றுக்கு 75 சதவிகிதம் குடும்பங்களிலே பெண்கள் வேலை பார்த்துத்தான் குடும்பத்தை நடத்துகிறார்கள். அவர்களுக்குக் கர்ப்ப காலம் வந்துவிட்டால் 7 மாதங்களுக்கு மேலே அவர்களால் வேலை செய்ய இயலாது. ஆகவே, குழந்தைப் பேற்றுக்கு முன்னால் 3 மாதமும், குழந்தை பிறந்ததற்குப் பிறகு 3 மாதமும் அவர்கள் ஓய்வு எடுக்க வேண்டிய காலம். அந்தக் காலத்தைக் கணக்கிட்டு, வரும் முன் காக்கின்ற தலைவராக, கர்ப்ப காலத்திலே தாய்மார்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் 6,000 ரூபாய் தருகின்ற அந்த மனப்பான்மை இந்த நிதிநிலை அறிக்கையிலே வரப்பெற்றிருக்கிறது, பாராட்டுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அது தவிர, மகளிர் மேம்பாட்டுக் குழுக்கள். மகளிர் மேம்பாட்டுக் குழுக்கள் எல்லாம் தேர்தலிலே எப்படியெல்லாம் பயன்படுத்தப்பட்டன என்று உங்களுக்குத் தெரியும். அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று

தலைவர் கலைஞர் அவர்கள் விரும்புகிறார். அது எந்த நோக்கத்திற்காக தருமபுரி மாவட்டத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டது என்பதையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார். அதன் நோக்கம் என்ன? ஆனால், அந்த நோக்கத்திலே அந்த மகளிர் குழுக்கள் இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனவா? நான் எல்லோரையும் சொல்லவில்லை. ஒரு சில இடங்களிலே என்னென்ன நடவடிக்கைகள் எல்லாம் இந்தத் தேர்தல் நேரத்திலே நடந்தன என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, அப்படிப்பட்ட நிலை வருகிறபோது, வேறுவிதமாக, அந்த நோக்கம் சென்றுவிடக்கூடாது. எந்த நோக்கத்திற்காக நாம் அதை ஆரம்பித்தோமோ, அந்த நோக்கம் தடைப்பட்டுப் போய்விடக்கூடாது என்பதற்காகத்தான் அருமையான ஒரு திட்டத்தை, மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்குகின்ற திட்டத்தை—5 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்குகின்ற திட்டத்தை அவர் கொண்டு வந்திருக்கிறார்.

அதைப்போல மீனவர்கள். இரவென்றும், பகலென்றும் பாராமல் தன்னுடைய உயிரைத் துச்சமென மதித்து கடலிலே மீன் பிடிக்கும் மீனவர்களுக்காகத் துறைமுகம் தருகிறார், மீன்பிடி வலைகள் மற்றும் அவர்கள் மீன்களை ஏற்றிச் செல்வதற்கு மிதிவண்டிகள், கை விளக்குகள் தருகிறார். ஆகவே, எந்தத் தரப்புக்கும் திட்டம் இல்லாமல் இல்லை. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிற திட்டங்களை ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், எல்லாத் தரப்பு மக்களுக்கும் எல்லாவிதமான சலுகைகளும் வழங்குவதற்கான திட்டங்கள் உள்ளன.

மதமாற்றத் தடைச் சட்டத்தை முழுமையாக ரத்துச் செய்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஆகவே, மதச் சார்பற்ற அரசு என்பதை நிரூபிக்கின்ற விதத்திலே சட்டத்தையும் கொண்டு வந்தவர்.

இங்கே சட்டம்–ஒழுங்கைப் பற்றிப் பேசினார்கள். நான் ஒன்றை மாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன், ஆட்சி மாற்றங்கள் ஏற்படுகின்றபோது, அதுவும் ஏப்ரல், மே மாதங்களிலே மாறுதல்கள் செய்வதிலே தவறு கிடையாது. நாமெல்லாம் ஆட்சியிலே இருந்திருக்கிறோம். ஒரு பொது மாறுதல் வருகிறபோது, ஒரு ஆட்சி மாறுகின்றபோது பொது மாறுதலிலே அதிகாரிகளை மாற்றுகின்ற உரிமையும், அந்த அதிகாரமும் அரசுக்கு இருக்கிறது. அதை யாரும் குறை சொன்னது கிடையாது. சென்ற ஆட்சிக் காலத்திலே அதிகாரிகளை மாற்றியதற்கு யாரும் கூப்பாடு போட்டது கிடையாது. ஆகவே, ஆட்சி மாற்றம் ஏற்படுகின்றது, ஏப்ரல், மே மாதங்களில் அதிகாரிகளை



மாற்றுகின்ற ஒரு காலகட்டம் வருகின்றபோது, மாறுதல் நடைபெறுகிறதே தவிர, யாரையும் மாற்றிவிட்டு, யாரையும் வைக்க வேண்டும் என்பது அல்ல. எல்லோரும் இந்த ஆட்சியினுடைய அதிகாரிகள்தான் என்பதைத் தலைவர் கலைஞர் அவர்கள் உணராதவர்கள் அல்ல. ஆகவே, அந்த மாறுதல்களுக்கும், அரசுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருக்க முடியாது. தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்த ஒரு நிகழ்ச்சி என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீர் வழங்கலைப் பொறுத்தமட்டில் நம்முடைய தமிழ்நாட்டிலே பல்வேறு குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்குகின்ற திட்டத்தை விரைவுபடுத்தவும், அதேபோல ஊரகச் சாலைகள், சிறிய கண்மாய்கள், 100 ஏக்கருக்குக் கீழே இருக்கிற கண்மாய்கள்—நான் ஒன்றை இந்த நேரத்திலே தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன்—100 ஏக்கருக்கு மேலே இருக்கிற கண்மாய்களைப் பொதுப் பணித் துறை எடுத்துக்கொள்கிறது, அதன்மூலம் நிதியாதாரங்களை ஒதுக்கி, அந்தக் கண்மாய்களை நாம் சீரமைக்கிறோம். ஆனால், 100 ஏக்கருக்குக் கீழே இருக்கிற கண்மாய்கள்–Minor Irrigation Tanks என்று சொல்லப்படுகின்ற சிறிய நீர்ப்பாசனக் கண்மாய்களை நிர்வகிக்கின்ற பொறுப்பை நம்முடைய ஊராட்சி ஒன்றியங்களிலே நாம் வைத்திருக்கிறோம். ஆக, இந்த ஊராட்சி ஒன்றியங்களிலே வைத்திருக்கிற கண்மாய்கள், அதிலும் குறிப்பாக, தென் பகுதியிலே இருக்கின்ற மாவட்டங்களிலே அதிகமான கண்மாய்கள் இருக்கின்றன. அவற்றை நிர்வகிக்கின்ற பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களில் இருந்தாலும், அவற்றிற்குத் தனி நிதி ஆதாரத்தை ஒதுக்கி, அந்தக் கண்மாய்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை, அந்தக் கண்மாய்களை ஆழப்படுத்துதல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்தக் கண்மாய்களில் உடைப்புகளை அடைத்தல் போன்றவற்றைச் செய்வதற்கு நம்முடைய கலைஞர் ஆட்சியிலே ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன்.

நீர்ப்பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்வள மேலாண்மைத் திட்டம்–Integrated Agriculture Modernisation and Water Resources Management என்ற ஒரு திட்டத்தின்கீழே, 3,000 கோடி ரூபாயைப் பெற்று வந்து, அதன்மூலம் பொதுப் பணித் துறையிலே பல சாதனைகளைப் புரிய இருக்கின்ற இந்த அரசு இந்த பட்ஜெட்டிலே வழிகாட்டி இருப்பது என்பது நாட்டு மக்களால், விவசாயிகளால் பாராட்டப்படக்கூடிய அம்சம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயி இறந்தால் ஒரு இலட்சம் ரூபாய், 60 வயதிற்கு மேற்பட்டால்

*400 ரூபாய் ஓய்வூதியம், அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி கற்பதற்காகப் பணம், இப்படி ஏராளமான உருப்படியான திட்டங்களை விவசாயிகளுக்காகத் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்கு அறிவிக்கவில்லை என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த வரவு செலவுத் திட்டத்திலே அருமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.*

*இங்கே கண்ணகி சிலையைப் பற்றிச் சொன்னார். கண்ணகி சிலை என்பதை நாம் மட்டும் நினைக்கவில்லை, கலாச்சார வடிவம் என்று. எரிக் மில்லர் என்ற அமெரிக்க மாணவர் சொன்னார், கண்ணகி கலாச்சார வடிவம் என்று சொன்னார். அது 16–6–2006 அன்று 'இந்து' பத்திரிகையிலே வந்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** இப்போதுதானே கொஞ்சம் பேசிக்கொண்டிருக்கிறேன், முடிக்க வேண்டும் அல்லவா? *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

*பிற்பகல் 1–00*

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய நிலை எனக்குப் புரிகிறது; ஒரு சில மணித்துளிகள் கொடுங்கள். நம்முடைய சட்டமன்ற ஜனநாயகத்தைப் பற்றி நாம் பார்க்கிறோம். சட்டமன்றம், ஜனநாயகம், இன்றைக்கு, நேற்றைக்கு அல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து, தலைவர் கலைஞர் காலத்திலிருந்து, எல்லாத் தலைவர்கள் காலத்திலிருந்தும் ஒரு ஜனநாயக நடைமுறை பின்பற்றப்பட்டது என்பதை நாடு அறியும். அன்றைக்குக் காங்கிரஸ் கட்சியில் இருந்த கருத்திருமன் போன்றவர்கள், அனந்தநாயகி போன்றவர்கள், ஆக்கபூர்வமான விவாதங்களை எடுத்து வைத்தபோது, ஓர் அருமையான பதிலைத் தந்தவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அதிலே நான் ஒன்றிரண்டை உதாரணத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். சட்டமன்றம் என்பது மேடை அல்ல. ஆதாரமற்ற விவரங்களை நாம் இங்கு பேசுவதும் கூடாது. இங்கே விவாதம் என்று வருகின்றபோது கருத்துக்குக் கருத்து, சொல்லுக்குச் சொல் என்ற அடிப்படையிலேதான் இருக்க வேண்டும் என்பதிலே ஆழ்ந்த நம்பிக்கை உடையவர் தலைவர் கலைஞர் அவர்கள். அனந்தநாயகி அவர்கள் கேட்கின்றார்கள், "ஆண்களுக்கு நிகரானவர்கள் பெண்கள். அந்தப் பெண்களுக்கு பஸ்ஸிலே



பாதி இடம் கிடைக்குமா" என்று கேட்டார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் பதில் சொல்கிறார்கள், "பஸ்ஸிலே மட்டும் என்ன, பரமசிவனே பாதி இடத்தைக் கொடுத்துவிட்டார்" என்று சொன்னார். ஆக, இப்படி நாசூக்காக பதில். திரு. கிட்டப்பா அவர்கள் அன்றைக்குக் கேள்வி கேட்கிறார்கள், "தஞ்சாவூரிலே விமான நிலையம் வருமா" என்று கேட்கிறார் அது வராது என்பது தெரியும், இப்போது வாய்ப்பில்லை என்று சொல்வதற்கு மறுப்பில்லாமல், "கிட்டப்பா, அது இப்போது கிட்டாதப்பா" என்று சொன்னார். ஆக, இப்படியெல்லாம் நாம் படித்துப் பார்க்கும்போது, எவ்வளவு அருமையான ஜனநாயக நடைமுறைகளைப் பின்பற்றிய இந்தச் சட்டமன்றம், எப்படி எதிர்காலத்திலே நடக்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள் விரும்புகின்றார்கள் என்பதையெல்லாம் அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலே நாங்கள் தெரிந்துகொண்டோம்.

அனைவரையும் அரவணைத்துச் செல்கின்ற தாய்போல் இருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்கள், தமிழுக்குச் செய்த தொண்டைப் பற்றி நான் சொல்லாமல் இருக்க முடியாது. தமிழ் மொழியைப் பற்றி நான் சொல்லிவிட்டு, என்னுடைய உரையை முடிக்க விரும்புகின்றேன். தமிழ் மொழிக்குச் செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுத் தந்த தலைவர், தமிழ்ப் படங்களுக்கு வரி விலக்குத் தந்த தலைவர், ஒன்று முதல் பத்தாவது வகுப்பு வரை கட்டாயத் தமிழ்ப் பாடம் வேண்டும் என்று சொல்லியிருக்கின்ற தலைவர், பல தமிழறிஞர்களைப் பாராட்டி இருக்கின்ற தலைவர், அவர் தமிழ்ப் பணியைப் பற்றிச் சொல்கின்றபோது, அவருடைய வரிகளிலே நான் சொல்ல விரும்புகின்றேன். "பொன்மணிக் குவியலும், வைர, வைடூரிய, முத்துக்குன்றமும், நன்மணி மாடக் கூடங்களும், கோட்டை கோபுரமும், தொழுதேற்றிப் போற்றுகின்ற கொற்றக்குடை ஆட்சியும், தோத்திரத்தால் உயர்ந்துள்ளம் கொள்ளை கொள்ளும் காட்சியும், இன்றிருக்கும், நாளை இல்லாமல் போகக் கூடும்— இன்று இருக்கும், நாளை இல்லாமல் போகக் கூடும், என்றும் இருக்கும் பணி அன்றோ, தமிழுக்குச் செய்யும் பணி" என்றார் கலைஞர். ஆக, ஆட்சி அதிகாரத்தைப் பற்றி அவர் என்றைக்கும் கவலைப்பட்டது கிடையாது. தமிழ் மக்களுக்கும், தமிழ்நாட்டுக்கும், தமிழுக்கும் செய்கின்ற தொண்டைத்தான் அவர் பெரிதாக நினைத்திருக்கின்றார் என்பதை அவர் அன்றைக்கே சொல்லியிருக்கின்றார். ஆகவே, தலைவர் கலைஞர் அவர்களே, உங்களுடைய காலம் தமிழ்நாட்டின் பொற்காலம் என்பதைச் சொல்லி, திருக்குவளை தந்த மாவீரனே, திருக்குறளைக் கற்றுத் தந்த மேலோனே, நீங்கள் வாழ்க! என்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையை வாழ்த்தி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

***திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருமித்த கருத்தும், மாற்றுக் கருத்தும் உடைய மாண்புமிகு பேரவை உறுப்பினர் நண்பர்களே, ஆடி அமாவாசையன்று, இந்நன்னாளில் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு) இந்தப் பாரம்பரியமிக்க தமிழகச் சட்டமன்றத்தில் என்னுடைய உரையை ஆரம்பிப்பதற்குமுன், சுமார் 86 ஆயிரம் யூனிட் இரத்தம் சேகரித்துக் கொடுத்து, தான் இறந்தவுடன் தன்னுடைய இரண்டு கண்களையும் தானமாகக் கொடுத்த என்னுடைய தந்தையார் எஸ்.வி. வெங்கட்ராமன் அவர்களுக்கும், நான் 50 முறை இரத்த தானம் செய்ததை ஊக்குவித்த என் தாய் அலமேலு வெங்கட்ராமன், என் மனைவி உமாமகேஸ்வரி அவர்களுக்கும், சென்னை மக்களின் தாகம் தீர்க்க, புதிய வீராணம் திட்டம், மழை நீர் சேகரிப்பு, சட்டம்–ஒழுங்குப் பாதுகாப்பு, ரவுடிகள் ஒழிப்பு, லாட்டரி ஒழிப்பு, கந்து வட்டி ஒழிப்பு, கட்டப் பஞ்சாயத்து ஒழிப்பு, ஆலயக் கும்பாபிஷேகங்கள், ஆலய, தேவாலய, தர்கா அன்னதானத் திட்டங்கள், சுனாமி, வெள்ள நிவாரண நிதிகள், ப்ளஸ் 1, ப்ளஸ் 2 மாணவ, மாணவிகளுக்கு இலவச சைக்கிள் ஆகியவற்றை வழங்கிய எங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின், தமிழகத்தின் தனிப் பெரும்பான்மை படைத்த ஒரே கட்சியின் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய தலைவி, தமிழகத்தைத் தொழில் துறை முதலீட்டாளர்களின் முகத்துவாரமாக மாற்றிய முன்னோடி, தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய வெற்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

கடவுள் நம்பிக்கை, ஜோதிடம், ஜாதகம், குறி கேட்பது, கைரேகை, வாஸ்து, எண் கணிதம் அனைத்தையும் முழு மனதோடு நம்புகின்ற என்னைத் தேர்ந்தெடுத்த, (சிரிப்பு) இச்சபையின் உறுப்பினராக்கிய மயிலைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். இதுதான் என்னுடைய முதல் தடவையான கன்னிப் பேச்சு. மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்பு பேசும்போது சொன்னார், இலவசம் என்று சொல்லுங்கள், ** என்று சொல்லவேண்டாமென்று. ** என்பது, ரொம்ப நாளாகவே தமிழகத்தில் இடம் இல்லாத ஒரு சொல்லாகி விட்டது. B.C., M.B.C. அவர்களுக்குக் கொடுப்பது, ** கொடுக்கப்படவில்லை என்பது என்னுடைய கருத்து.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



சென்னை, மயிலாப்பூரில் மாண்புமிகு நீதியரசர்கள், அமைச்சர்கள் வசிக்கும் கிரீன்வேஸ் சாலை உட்பட அடிக்கடி மின் வெட்டு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதற்கு முக்கியக் காரணம், மந்தைவெளியில் ஒரு sub-station இல்லாததுதான். அதற்கு இரண்டு கிரவுண்டு நிலம் கிடைத்தால்தான் மந்தைவெளி, மயிலாப்பூர், அனைத்து இடங்களிலும் இந்தப் பிரச்சினை தீரும். அதற்கு ஒரு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–05*

அடுத்தது, அடித்தட்டு மக்களின் அன்றாடப் பிரச்சினை. இலவசக் கழிப்பிடங்கள் என்று அரசு செலவில் கட்டப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் ஒரு முறைக்கு இரண்டு ரூபாய் வசூலிக்கப்படுகின்றது. ஒரு குடும்பத்தில் நான்கு பேர் இருந்தால், நீங்கள் கொடுக்கும் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் வீதம் சாப்பிட்டால்கூட, அடுத்த நாள் அது வெளியில் போக அவர்கள் எட்டு ரூபாய் செலவழிக்க வேண்டும். இது சரி செய்யப்படாவிட்டால், பின்னால் பெரிய பிரச்சினை ஆகிவிடும்.

மயிலை கபாலீசுவரர் கோயிலில் இந்து பக்தர்கள் வேண்டுகோளின்படி திருமணம் நடத்த அனுமதி வழங்கப்பட வேண்டும். அதே சமயம், ஆலயத்தின் தூய்மையும் கெடாமல் பாதுகாக்கப்பட வேண்டும். புரட்சித் தலைவியின் மழை நீர் சேகரிப்புத் திட்டத்தின்மூலம் நிரம்பி வழியும் இக்கோயில் குளத்து நீர் உறிஞ்சப்படாமல் இருக்க, கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களிலுள்ள வணிக வளாகங்கள், குறிப்பாக, ஓட்டல்களிலுள்ள bore pump–களைத் தடை செய்ய வேண்டும். இரண்டு இட்லி 30 ரூபாய்க்கு விற்பவர்கள், ஒரு லாரி மாநகராட்சி குடிதண்ணீர் 600 ரூபாய்க்கு வாங்குவதால் அவர்களுக்கு எந்த நஷ்டமும் ஏற்படாது என்பது என் கருத்து. சென்னையில் சுடுகாடுகளில் வெட்டியான் வேலை பார்ப்பவர்களுக்கு வருடந்தோறும் வழங்கப்படும் லைசென்ஸ் முறை நீக்கப்பட்டு, அவர்கள் அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இறந்தவர்களோடு வாழும் மனிதர்களுக்காக அரசு இந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் அறியும் சட்டம்— கடந்த புரட்சித் தலைவியின் ஆட்சியிலேயே இதற்கான அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். தேர்வுக் குழுவில் புரட்சித் தலைவி அவர்களும், அப்போதைய நிதி அமைச்சரும், அன்றைய எதிர்க்கட்சித் தலைவர்,

இன்றைய நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்களும் இடம் பெற்றிருந்தார்கள். மூன்று அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். ஒரு தலைமை ஆணையர்–Chief Information Commissioner, மற்றும் இரண்டு ஆணையர்கள்–Information Commissioners, மொத்தம் மூன்று பேர். ஆனால் இன்று Right to Information Act நடைமுறையில் உள்ளதா என்று தெரியவில்லை. ஏனென்றால், பலருக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. பொது மக்களுக்கு இந்த விவரம் தெரிவதற்குப் பல பத்திரிகைகள்மூலம் இதைத் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவில், தமிழ்நாட்டில், சென்னையில் மட்டும் Set–top box முறை என்ற முறை இருக்கிறது. மாதம் 100 ரூபாய் Cable டி.வி.க்காகக் கட்டுபவர்கள் cricket match, football match போன்றவை வரும்போது மட்டும் ஒரு தனியார் தொலைக்காட்சி தயவில் பார்க்க வேண்டிய சூழ்நிலை மாற்றப்பட வேண்டும் என்று அனைத்துத் தமிழக மக்களும், குறிப்பாக, சென்னையில் உள்ளவர்கள் அவர்களிடம் வேண்டிக் கொள்கிறார்கள். சென்னையில் போக்குவரத்திற்காக மெட்ரோ இரயில் திட்டத்தைவிட மோனோ இரயில் திட்டம்தான் சிறந்தது என்று பாங்காக் போன்ற ஜனத்தொகை மிகுந்த மேலை நாடுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, அதன்படி செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வாகனங்களில் முகப்பு விளக்கில் கருப்பு வண்ணம் பூசுவது ரொம்ப வருடமாக நடைமுறையில் இருக்கிறது. நான் ஸ்கூலிலே படிக்கிறபோது இருந்தே இருக்கிறது. வருடத்திற்கு ஒரு நாள் பொட்டு வைக்கும் வைபவம் என்கிற மாதிரி, ரோட்டில் வண்டியையெல்லாம் நிறுத்தி ஒரு கருப்புப் பொட்டு வைப்பார்கள். யாராவது குனிந்து நின்றால் அவர்கள் நெற்றியிலேகூட ஒரு பொட்டு வைத்து விடுவார்கள் அன்றைக்கு. ஆனால் அதற்கப்புறம் அந்தப் பொட்டு இருக்கிறதா, இல்லையா என்று தெரியாது. இதற்குப் பதிலாக வாகன விளக்கைத் தயாரிக்கும் நிறுவனத்திலேயே விளக்கின் உட்புறம் நிரந்தரமாகக் கருப்பு வண்ணம் பூசும் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

R.T.O. அவர்களின் கூற்றுப்படி, சென்னையில் ஒரு நாளில் சுமார் 600 வாகனங்கள் இன்று பதிவு செய்யப்படுகின்றன. ஒரு மாதத்தில் 12,000 வாகனங்கள், ஒரு வருடத்தில் 1,44,000 வாகனங்கள் பதிவு



செய்யப்படும். இவை ஓடுவதற்கும், நிறுத்தப்படுவதற்கும் என்ன கட்டமைப்பு வசதி செய்து கொடுக்கப்படும் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

அடுத்தபடியாக சென்னை, பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம் வழியாக பெசன்ட் நகர் வரை அடையாறு ஆற்றின் மேல் ஒரு போக்குவரத்துப் பாலம் அமைத்துத் தர வேண்டும். அந்தப் பாலம் இருந்தால் மட்டுமே இன்று தென் சென்னையில் போக்குவரத்து நெரிசல் குறையும் என்பது என்னுடைய கருத்து.

'இனமுரசு' என்று புதிதாகப் பட்டம் சூட்டப்பட்ட திரு. சத்தியராஜ்—புரட்சித் தமிழன் சத்தியராஜ் நடிக்கும் 'தந்தை பெரியார்' படத்திற்கு 95 இலட்சம் ரூபாய் இந்த அரசு வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அப்படியானால் இந்தப் படத்தினுடைய உரிமை அரசுக்குச் சொந்தமா, அந்தத் தயாரிப்பாளருக்குச் சொந்தமா என்ற ஒரு கேள்வி எழுகிறது. ஏனென்றால், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிறந்த கதை-வசனகர்த்தா. அவரே தந்தை பெரியாருடன் நெருங்கிப் பழகியிருக்கிறார். அவரே வசனம் எழுதி, என்னுடைய நண்பர் இராம நாராயணன் எடுத்தாலே இந்தப் படத்தை 70 இலட்சம் ரூபாய்க்குள் எடுக்க முடியும். அரசுக்குச் சொந்தமான ஒரு படமாகவும் ஆகிவிடும். நாளையே அதைத் தொலைக்காட்சியிலே வெளியிட்டாலும் அந்தப் பணம் அரசுக்குத் திரும்பி வரும் என்பதுதான் என்னுடைய கருத்து. தனிப்பட்ட ஒரு நபருக்காக இந்த மாதிரிப் பணம் கொடுக்க ஆரம்பிக்கக்கூடாது. இது அரசினுடைய பணம். ஏனென்றால், புரட்சித் தலைவியின் ஆட்சியில் குடியின் தீமையை விளக்கி அரசால் 'நீங்க நல்லா இருக்கணும்' என்ற திரைப்படம் எடுக்கப்பட்டது. அதுபோல, இந்த மாதிரித் திரைப்படங்களை எடுக்கும்போது, அது அரசு செலவிலேயே எடுக்கப் பட்டால் நன்றாக இருக்கும். அதேபோல, திரு. ராஜாஜி அவர்களைப் பற்றியும், அரிஜனங்களுடன் ஆலயப் பிரவேசம் செய்த, மதுரையில் ஆலயப் பிரவேசம் செய்த— திரு. வைத்தியநாத அய்யர் அவர்களைப் பற்றியும் படங்கள் எடுத்தால் அரசு உதவி செய்யுமா என்று தயவு செய்து சொல்ல வேண்டும்.

அரசு அலுவலர்கள் பத்து நாட்கள் செய்த வேலை நிறுத்தத்திற்கு ஊதியத்தோடுகூடிய பணிக்காலமாகக் கருதப்படும் என்று கூறியுள்ளீர்கள், நன்றி. ஆனால் கடந்த முறை இந்தப் பேரவை நடந்தபோது நான் காபி சாப்பிட்டுவிட்டு வந்தேன். அதற்குள் என்னை suspend பண்ணிவிட்டார்கள் என்று சொல்லிவிட்டார்கள். எனக்குப் புரியவேயில்லை. ஏன் காபி

சாப்பிடுவதற்குப் போனதற்கு suspend பண்ணினார்கள் என்று எனக்குத் தெரியவேயில்லை. அதன் பிறகு நடந்த விஷயங்களை நானும் டி.வி.-யிலே பார்த்தேன். டி.வி.-யிலே பார்த்தபோது, குற்றம் செய்யப்படாதவர்கள் தண்டிக்கப்படக்கூடிய சூழ்நிலை இந்த அவையிலே இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து. காரணம் என்னவென்றால், சம்பளம் வந்ததே தவிர, எங்களுக்குப் படிப் பணம் எதுவும் வரவேயில்லை. இது பணத்திற்காகச் சொல்லப்பட வேண்டிய விஷயமே இல்லை. தவறு செய்யாதவர்கள் தண்டிக்கப்படக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. அந்தப் பணத்தை இப்பொழுது எங்களுக்குக் கொடுத்தால்கூட, அதை நான் நம்முடைய ஆலய அன்னதானத் திட்டத்திற்கு வழங்குகிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–10*

இந்த அவையில் அனைத்துச் சான்றோர்கள், ஆன்றோர்களுடைய புகைப்படங்கள் இருக்கின்றன. அங்கே பார்த்தீர்கள் என்றால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய படத்தின்கீழ் 'வரையாது வழங்குவதே வாழ்வின் குறிக்கோள்'. பேரறிஞர் அண்ணா– 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு'. திருவள்ளுவருடையது, அதே சமயத்திலே திரு. ராஜாஜி அவர்கள் —'கூர்ந்த மதியும், பரந்த மனமும் வாழ்க்கை', 'உழைப்பே உயர்வு தரும்'— கர்ம வீரர் காமராஜர், எல்லாமே இருக்கிறது. ஆனால் மகாத்மா காந்தியின் படத்திற்குக்கீழ் எந்த எழுத்தும் இல்லை. இதனுடைய காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. "மறைந்தாலும், மறைத்தாலும் மங்காத புகழ்," அதுபோன்ற வாக்கியத்தை, அல்லது ஏதாவது சரியான, பொருத்தமான வாக்கியத்தைத் தயவுசெய்து நீங்கள் எழுத வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த வாய்ப்பை வழங்கிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. போளூர் வரதன்.

**திரு. ம. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே மூன்றாவது முறையாக வந்து பேசுவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்த எங்களது அருமைத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளினுடைய தலைவர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடு சுதந்திர நாடு என்று சொல்வதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்னாலே வேலூரிலே ஏற்பட்ட சிப்பாய்க் கலகம் முதன்மையானது என்று இந்திய வரலாறு இன்றைக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறது. அந்தப் புரட்சி நினைவாக, இந்த மாதம் 10 ஆம் தேதி அருமை முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள் அங்கே நேரிலே சென்று, அந்த வீர மறவர்களுக்கு வீர வணக்கத்தைச் சொல்லிப் பேசுகின்றபோது, இந்திய நாட்டினுடைய வரலாற்றிலே சுதந்திரத்திற்குப் பாடுபட்ட பெரியவர்களுடைய வரலாறுகள் மறையக்கூடாது, அந்த வகையிலே இதிலே பங்குபெற்ற நிலைமைகள், அந்த வரலாறுகள் வருங்காலத்திலே இந்திய, தமிழகத்தினுடைய இளைஞர்களால் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதற்காகப் பள்ளிகளிலே பாடமாக வைக்க வேண்டும் என்று அறிவித்தார்கள். அதற்காக காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருமைத் தலைவர், கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை 'கல்வி தினம்' என்று அறிவித்து, 'கல்வி வளர்ச்சி நாள்' என்று அறிவித்து, அந்த நிகழ்ச்சியிலே, காங்கிரஸ் கட்சி ஏற்பாடு செய்த நிகழ்ச்சியிலேயும் கலந்துகொண்டு, அரசு விழாவிலேயும் கலந்துகொண்டு தமிழகத்திலே இருக்கின்ற எல்லாப் பகுதிகளிலேயும் இருக்கின்ற பள்ளிகளிலே அந்தப் பெருந்தகையினுடைய சாதனைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று ஆணையைப் பிறப்பித்து, தானே அதிலே பங்கேற்று, பெருந்தலைவர் காமராஜருடைய புகழுக்குச் சிகரம் சேர்த்த ஐயா முதல்வர் அவர்களே, உங்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–15*

அது மட்டுமல்ல, இளம் தலைவராக, உலக நாடுகள் எதிர்பார்ப்போடு வந்து வாழ்ந்த குறுகிய காலத்திலே இந்திய மண்ணிலேயிருக்கின்ற அனைத்துத் தரப்பட்ட மக்களுடைய நெஞ்சங்களிலே நீங்காத இடம் பிடித்து வாழ்ந்து காட்டி திருப்பெரும்புதூரிலே மடிந்த அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி பெயராலே Pilot Centre–ஐ உருவாக்கி நடத்திக் காட்டுவதற்கு ஆணை பிறப்பித்த முதல்வர் அவர்களே, உங்களுக்குத் தமிழக காங்கிரஸ் கட்சி சார்பிலேயும், என் சார்பிலேயும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த பட்ஜெட் உரையின்மீது இப்போது பேசுவதற்கு முனைகிறேன். இன்றைக்கு எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் இந்த

நிதிநிலை அறிக்கையைப் பற்றித் தங்களுடைய கருத்துகளைச் சொன்னார்கள். நான் சொல்ல விழைவது, தேர்தல் காலங்களிலே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள்—வாக்குறுதிகள் என்று சொல்கிறார்கள். நான் அவற்றை அப்படிக் கருதவில்லை. தமிழ் மண்மீது, தமிழக மக்கள்மீது, தமிழகத்திலேயிருக்கின்ற அடித்தட்டிலே இருக்கின்ற மக்களுடைய வளர்ச்சியின்மீது அக்கறை கொண்ட மாமனிதர் கொண்டு வந்திருக்கிற புதிய திட்டங்கள் இவை. எப்படி என்று சொன்னால்— விவசாயிகள், நான்கூட மூன்று முறை ஏற்கெனவே சொன்னேன், இங்கே இருந்தேன் என்று. ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை வருகின்றபொழுது, விவசாயிகளுக்கு இதைச் செய்கிறோம், ஏழைகளுக்கு இதைச் செய்கிறோம், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு நாங்கள் இதைச் செய்கிறோம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இதை நாங்கள் செய்கிறோம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு நாங்கள் இதைச் செய்கிறோம் என்று சொல்வது இயற்கை. வருடத்தினுடைய end–லே பார்க்கின்றபோது அந்தத் திட்டங்கள் எத்தனை சதவீதம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று எண்ணிப் பார்க்கின்றபோது, நிறைவேறாத பட்ஜெட்டாகத்தான் முடிந்திருக்கின்றது. இது தமிழகத்தினுடைய வரலாறு. ஆனால், இன்றைக்குக் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். விவசாயிகளுடைய கடனைத் தீர்ப்பேன் என்று சொல்லி, 6,866 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார்கள். அப்படிச் செய்கின்றபோது காலையிலே பேசிய நண்பர்கள்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், வங்கியிலே நிலத்தை அடகு வைத்து, கட்ட முடியாத நிலையிலே அந்த நிலம் எல்லாம் ஏலம் விடப்பட்டிருக்கிறது, அந்த நிலத்தைத் திருப்பித் தாருங்கள் என்று சொன்னார்கள். நான் மெத்தப் பணிவோடு கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் இட்ட ஆணையின்மூலம் அந்த பட்டாக்களும் இப்பொழுது திரும்பக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுதான் வரலாறு.

அது மட்டுமல்ல, நகைக் கடனைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு இலட்சம் ரூபாய் வரை நகைக் கடனையும் திருப்பிக் கொடுங்கள் என்று, அந்த நகைகளையும் திருப்பிக் கொடுங்கள் என்று ஆணை பிறப்பித்திருக்கிறீர்கள், அது வரலாறா, இல்லையா? வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பது என்பது ஒவ்வொரு விவசாயினுடைய கடமை என்றிருந்தாலும், தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற வறட்சி, மாற்றுச் சூழ்நிலைகள், வறுமை, பல சந்தர்ப்பச் சூழ்நிலைகளிலே விவசாயி



கடன்பட்டிருந்தான். அந்தக் கடனைப் போக்கி, இன்றைக்கு அந்த விவசாயிகள் மன நிம்மதியோடு வாழ்வதற்கு, தன்னுடைய வாழ்க்கைப் பாதையைத் தொடங்குவதற்கு, தாங்கள் எடுத்திருக்கின்ற இந்த முடிவைத் தமிழகத்திலேயிருக்கின்ற ஆறரைக் கோடி மக்களும் இன்றைக்குப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் மனதார. ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்தவன் என்ற காரணத்தினாலே நானும் உங்களைப் பாராட்டுகிறேன்.

இதிலே வேறு ஒரு குறையிருக்கிறது, அதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள், நீண்ட நெடிய அனுபவம் பெற்றவர்கள். தலைவர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் இந்த அவையிலே, என்னுடைய கணக்கு சரியாக இருக்குமானால், 1955–க்குப் பின்னாலே இன்று வரையில் பல்வேறு காலகட்டங்களிலே சட்டமன்ற உறுப்பினர்களாக, அமைச்சராக இருந்தவர்கள், முதல்வராகப் பல முறை இருந்தவர்கள். பல்வேறு காலகட்டத்திலே எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்திருக்கின்றீர்கள். அப்படியிருக்கின்றபோது உங்களுக்குச் சொல்லித் தர வேண்டிய, சொல்லக்கூடிய அளவிலே நாங்கள் இல்லை. உங்களுக்கு அனைத்தும் தெரியும். அந்த நல்லெண்ணத்தோடு சொல்கிறேன்.

கூட்டுறவு வங்கிகளிலே Tractor வாங்கியிருக்கிறார்கள். Poclain வாங்கியிருக்கிறார்கள். Power Tiller வாங்கியிருக்கிறார்கள். அறுவை செய்யக்கூடிய machine வாங்கியிருக்கிறார்கள். நெல் அடிக்கிற machine எல்லாம் வாங்கியிருக்கிறார்கள் அறுவடை செய்வதற்கு. அவை விலை உயர்ந்தவை. அவர்களுக்கும் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். ஆனால் அந்தப் பொருள் வங்கியின்மீதும், தனியார் வாங்குகிறவர்கள்மீதும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதை அரசு அவர்களுக்கே கொடுத்து விடுகிறதா? அல்லது அதை மீண்டும் அந்த வங்கிக்குக் கொடுத்தால் அரசுக்கு வர வேண்டிய பணத்தில் ஒரு குறைந்த percentage பணமாவது வரும். நம்முடைய பட்ஜெட்டிலே, நீங்கள் சொல்லுகின்ற 1,129 கோடி ரூபாய் துண்டு பட்ஜெட் இருக்கிறது. வேறு வழிகளிலே அதைச் சரி செய்வோம் என்பதைச் சொல்லியிருக்கிறீர்கள். அதிலே இந்தப் பணம் சேருமானால் அரசினுடைய நிதிச் சுமை குறைவதற்கு வாய்ப்பாக இருக்குமென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–20*

பேரவைத் தலைவர் அவர்களே,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்று வள்ளுவர் சொல்வதற்கு ஏற்ப, 33 ஆண்டுகளுக்கு முன்பு நான் என்னுடைய கல்லூரியிலே, மாநிலக் கல்லூரியிலே, ஒரு மாணவரைப் பார்த்தேன். அன்றைக்கு அவரிடத்திலேயிருந்த விறுவிறுப்பு, சுறுசுறுப்பு என்பது, வேகம், விவேகம் என்பது, அன்றைக்கு நான் பார்த்த அந்த உருவம் இன்றைக்கு இந்த அவையிலே உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சராக அமர்ந்து, தமிழகத்திலே இருக்கின்ற இளைஞர்களுடைய உள்ளங்களிலே இன்றைக்கு ஒரு எழுஞாயிறாக விளங்கிக்கொண்டு, தமிழக நிர்வாகத்திலே இன்றைக்குப் பல துறைகளை ஆய்ந்து, அலசிப் பார்க்கின்ற ஒரு இடத்திலே என்னோடு படித்த ஒரு மாணவர் இங்கே இருக்கிறார் என்று சொன்னால், நான் பெருமைப்படுகிறேன். கலைஞர் அவர்களே, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அவர் சென்னை நகரத்தினுடைய மேயராக இருந்தபொழுது மேம்பாலங்களைக் கட்டினார்கள். அப்படிக் கட்டுகின்றபொழுது குறைகள் சொன்னார்கள். இந்த அவையிலேயும், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அந்த மேம்பாலங்கள் கட்டியதன் விளைவு, இன்றைக்குச் சென்னை நகரத்திலே ஏற்பட்டிருக்கின்ற சாலைப் போக்குவரத்தினுடைய நெரிசல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அவர்கள் உள்ளாட்சித் துறையிலே பொறுப்பு வகிக்கிறார்கள்.

இங்கே நிதிநிலையிலே சொல்லுகின்றபொழுது, சென்னை நகரத்திலே ரூ. 279 கோடி என்று எண்ணுகிறேன். அதே மாதிரி, மதுரை, திருச்சி போன்ற பெரிய நகரங்களுக்குப் பண ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம் ஒன்றுதான். ஒரு நல்ல மனிதரிடத்திலே, திறமையான ஒரு இளைஞரிடத்திலே அந்தப் பொறுப்பை நீங்கள் ஒப்படைத்திருக்கிறீர்கள். வரும் முன் காப்போம் என்பதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை நாம் அவருக்குச் சொல்ல வேண்டியதில்லை. ஏற்கெனவே, சென்னையை எழில்மிகு சென்னை நகராக மாற்றிக் காட்டி இந்த அவையிலே இன்றைக்கு அலங்கரித்துக்கொண்டிருக்கிறார்கள் சிறப்புமிக்க ஒரு இளைஞர். இன்றைக்கு நாம் குடிநீர் என்று சொல்லுகின்றபொழுது, பல காலகட்டங்களிலே, பல ஆட்சி மாற்றத்திலே குடிநீர், குடிநீர் என்று கோடிக்கணக்கான பணங்களை கொட்டியளித்திருக்கிறோம். தண்ணீர்



கிடைத்ததா என்றால், இல்லை என்ற ஒரு நிலை மாறி, அவர் என்றைக்குச் சென்னை நகரத்தினுடைய மேயராக வந்தார்களோ, அன்றைக்கே, வெள்ளைக்காரன் போட்டான் பாருங்கள், drainage, அதை மாற்றியிருக்கிறார்கள். 12 இலட்சம் பேர் வாழ்ந்த சென்னை நகரத்திலே அன்றைக்குத் திட்டம் அது. இன்றைக்கு 60, 70 இலட்சம் பேர் வாழ்கின்ற காலத்திலே இருக்கிற அந்த drainage–ஐ மாற்றுகின்ற பிளானைக் கொண்டு வந்த மேயர் அவர்கள். இன்றைக்கு அவர்களிடத்திலே அந்தப் பொறுப்புகள் இருக்கின்றன. ஆகவே சொல்கின்றேன், மழைக் காலங்களிலே பெருநகரங்களில் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அன்றைக்கு நாம் நடவடிக்கை எடுக்கிறோம். அவற்றை மாற்றி, நிரந்தரமாக, மழைக் காலங்களாக இருந்தாலும் சரி, வேறு பாதிக்கின்ற காலங்களாக இருந்தாலும் சரி, பெருநகரங்களிலே குடிநீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி, drainage வசதி, போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, பள்ளி, கல்லூரிகள் வசதிகள் என்று எல்லா வசதிகளையும் உருவாக்குகின்ற திறமை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே இருக்கிறது. அதை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையை இன்றைக்கு அந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் வைத்திருக்கின்றார்கள்.

இந்த நாட்டினுடைய, இந்த மாநிலத்தினுடைய முழு நிர்வாகம் என்பது உள்ளாட்சித் துறையிலே இருக்கிறது. உள்ளாட்சித் துறை சிறப்பாகப் பணியாற்ற வேண்டும். அந்தத் துறை மக்களுக்குச் சேவை செய்கின்ற இடத்திலே இருக்கிறது. காலையிலே பல்வேறு துறைகளிலே, பல்வேறு நிலைகளிலே பல்வேறு நலத் திட்டங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அலசிப் பார்த்தார்கள். அது அத்தனையும் எங்கே வருகிறது? உள்ளாட்சித் துறையிலே வருகிறது. அந்த உள்ளாட்சித் துறையிலே பலர் அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள், பல்வேறு பெரியவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களிடமெல்லாம் இல்லாத ஒன்றை நம்முடைய தளபதியிடத்திலே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை இன்றைக்கு மக்கள் மத்தியிலே இருக்கிறது.

*பிற்பகல் 1–25*

ஒன்றைச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் காலங்களிலே பல தலைவர்கள், பல கட்சித் தலைவர்கள் சுற்றுப் பயணம் செய்தார்கள். அப்படி இருக்கின்றபோது, தமிழகத்திலே

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்ற இடங்களிலே இருந்த ஒரு எழுச்சியை நாம் பார்த்திருக்கிறோம். அந்த எழுச்சி எதனால் வந்தது? மக்களுடைய எதிர்பார்ப்பு. வளர்ந்து வருகின்ற ஒரு இளம் தலைவரிடத்திலே மக்கள் எதிர்பார்ப்பது இயற்கை. ஆகவேதான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழகத்தினுடைய பொறுப்புகள், சக்தி வாய்ந்த பொறுப்புகள் இன்றைக்கு அவரிடத்திலே இருக்கின்றன. அவர்கள் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். நேரம் அதிகமாகிவிட்டது, நேரம் இல்லை. அதனால் மற்றவற்றைக் குறைத்துக்கொள்கிறேன்.

காலையிலே நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, இரண்டு விஷயங்கள் பற்றிச் சொன்னார்கள். செங்கோட்டை செக்போஸ்ட், திருநெல்வேலி மாவட்டத்தில். 1967—க்குப் பின்னால் முன்னாள் அமைச்சர், மறைந்த மாண்புமிகு மதியழகன் முதல் இன்று வரை நிறைய Food Ministers இந்த அவையிலே இருந்திருக்கிறார்கள். யாராவது ஒரு மந்திரி போய் raid பண்ணினார், கடத்திய லாரியைப் பிடித்தார், கண்டித்தார் என்று சொல்ல முடியுமா? இன்றைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் வேலு அவர்கள் செங்கோட்டை செக்போஸ்டிலே போய், night ஒரு மணிக்கு, கேரளாவிற்குக் கடத்தப்பட்ட அரிசியைப் பிடித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே விளம்பரம் வருகிறது. எப்படி வருகிறது? ஒரு அமைச்சர் பிடித்தார் என்று வருகிறது. அது தவறா? அதுவல்ல. சரி, அதை அப்படியே தவறு என்று வைத்துக்கொண்டாலும், வேலூரில் 100 பேர் கூட்டுக் குடும்பமாக வாழ்கின்ற ஒரு கட்டடத்தின் இரண்டாவது மாடியில் 1,000 லிட்டர் kerosene பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது நாம்கூட எம்.எல்.ஏ.க்கள் போய் கடைகளில் பார்க்கிறோம். அரிசி போட்டாயா, அது இருக்கிறதா, இது இருக்கிறதா என்று கேட்கிறோம். ஆனால் ஒரு அமைச்சர், இரண்டாவது மாடிக்குப் போய் 1,000 லிட்டர் kerosene பதுக்கி வைக்கப்பட்டிருப்பதைப் பிடித்து, அதை மக்கள் மத்தியில் காட்டி, வழக்குத் தொடர்கிறார் என்று சொன்னால், ஒரு சரியான ஆளை, (மேசையைத் தட்டும் ஒலி) சரியான பொறுப்பில், சரியான இடத்தில் கலைஞர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள் என்பதுதானே உண்மை? கடந்த காலங்களில் இவ்வாறு நடவடிக்கை இல்லாததனால் ஜனங்களுக்குத் தெரியவில்லை. இப்போது நடவடிக்கை வருகிறது, பத்திரிகையில் செய்தி



வருகிறது, கடத்தலைத் தடுக்கிறோம், ஆகவே செய்தியாக வருகிறது. இது மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதற்கு என்ன பண்ண முடியும்? மக்களுடைய தேவைகள். தவறு யார் செய்கிறார்கள்? நான் சொல்கிறேன், 71 நாட்களில் புதிய கடத்தல்காரர்களை உருவாக்கி, புதிய set-up-ஐ உருவாக்கி யாருமே கொண்டு வந்துவிட முடியாது. அந்தக் கடத்தல்காரர்கள் யார் ஆட்சிக்கு வந்தாலும் கடத்தல் தொழிலைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுக்கு யார் உடந்தை? அமைச்சரா, சட்டமன்ற உறுப்பினர்களா? இல்லையே! அதிகாரிகளில் சிலர் கடத்தல் தொழில் செய்வதற்கென்றே இந்தத் துறையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கண்டிக்க வேண்டும், தண்டிக்க வேண்டும் என்பதற்காக அமைச்சர் முனைந்தால், இந்தத் துறையில் அரிசி கடத்தப்படுகிறது என்று விளம்பரம். வேண்டுமானால் பேசிவிட்டுப் போகலாம். நிலை என்ன? நிர்வாகத்தினுடைய நிலைமையிலே, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் நடவடிக்கையை இந்த அரசு எடுக்கிறதா, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மேலும் தன்னுடைய உரையை நாளை தொடரலாம். (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** இல்லை. நாளைக்கே நான் பேசிவிடுகிறேன். எனக்குக் கொஞ்சம் நேரம் வேண்டும். (குறுக்கீடு) இல்லை. எனக்கு 15 நிமிடங்கள்கூட கொடுக்கவில்லை. மன்னிக்க வேண்டும். முதலிலே பேசியவர்களுக்கு half-an-hour கொடுத்திருக்கிறீர்கள். நான் ஒரு senior member. 15 நிமிடங்கள்கூட ஆகவில்லை. நான் நாளை பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-07-2006) செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2006 ஜூலை 24

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1970 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிப் பணிகள் (வகைப்படுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் மேல்முறையீடு) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 3-4-2006 ஆம் நாளிட்ட 39 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (டி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2006).

2. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2006).

3. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2006).

4. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2006).

5. 2006-2007 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 56 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள். (திருத்திய நிதிநிலை) (55 புத்தகங்கள்) (கோரிக்கை எண் 52 தவிர).

6. 2006-2007 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள். (திருத்திய நிதிநிலை)

7. 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை. (திருத்திய நிதிநிலை)



2006 ஜூலை 24]

8. 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு-பகுதி-1. (திருத்திய நிதிநிலை)

9. 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு-பகுதி-2. (திருத்திய நிதிநிலை)

10. 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள். (திருத்திய நிதிநிலை)

11. 2006-2007 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம்-வரவு-செலவுத் திட்ட இணைப்பு) (2006-2007 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு). (திருத்திய நிதிநிலை)

12. 2006-2007 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி-2 திட்டங்கள்). (திருத்திய நிதிநிலை)

13. 2006-2007 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள். (திருத்திய நிதிநிலை)

14. 2006-2007 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல். (திருத்திய நிதிநிலை) (தமிழ், ஆங்கிலம்.)

15. 2006-2007 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்

16. 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்த நிதி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

தமிழ்நாடு ... காப்பகம்
227379
சென்னை-600 008
நூலகம்